# தமிழரசு

நவம்பர் 2004




தமிழக சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும்
வனத்துறையினரைப்
பரிசுகள்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
ஐப்பசி – கார்த்திகை
மலர்:36 இதழ்: 5
நவம்பர் 2004
விலை ரூ.10


இந்த இதழில்...


★ தமிழ்நாடு, வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்பை விரிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது (மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களின் உரை) ..... 2

★ புதிய பொற்காலத் தமிழகத்தை நான் உருவாக்கியே தீருவேன் (தமிழ்த் திரைப்படத் துறையினர் நடத்திய பாராட்டு விழாவில் மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களின் உரை) ..... 9

★ சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு ..... 15

★ புது வடிவம் பெற்றுள்ள மெரீனா நீச்சல்குளம் ..... 17

★ மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குப் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் ..... 19

★ தமிழக காவல்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள் ..... 21

★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி ..... 24

★ வேளாண் அறிவியல் தமிழ் இதழ்கள் ..... 25

★ தருமபுரி மாவட்டத்தில் உயிர்த்தெழும் பயிர்த்தொழில் ..... 29

★ டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ..... 33

★ தமிழ்நாடு காவல்துறை இந்தியாவிலேயே இணையற்ற காவல்படை (மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களின் உரை) ..... 37

★ கண் பாதுகாப்பு ..... 47

★ அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்களுக்குச் சலுகைகள் ..... 49

★ சேலம் மாநகராட்சி – பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்பு அகற்றம் ..... 55

★ போலியோவை ஒழிக்க அரசு நடவடிக்கை ..... 57

★ நீலகிரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள் ..... 59

★ மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகள் ..... 62

★ புதிய வடிவமைப்புடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரக சேலைகள் விற்பனை ..... 65

★ ஆண்டிபட்டியில் ரூ.74 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ..... 69

★ விருதுநகர் மாவட்டத்தில் மீன்வள மேம்பாடு ..... 71

★ வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாழ்க்கை மேம்பட மாற்றுப் பயிர்த் திட்டம் ..... 73

★ உலகெங்கும் தமிழோசை ..... 75

★ இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒய்வூதியம் ..... 77

★ தமிழர் நாகரிகத்தில் தகவல் தொடர்பு அறிவியல் சாதனங்கள் ..... 79


## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை** : தமிழக ஆளுநராக மேதகு திரு. எஸ். சுர்ஜித் சிங்பர்னாலா அவர்கள் பதவியேற்பு (3.11.2004)

**இரண்டாம் பக்க அட்டை** : அதிரடிப்படையினருக்குப் பாராட்டு விழா

**மூன்றாம் பக்க அட்டை** : பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி

**நான்காம் பக்க அட்டை** : பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்தநாள் விழா.


*ஆசிரியரும் வெளியிடுபவரும்:* **வ. கனகராஜ்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com




# தமிழ்நாடு, வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்பை விரிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

இந்தியாவின் கிழக்கு நுழைவு வாயிலாகத் திகழும் சென்னை மாநகரில், இன்று, **3–வது** இந்தியா – 'ஏசியன்' வர்த்தக மாநாடு கூட்டப்பட்டுள்ளதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியத் தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பும், இந்தியத் தொழில் கூட்டமைப்பும், மத்திய வெளியுறவுத் துறை, வர்த்தகம் – தொழில்துறை மற்றும் தமிழக அரசு ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக் கிடைத்த இந்த வாய்ப்பினை எனக்குக் கிடைத்த ஒரு பேறாக நான் கருதுகிறேன். முதற்கண், கீர்த்திமிகு மாநிலமாம் தமிழ்நாட்டில் ஏற்றமிகு சென்னை மாநகரில் இன்று **(20.10.2004)** நடைபெறும் இம்மாநாட்டில் பங்கேற்க வருகை புரிந்துள்ள அனைத்துப் பேராளர்களுக்கும் 'ஏசியன்' கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளின் அமைச்சர் பெருமக்களுக்கும் எனது வணக்கங்களைத் தெரிவித்து உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

இந்தியாவிற்கும்–ஏசியன் நாடுகளுக்குமிடையிலான உறவு மேம்பட்டு பரஸ்பர பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிற இத்தருணத்தில் இந்த மாநாட்டில் முக்கிய உரை நிகழ்த்த நான் அழைக்கப்பட்டுள்ளேன். இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி, அதிலும் குறிப்பாக, தொடர்ச்சியான பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்தேன். அவ்வாறு சிந்தித்தபோது, தற்போதைய புதிய உலக சூழலில் பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை பற்றிய கருத்து திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு

வருவது என்னை வெகுவாகக் கவர்ந்தது. ஒரு காலத்தில், இந்தியா தன்னிடமுள்ள அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்டு, மற்ற நாடுகளுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளாப் போக்குடன் ஒரு கூட்டுப்புழு போல தனித்து இருந்து விடலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கு இப்போக்கு மாறிவிட்டது. முதல் நிலை சீர்திருத்தங்கள் என்று சொல்லப்படுகிற தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலமாக இந்தியா, 1991ஆம் ஆண்டிலிருந்து உலகப் பொருளாதாரத்துடன் தன்னை இணைத்துக் கொண்டது. உள்ளபடியே இது ஆச்சரியத்திற்குரிய ஒரு திடீர் மாற்றம்தான். இதைக் கண்ட சிலர் இந்தியாவிற்கு ஏதோ அழிவு காலம் தொடங்கிவிட்டதென ஆருடம் கணித்தனர். அவற்றைப் பொய்யாக்குகின்ற வகையில் மிகக் கடுமையான நிலையிலும் எந்த அதிரடியான மாற்றத்திற்கும் தங்களை ஈடு கொடுத்து அதை உள்வாங்கிக் கொண்ட இந்திய மக்களின் ஒப்பற்ற தன்மை போற்றுதலுக்குரிய ஒன்றாகும்.

பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் இந்தப் பின்னணியில்தான் 'ஏசியன்' நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே வளர்ந்துவரும் உறவை மேலும் வலுப்படுத்துவதற்காக புதிய கூட்டணிகளை உருவாக்கவும் புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும் இன்றைக்கு நாம் இங்கே கூடியுள்ளோம். 'ஏசியன்' நாடுகள் மற்றும் இந்தியாவின் பாரம்பரியமும், கலாச்சாரமும், எப்போதுமே இவற்றிற்கிடையே வலுவான பிணைப்புக்குக் கட்டியம் கூறிவந்துள்ள போதிலும், இந்நாடுகளுக்கிடையிலான இந்தப்பரஸ்பர சார்புத் தன்மைக்குப் புத்துருவாக்கம் அளிக்க வேண்டியிருப்பது உள்ளபடியே ஒரு வரலாற்று விபத்தே என்பது கருத்தாகும். இதற்கு தமிழ்நாடு ஒரு சரியான எடுத்துக்காட்டு ஆகும். ஒரு கடற்கரை மாநிலம் என்ற முறையில், ஏசியன் நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த பாரம்பரியம் தமிழ்நாட்டுக்கு உண்டு. இந்தப் பாரம்பரிய உறவை அடித்தளமாகக் கொண்டு, பல நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட இவ்வுறவுக்கு நாம் புதிய வலு சேர்க்க வேண்டும். இந்த மாநாடு, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர சார்பு நிலையை நோக்கிய புதிய பயணத்தில் குறிப்பிடத் தகுந்ததொரு மைல் கல்லாக விளங்குகிறது.

நம்மிடையே காணப்படும் பொதுவான தன்மை என்ன? முதலாவதும், முக்கியமானதுமான அம்சம், புவியியல் அமைப்புதான். நாம் எல்லோரும் ஆசிய–பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, நாம் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் எழுகிறது. இந்தியாவும் ஏசியன் நாடுகளும் உலகத்தின் பெரும்பான்மையான மதங்களை உள்ளடக்கிய, பலதரப்பட்ட கலாச்சார செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட தம்முடைய சமூக அமைப்பின் பன்முகத் தன்மையை அங்கீகரிக்கின்றன. நமக்குப் பழக்கப்பட்ட ஆசிய வழியில் நமது மக்களின் நாட்டங்களைப் புரிந்து கொள்வதில் நம்மிடையே ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. நமது மக்களுக்கு உயரிய வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட, நவீன, அதே நேரத்தில் நாம் மிகவும் நேசிக்கின்ற பண்புகளையும் கலாச்சாரத்தையும் கட்டிக் காக்கிற சமூகம் ஒன்றை உருவாக்கித் தருவதே நமது பொதுவான கொள்கையாக உள்ளது. ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே உரித்தான இந்த தனித் தன்மையும் பண்பாடும்தான், உண்மையிலேயே நம் எல்லோரையும் பிணைக்கும் ஒரு சக்தியாக விளங்குகிறது. இந்தப் பண்பு நமக்கிடையே உறவை மேலும் ஆழப்படுத்துவதோடு அதற்கு ஒரு உயிர்த்துடிப்பையும் அளித்து வருகிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நம்முடைய இந்தப் பாரம்பரிய மற்றும் பண்பாட்டுப் பின்னணி, ஆசியப் பண்புகளின் அடிப்படையிலான நவீன சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற பொதுவான குறிக்கோள்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான பாதையில் நமக்கிடையேயான பொருளாதார உறவுகளும் ஒத்துழைப்பும் வெற்றிநடை போட வேண்டும். 10 தெற்காசிய நாடுகளில் வாழும் இந்திய வம்சா வழியைச் சேர்ந்த 3 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் புதிய உறவுப்பாலம் அமைக்கும் தூதுவர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஏற்கெனவே புதிய இணைப்புகளை ஏற்படுத்தி பரஸ்பர சார்புத் தன்மையின் அவசியம் பற்றிய செய்தியைப் பரப்பி வருகிறார்கள். இதனை அடித்தளமாகக் கொண்டு அவ்வுறவை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும். இதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. நெடுங்காலம் வெவ்வேறு பாதைகளில் பயணித்த நம்மிடையே தற்போது ஒரு புதிய கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ள நிலையில், நம்மிடையே உறவு வலுப்படுவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. நம்மிடையே வணிக மற்றும் வியாபாரத்தொடர்புகள் பெருகும்போது, பொருளாதார நடவடிக்கைகள் பெருகுகின்றன. இவை வெற்றிக்கான உறுதியான வழித்தடம் அமைக்கின்றன. தடையற்ற வணிகம் மற்றும் வர்த்தகத்தால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டின் பயன்கள், எவ்விதச் செலவுமின்றி கிராமப்புற மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தடையற்ற வர்த்தக மற்றும் பரஸ்பர சார்புத் தன்மையை மேம்படுத்துவதற்கான சிந்தனையின் மையக் கருத்து இதுவேயாகும்.

இந்தியாவுக்கும் ஏசியன் நாடுகளுக்குமிடையிலான உறவை, ஏற்கெனவே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில் மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. இந்நாடுகளுக்கிடையே தற்போது சுமார் 13 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருவழி வர்த்தகம் நடைபெற்று வருகிறது. ஆண்டொன்றுக்கு, ஒன்றரை டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்து வருகின்ற, மொத்தம் 1.5 மில்லியன் மக்களால் உருவாக்கப்பட்டுள்ள பெருத்த வாய்ப்பு வளத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, இது போதுமானதாகத் தோன்றவில்லை.

வர்த்தகத்தைப் பெருக்கி வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. இதற்குச் சிறந்த வழி, வர்த்தக சபைகளுடன் முனைப்புடனும் அர்த்தமுள்ள வகையிலும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வியாபாரக் குழுக்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதுதான். இதுபோன்ற உயர்நிலை மாநாடு நமது ஒட்டுமொத்தச் செயல்பாடுகளை மறு ஆய்வு செய்து புதிய செயல்திட்டங்களை வகுக்க நல்லதொரு வாய்ப்பை உருவாக்கித் தருகிறது.

ஏசியன் நாடுகளும் இந்தியாவும் வர்த்தக பங்குதாரர்களாக விளங்குவதைக் கருத்திற்கொண்டு, தடையற்ற வர்த்தக ஏற்பாடுகள் உள்ளிட்ட பரஸ்பர எளிமைப்படுத்த வேண்டும். நாம் ஒருவரோடொருவர் ஒருங்கிணைந்து இணக்கமாகச் செயல்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த வணிகர்கள், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மியான்மர் மற்றும் 'ஏசியன்' பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் தொழில் உறவுகள் வைத்துள்ளது அனைவரும் அறிந்ததே. இந்தியாவிற்கும் இந்த நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவு மிகவும் பிரபலமான ஒன்று. இப்பிராந்தியத்தில், வர்த்தகம் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்த இது போன்ற உறவுகள் புதுப்பிக்கப்பட வேண்டும். இதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன என்பது என்னுடைய கருத்தாகும். இதற்கு உதாரணமாக, தமிழ்நாட்டிலும், தாய்லாந்திலும் உள்ள சர்க்கரைத் தொழிலைக் கூறலாம். நெருங்கி ஒருவரோடொருவர்




சார்புடைமையை மேம்படுத்துவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் நாம் ஆராய வேண்டியது அவசியமாகிறது. இந்த அடிப்படையில்தான், இந்தியா ஏசியன் நாடுகளுக்கிடையிலான தடையற்ற வர்த்தக உடன்படிக்கையும், பரஸ்பரம் உடன்பாட்டின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்ட இனங்களுக்கு வரிச்சலுகை, வரி நீக்கம் ஆகியவற்றிலும் வகை செய்யப்பட்டுள்ளது. பழைய நடைமுறைகள் மாறி தடையற்ற வர்த்தகக் காற்று வீசத் தொடங்கும்போது சில அச்சங்களும் ஐயுறவுகளும் எழுவது இயல்பே. நமது மதிநுட்பத்தைப் பயன்படுத்தி இத்தகைய அச்ச உணர்வுகளைப் போக்கி இந்தப் பிராந்தியத்தில் தடையற்ற வர்த்தகத்திற்கான வாய்ப்பைப் பெருக்குகின்ற வகையில் நடைமுறைகளைச் சீரமைத்து இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி அந்தந்தப் பிராந்தியத்தில் நமது செயல்பாட்டை, நாம் மேலும் மேம்படுத்திக் கொள்ள முடியும். பொறியியல் மற்றும் மூலதனப் பொருட்களில் வலுவான நிலையிலுள்ள தமிழ்நாடு, புதிய முயற்சிகளுக்கு நிச்சயமாக ஆதரவு அளிக்க முடியும். நாம் இணைந்து உயிரி எரிபொருள் துறையிலுள்ள சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராயலாம். சர்க்கரைத் தொழிலைச் சீரமைப்பதிலும் நாம் இணைந்து பணியாற்றலாம். இதே போன்று மோட்டார் வாகன உதிரி பாகங்கள், தோல் பொருட்கள் துணித் தொழில் முதலியவற்றிலும் நாம் இணைந்து பணியாற்ற நல்ல வாய்ப்பு உள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பிரமாண்டமான வளர்ச்சி கண்டுள்ள இந்தியா – ஏசியன்

நாடுகளின் தேவைகளை நிறைவு செய்ய இயலும். உண்மையிலேயே இவ்வாறாக பரஸ்பரம் ஒருவரோடொருவர் இணைந்து வினையாற்றுவதன் வாயிலாக அனைவருக்கும் நல்ல வாய்ப்பு உருவாக்க முடியும். இருந்தாலும் கிராமப்புற பொருளாதார வளர்ச்சி பாதிப்படையாத வகையில், நாம் இந்த வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு கவனத்துடன் செயல் வடிவம் கொடுக்க வேண்டும்.

அடுத்து, எனது நெஞ்சுக்கு நெருக்கமான கருத்துக்கு வருகிறேன். அனாடலி பிரான் "நாம் கனவு காணாவிட்டால் நமது வாழ்வே தாங்கவொண்ணாத தாகிவிடும்" என்று ஒருமுறை கூறியதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் தமிழகத்தை இந்நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக மாற்ற வேண்டுமெனக் கனவு கண்டு வருகிறேன். அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டு நம்முடைய மக்கள் வளமுடன் வாழவேண்டுமென்றும் நான் கனவு கண்டு வருகிறேன்.

நான் கனவு காணத் துணிந்த காரணத்தால் இன்றைக்கு என்னுடைய இரண்டு கனவுகள் நனவாகி இருக்கின்றன என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கனவுகளின் விளைவான என்னுடைய இரண்டு திட்டங்களும் ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை என்று எல்லோருமே கூறி வந்தனர். அதில் ஒன்று, 'வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம். மற்றொன்று, பயங்கர காட்டுக் கொள்ளையன் வீரப்பனை பிடித்து தீர்த்துக் கட்டும் திட்டம். அனைத்து அரசியல் கட்சிகள், அரசியல் விமர்சகர்கள், பட்டறிவு இல்லாது படிப்பறிவு மட்டுமே கொண்ட விமர்சகர்கள், ஊடக நபர்கள் அனைவருமே இது நடக்காது; வீராணம் குடிநீர் சென்னை நகரை வந்தடையாது; வீரப்பன் பிடிபடமாட்டான் எனக் கூறினர். இந்த இரண்டு திட்டங்களையும் நான் வெற்றிபெறச் செய்துள்ளேன். வீராணம் திட்டம் மூலம் சென்னை மாநகருக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நான் வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளேன். தற்போது சென்னை மாநகரில் வாழ்கிற 7 மில்லியன் மக்களுக்குத் தினந்தோறும் வீராணம் குடிநீர் வழங்கப்படுகிறது. நேற்றைக்கு முன் தினம்தான் நம்முடைய சிறப்பு அதிரடிபடையினர் சமுதாயத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக இருந்து வந்த பயங்கரவாதி வீரப்பனைப் பிடித்து ஒழித்து கட்டுவதில் வெற்றியடைந்துள்ளனர் என்பதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். எனவே எனக்குக் கனவு காணும் துணிவிருந்த காரணத்தால், என்னுடைய இரண்டு கனவுகள் நனவாகியுள்ளன. தமிழ்நாடு மேம்பட என்னுடைய மற்ற கனவுகளும் இனிவரும் காலங்களில் மெய்ப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

1991ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதையடுத்து நான் தமிழக முதலமைச்சராக இருந்த 1991 முதல் 1996 வரையிலான காலக் கட்டத்தில் தமிழ்நாடு அதிவிரைவாக வளர்ச்சி அடைந்ததால், இல்லாமை கணிசமாகக் குறைந்தது. மனிதவள மேம்பாட்டுக் குறியீடும் உயர்ந்தது. 1990ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் இவ்வளர்ச்சி வேகம் குறைந்தது. அதனைத்தொடர்ந்து, அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினால் பொருளாதாரம் மிகவும் பாதிப்படைந்தது. துணிச்சலான, புதிய பொருளாதாரக் கண்ணோட்டத்தில், பொருளாதாரத்திற்கு நான் புத்துயிரூட்ட வேண்டியிருந்தது. சில கொள்கை சீர்திருத்தங்கள் வாயிலாக இதனைச் செய்துமுடிக்க நான் விரும்புகிறேன். மீண்டும், தமிழ்நாடு, வெளிநாடுகளுடனான வர்த்தகத்தொடர்பை விரிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. தமிழ்நாடு கடற்கரை மாநிலமாக இருப்பதால் இது இயல்பாகவே நடைபெற்று வருகிறது. வேளாண்மை வளர்ச்சிக்குப் புத்தெழுச்சி ஊட்டுதல், தயாரிப்பு மற்றும் சேவைத் துறைகளில் முதலீட்டுச் சூழ்நிலையை மேம்படுத்துதல், நிதி நிலையைச் சீர்படுத்தி நிலைப்படுத்துதல், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, வறுமை நிலைமையைக் குறைப்பதை உறுதிப்படுத்துதல் ஆகியன, இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளில் அடங்கும். இது சுலபமல்ல என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், தமிழ்நாட்டின் நீண்ட கால வளர்ச்சிக்கு இது மிகவும் இன்றியமையாதது என்பதால் இதனைத் தெளிவாக உணர்ந்தே தமிழ்நாட்டுக்காக இப்புதிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன்.

என்னுடைய இந்தக் கனவை நனவாக்கும் முயற்சியாக என்னுடைய அரசு புதுமையான பலகொள்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்படுத்தத் தொடங்கியுள்ளது. மக்கள் தொகை மிகுந்த இந்தியாவில் முதன்மைத் துறையில், குறிப்பாக, வேளாண்மைத்துறையில் அனைத்து வகையிலும் வளர்ச்சியடைந்தால்தான், தொழில் துறையில் வளர்ச்சி அடைய இயலும். தமிழ்நாட்டில் ஒரு வகையான பல் திறப்பட்ட வேளாண் தட்பவெப்ப நிலைகள் நிலவுகின்றன. இங்கு, கனிகளும் காய்கறிகளும் அபரிமிதமாக விளைகின்றன. இங்குள்ள பெருமளவிலான வேளாண் ஆதார வள வாயில் 'ஏசியன்' நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற அதிக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழிலில் நாங்கள் முதலீடுகளை வரவேற்கிறோம். நாங்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக பல புதிய அங்காடிகள் திறந்து விடப்பட்டிருப்பதால், இங்கு வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இப்புதிய வாய்ப்புகளை உங்கள் முதலீட்டுத் திட்டங்களுடன் இணைத்துப் பயன் பெறுவது தொழில் அதிபர்களான உங்கள் கையில் தான் உள்ளது.

தயாரிப்புத் துறையில் விரைவான வளர்ச்சியை எட்டுவதற்காக, என்னுடைய அரசு இரண்டாம் நிலை சீர்திருத்தத்திற்கான தொகுப்புத் திட்டங்களைச்

செயற்படுத்த உறுதி பூண்டுள்ளது. விரைவான அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடு, தரமான எரிசக்தி வழங்குவதை உறுதிசெய்தல், கால அளவு மற்றும் செலவைக் குறைக்க கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், தொழிலாளர் நலச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் ஏற்கெனவே உள்ள தொழிலாளர்களுக்கு மறுபயிற்சி அளித்து அவர்களின் இயக்காற்றலை மேம்படுத்துதல், மாநில அளவிலான வரிச் சீர்திருத்த நடைமுறைகளை எளிமையாக்குதல் ஆகியவை இவற்றில் அடங்கும். **2003** ஆம் ஆண்டு புதியதொழில் கொள்கையை நான் அறிவித்ததன் நோக்கம், உலக அளவிலான ஒரு தயாரிப்பு மையம் என்ற முறையில் தமிழ்நாட்டின் போட்டித் திறனை வலுப்படுத்தவேண்டும் என்பதேஆகும். இந்த இலக்கை எய்துவதற்கான தெளிவான நடைமுறைத் திட்டங்கள், இந்தக் கொள்கை அறிவிப்பில் இடம்பெற்றுள்ளன. தயாரிப்புத் துறையில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று என்ற ஒரு செய்தியை இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் **(CMIE) 2004**, ஜூலை வெளியீடு வெளியிட்டுள்ளது. **2004** ஆம் ஆண்டு ஜூலை இறுதி நிலவரப்படி, தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடுகள் ரூ.**1,38,151/–** கோடியாக இருந்தது. இந்நாட்டில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடுகளில் **8.4** சதவிகிதம் ஆகும். வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னிலை வகிக்கும் மூன்று இந்திய மாநிலங்களிடையே தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. உலக வங்கி ஃபோர்டு, ஹூண்டாய், செயின்ட்கோபன், ஸ்டேன்சார்ட், ஏபிஎன் அம்ரோ வங்கி, சான்சா முதலியவை நடத்திய மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகளின்படி, தமிழ்நாடு, தொழில் தொடங்க விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தயாரிப்புத் துறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. சென்னை மாநகரம், தெற்காசியாவின் டெட்ராய்ட்–ஆக உருவெடுத்து வருகிறது. பயணிகள் சீருந்து தயாரிக்கும் ஃபோர்டு நிறுவனம் அதன் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு தமிழ்நாட்டைத் தெரிவு செய்துள்ளது. தென்கொரிய சீருந்து தயாரிப்பு நிறுவனமான "ஹூண்டாய்" நிறுவனம், ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்கா அங்காடிகளுக்குச் சீருந்துகளை ஏற்றுமதி செய்வதற்காக சென்னையில் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவியுள்ளது. தற்போது, தமிழ்நாடு, **251** பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில் **2,621** வெளிநாட்டு நிறுவனங்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டு வரும் ஒரு மாநிலமாக விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் சிறப்புகள் குறித்த சில விவரங்கள் உங்களுக்குச் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு, முதலீடு மற்றும் வர்த்தகத்திற்கு ஏற்ற மிகச் சிறந்த இடம் தமிழ்நாடு தான் என்பதனை இந்த விவரங்கள் உங்களுக்குத் தெளிவுபட உணர்த்தும். சிறப்பான சட்டம் ஒழுங்கு பராமரிப்பு – என்ற வகையில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது.

- விழுமிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்
- இந்தியாவிலேயே மிக அதிகமான திறமைமிகு மனிதவள ஆற்றல்.
- தயாரிப்புத்துறை, தகவல் தொழில் நுட்பம், உயிரி தொழில் நுட்பம், வர்த்தகம் மற்றும் வணிகத் துறைகளில் இயல்பாய் விளங்கும் வலிமை.
- நீண்ட கால வளர்ச்சியை நோக்கமாக் கொண்ட தெளிவான பொருளாதார தொலைநோக்கு
- மூன்று மிகப் பெரிய துறைமுகங்களைக் கொண்ட கடற்கரை.
- மனித வள மேம்பாட்டில் கடிதான வளர்ச்சி – தமிழ்நாடு தற்போது இந்திய மாநிலங்களிடையே மனிதவள மேம்பாட்டில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டை இந்தியாவின் உண்மையான மற்றும் நடைமுறையில் மெய்யான கிழக்கு நுழைவாயில் என்று அழைக்கத்தக்க சிறந்த தகவல் தொடர்பு வசதி.

எனக்கு எப்போதுமே சாதனை படைப்பதில் தனியாத தாகம் உண்டு. ஒவ்வொரு துறையிலும், தமிழ்நாடு சிறப்பான சாதனை படைத்து தனது முத்திரையைப் பதித்து வருகிறது. தமிழ்நாடு தன்னுடைய பயணம் நெடுகிலும் வெற்றியைக் குவித்து வருகிறது என்பதை நீங்களே ஏற்றுக் கொள்வீர்கள்.

உலகின் மிகச் சிறந்த தொலைத்தொடர்பு இணைப்பு வசதிக்கு நிகரான தொலைத்தொடர்பு இணைப்பு வசதியைத் தமிழ்நாடு பெற்று விளங்குகிறது.

சென்னையை சிங்கப்பூருடன் இணைக்கின்ற வகையில், கடலுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடியிழை கம்பிவட இணைப்பானது, உலகின் மிகப் பெரிய கற்றை அகலம் (Bandwidth) கொண்டதாகும். இது இந்தியாவிலேயே மிகச்சிறந்த இணைப்பு வசதியைக் கொண்ட மாநிலம் என்ற பெயரை தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்துள்ளது. இது தவிர, இரண்டாவது கண்ணாடியிழைக் கம்பிவடக் கட்டமைப்பை கடலுக்கடியில் அமைக்கும் பணியை வி.எஸ்.என்.எல். நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் தகவல் தொடர்பு மிகவும் எளிதாகி உள்ளது. கற்றை அகலம் **(Bandwidth)** இனி ஒரு தடையே அல்ல. தகவல் தொழில் நுட்ப திட்டங்கள் **24** x **7** என்கிற அளவுக்கு நம்பகமான இணைப்பு வசதியைப் பெறலாம்.

தகவல்தொழில் நுட்ப வளர்ச்சியானது தமிழ்நாட்டை, தெற்காசியாவிற்கு மட்டுமின்றி, உலகிற்கே

இந்தியாவின் கிழக்கு நுழைவு வாயிலாக மாற்றுகின்ற அளவுக்கு, அதன் பொருளாதார வளர்ச்சிக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு மென்பொருள் ஏற்றுமதியில் இந்தியாவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நமது மாநிலம் ஆண்டொன்றுக்கு சுமார் 1.7 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள மென்பொருளை ஏற்றுமதி செய்து வருகிறது. மேலும், தகவல் தொழில் நுட்பத்தில் உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத் திறமையும் தகுதிகளும் கொண்ட கட்டுப்பாடுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்றக் கூடிய மிகச் சிறந்த மனித ஆற்றலையும் தமிழ்நாடு பெற்று விளங்குகிறது. வங்கிப் பணி, நிதியுதவிப் பணிகள் மற்றும் ஈட்டுறுதி, சுகாதார ஏற்பாட்டு முறை மேலாண்மை, கணினி சார்ந்த வரைகலை, கணினி சார்ந்த பொறியியல் போன்ற தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவையின் சில குறிப்பிட்ட பிரிவுகளில், தமிழ்நாடு உலகிலேயே வலுவான இடத்தைப் பிடித்துள்ளது. மின் ஆயத்த நிலை மற்றும் மின் ஆளுகை ஆகியவற்றில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகத் திகழ்கிறது. வன்பொருள் துறையில் ஏசியன் நாடுகள் முத்திரை பதித்து வருகின்றன. மென்பொருள் துறையில் எங்கள் மாநிலத்தின் பலமும், வன்பொருள் துறையில் நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றமும், பரஸ்பர ஒத்துழைப்பை வளர்த்து வெற்றியடைவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்துள்ளன.

அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகம் அளித்த வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்ப அலகுகளின்படி, ரூ.12.5 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.62.5 கோடி) செலவில் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள 'டைசல் உயிரிப் பூங்கா' தற்போது ஆயத்த நிலையில் உள்ளது. இந்தப் பூங்கா, உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியை, வணிக ரீதியிலான உத்திகளாக மாற்றுவதற்கு களம் அமைத்துத் தருகிறது. ஏசியன் பிராந்தியங்களின் உயிரிதொழில்நுட்பம் மற்றும் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் நம்முடைய 'டைசல்' உயிரிப் பூங்காவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், மதுரைக்கு அருகில் நிலக்கோட்டையில் உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு இணையான தொழில் பூங்கா ஒன்றையும், சென்னைக்கு அருகில் கடல் சார்ந்த உயிரி தொழில்நுட்பப் பூங்கா ஒன்றையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உயிரி தொழில் நுட்பப் பூங்காக்கள், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான வணிகம் மற்றும் முதலீடு சார்ந்த நம்முடைய பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன.

தமிழ்நாடு 3 பெரிய துறைமுகங்களையும், 15 சிறிய துறைமுகங்களையும் கொண்ட 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள நீண்டநெடிய கடற்கரையைக் கொண்டுள்ளது. எங்களுடைய துறைமுக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஏசியன் நாடுகள் பெரிய அளவில் ஒத்துழைப்பை நல்கும் என எதிர்பார்க்கிறேன். நம்முடைய மீன் பிடி தொழிலை மேம்படுத்துவதற்காக, ஏசியன் நாடுகளின் நிபுணத்துவத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். துறைமுகங்கள் மட்டுமின்றி ஏசியன் நாடுகளுடன் மிகச் சிறந்த வான் இணைப்பையும் சென்னை பெற்றுள்ளது. என்னுடைய அரசு பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் பங்கேற்புடன் எண்ணூர், சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தொழில் முனைவோர் தங்களுடைய தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும்.

இந்த மாநாட்டில் விவாதிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மற்றொரு முக்கியமான பொருள் மருத்துவ சேவை ஆகும். சென்னை மாநகரம், "இந்தியாவின் மருத்துவ சேவை தலை நகரம்" என்று அழைக்கப்படுகிறது. இங்கு பல உலகத்தரம் வாய்ந்த நவீன மருத்துவமனைகளும், உயர்சிறப்பு மருத்துவ மனைகளும் அமைந்துள்ளன. மிகப் பெரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் மாற்று உறுப்புகள் பொருத்துதல் ஆகியவற்றுக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆகக் கூடிய செலவில் ஒரு பின்ன அளவுக்குத்தான் இங்கு செலவு ஆகிறது. ஆனால், அதே நேரத்தில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சை மற்றும் சேவையில் எந்த சமரசத்திற்கும் இடமளிக்கப்படுவதில்லை. இந்த பிராந்தியத்தில் மருத்துவ சேவைக்கு மக்கள் விரும்பி நாடிவரும் இடமாக சென்னை மாநகரம் உருவெடுத்துள்ளது.

நல்ல வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள மற்றொரு முக்கியமான துறை சுற்றுலாத்துறை. தமிழ்நாடு இத்துறையில் உங்களின் முதலீட்டை வரவேற்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன், ஒரு சில இந்தியர்களே சுற்றுலா சென்றனர். இன்று பாங்காக் அல்லது கோலாலம்பூருக்கு செல்லும் விமானங்களில் இந்தியப் பயணிகள் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதால், நமது நாட்டின் பொருளாதாரம் நன்கு வளர்ச்சி அடைகிறது. நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டு இந்தியா–ஏசியன் சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும். இத்துறையில் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

இந்தியா–ஏசியன் நாடுகளுக்கிடையிலான உறவையும், வணிகத் தொடர்பையும் ஊக்குவிப்பதுதான் இந்தியா – ஏசியன் வர்த்தக மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டின் 2003ஆம் ஆண்டுக்கான புதிய தொழில் கொள்கையில், தமிழ்நாட்டிலுள்ள தயாரிப்புப் பிரிவுகளில் பயன்படுத்துவதற்காக, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற பொருட்களுக்கு நுழைவு வரி விதிக்கப்படமாட்டாது என்று என்னுடைய அரசு அறிவித்தது. இதனையும் இந்த வர்த்தக மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட பரஸ்பர சார்பு நிலை கொள்கையின் அடிப்படையிலான கூட்டுறவு



உணர்வையும் கருத்திற் கொண்டு நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு தமிழ்நாட்டில் தயாரிப்புப் பணியில் பயன்படுத்தப்படுகிற அனைத்துப் பொருள்களுக்கும், உறுதிமொழிக்கு உட்பட்டு, நுழைவு வரியிலிருந்து இனி விலக்களிக்கப்படும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதில் முழுமையான பொருள் பட்டியல் அடங்கும். இதனால் பொருட்களின் தடையற்ற வணிகத்திற்கான வசதிகள் பெருகும். இதே போன்று, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிற, 100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்பிரிவுகள், சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஆகியவற்றில் அமைந்துள்ள தொழில் பிரிவுகளின் தயாரிப்புப் பணியில் பயன்படுத்தப்படுகிற அட்டவணையிடப்பட்ட பொருட்களுக்கும் நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மூன்றாவது இந்தியா – 'ஏசியன்' மாநாடு, இந்நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் வாயிலாக புதிய ஆற்றல் பெற்று, தற்போதுள்ள உறவுகளை மேலும் விரிவாக்குவதற்கும், புதிய கூட்டாண்மையை ஏற்படுத்துவதற்கும், உடலுழைப்பின் புதிய துறைகளை இனங் கண்டறிவதற்கும் இந்திய மற்றும் ஏசியன் நாட்டு வர்த்தகத் தலைவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பினை நல்கியுள்ளது என்று நான் உறுதியாக நம்புகிறேன். பரந்துபட்ட இயற்கை வள வாயில்கள், நல்ல விற்பனை வாய்ப்புகள். பலவகையான தொழில்நுட்ப உத்திகள் இந்திய மற்றும் 'ஏசியன்' நாட்டு மக்களின் திறமைகள் ஆகியவற்றை ஒருங்கு திரட்டி நாம் பரஸ்பரம் அதிகப் பயன்பெற முடியும்.

தமிழக மக்களாகிய நாங்கள் பரந்துபட்ட அளவில் அனைத்து ஏசியன் நாடுகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம். இந்தப் பிராந்தியத்தின் ஒட்டு மொத்த மேம்பாட்டுக்கான முயற்சியில் நாங்களும் தோள்கொடுக்க விழைகிறோம்.

இந்த முக்கியமான மாநாட்டை, சென்னையில் ஏற்பாடு செய்தமைக்காக இந்திய தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்புக்கும் இந்திய தொழில் கூட்டமைப்புக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலீல் கிப்ரனின் வரிகளை இது தொடர்பாக நான் இங்கு சுட்டிக் காட்ட விழைகிறேன். 'முன்னேற்றம் என்பது உள்ளதைப் பெருக்குவதில் மட்டும் இல்லை; முன்னேற்றம் எவ்வாறு இருக்கவேண்டுமோ அதை நோக்கி முன்னேறுவதாகும்'. இந்த இந்தியா – ஏசியன் வர்த்தக அமைப்பு மூலம் நமது நாடுகளுக்கு, நமது பிராந்தியத்திற்கு மற்றும் உலகிற்கு பரஸ்பர நன்மைகளைப் பெறுவதற்கான ஒரு வலுவான அடித்தளத்தை நாம் உருவாக்க முடியும் என்று நான் உளமார நம்புகிறேன்.

நன்றி.

*சென்னையில் 20.10.2004 அன்று நடைபெற்ற*
*3ஆவது இந்தியா – 'ஏசியன்' வர்த்தக மாநாட்டில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி* **ஜெ ஜெயலலிதா** *அவர்கள்*
*நிகழ்த்திய ஆங்கில உரையின் தமிழாக்கம்*

# புதிய பொற்காலத் தமிழகத்தை நான் உருவாக்கியே தீருவேன்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர்கள் சங்கம், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம், வெளிப்புறப் படப்பிடிப்பு உரிமையாளர்கள் சங்கம், திரைப்பட லேப் உரிமையாளர்கள் சங்கம் ஆகிய இத்தனை அமைப்புகளும் ஒன்று சேர்ந்து இந்த பிரம்மாண்டமான விழாவிற்கு ஏற்பாடு செய்து இங்கே கலந்து கொள்ள வருகையும் தந்திருக்கிறீர்கள். இந்த அத்தனை அமைப்புகளையும் சார்ந்த திரையுலகத்தைச் சார்ந்த சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சரியாக மாலை 6 மணிக்கு நான் இந்தஅரங்கத்திற்கு வந்தேன். இப்போது நான் பேசத் தொடங்கும்போது இரவு 11.35 மணி ஆகிறது. 5½ மணி நேரத்திற்கு மேல் என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் நீங்கள் ஆழ்த்தி இருக்கிறீர்கள். உண்மை சொல்ல வேண்டும் என்றால், என்ன பேசுவது என்றே எனக்குத் தெரியவில்லை.

மனதில் துக்கம் மீறும் போது பேச வராது. அதைப் போலவே உள்ளத்தில் மகிழ்ச்சி மிகுதியாகும் போதும் பேச வராது. இன்று மகிழ்ச்சி வெள்ளத்தில் என்னை திக்குமுக்காட வைத்து விட்டீர்கள். அதனால் சந்தோஷ மிகுதியால் என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

தமிழ்த்திரை உலகமே இங்கு என் கண் முன் அமர்ந்திருக்கின்ற காட்சியைக் காணும் போது உற்றாரை, உடன்பிறந்தாரைக் காணுகின்ற உவகையே எனக்கு ஏற்படுகின்றது. காரணம் திரையுலகம் எனது தாய் வீடு! நான் தாய் வீட்டுக்கு வரும் போது என்னை வரவேற்பதற்காக ஒட்டு மொத்தத் திரை உலகமே வந்து கூடி இருப்பதைப் பார்க்கும் போது மகிழ்ச்சி அடைகிறேன். மன நெகிழ்ச்சி அடைகிறேன். படப்பிடிப்புப் பணிகளை எல்லாம் நிறுத்தி விட்டு என்னைப் பாராட்ட வந்த பாச மலர்களே! இந்தப் பரிவையும் அன்பையும் நான் என்றும் மறக்கமாட்டேன்.

உங்களைப் பார்க்கும் போது நீங்களும் மகிழ்வோடு இருப்பது தெரிகிறது. இந்தப் பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் ஏற்படும் மகிழ்ச்சி -- இன்று தமிழ்த் திரை உலகம் மீண்டும் தலை நிமிர்ந்து இருப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி -- இந்த இரட்டை மகிழ்ச்சியில் நீங்கள் இருப்பதைப் பார்க்கும் போது இன்னும் மகிழ்ச்சியும், மன நிறைவும் எனக்கு ஏற்படுகின்றன.

இத்தகைய பாராட்டு, வாழ்க்கையில் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும். எத்தனையோ பேர் நல்ல காரியங்கள் செய்து இருந்தாலும் அவர்கள் வாழ்நாளில் பாராட்டைப் பெற்றதில்லை. அவர்கள் மறைந்த பின்னர் தான், அவர்களுடைய அருமையை மற்றவர்கள் உணர்ந்து காலம் கடந்து போற்றி இருக்கிறார்கள். அத்தகைய பல உதாரணங்கள் வரலாற்றில் உண்டு. ஆனால், நான் செய்த செயலுக்காக உடனே நன்றி தெரிவித்து இவ்வளவு பிரம்மாண்டமான பாராட்டு விழாவையும் எடுத்து இருக்கிறீர்கள். இந்த அன்பை நான் என்றும் மறக்க மாட்டேன்.

திரையுலகம் என்று நான் சொன்னேன். உண்மையில் இது ஒரு தனி உலகம்தான். திரைத்துறை என்று அழைக்கப்பட்டாலும் கூட இது ஒற்றைத் துறையல்ல; பல்வேறு துறைகளும் இடம் பெற்றிருக்கும் ஓர் உலகம். இது கலை உலகம்! அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் அற்புத சக்திகளைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டிருக்கின்ற ஒப்பற்ற கலை உலகம்! இது கலையும், அறிவியலும் கலந்த கவின்மிகு உலகம்!

Anatole France என்ற மேலை நாட்டு அறிஞர் சொல்லியிருக்கிறார். "Existence would be Intolerable if we were never to dream", அதாவது. "கனவு காண முடியவில்லை என்றால் இந்த வாழ்க்கையே நம்மால் சகித்துக் கொள்ள முடியாதது ஆகிவிடும்" என்பது பொருள். யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கையிலும் எத்தனையோ பிரச்சினைகள்-- எத்தனையோ கஷ்டங்கள், ஏழை ஆனாலும் சரி, பணக்காரர் ஆனாலும் சரி அவரவர் சூழ்நிலைக்கு ஏற்ப எல்லோருக்கும் வாழ்க்கையில் ஏதோ பிரச்சினைகள் இருக்கும். கவலைகள் இருக்கும். அவ்வப்போது அந்தக் கவலைகளை மறந்து சில மணி நேரமாவது மனதிற்கும் ஒரு Relief கிடைத்தால்தான், மீண்டும் பிரச்சினைகளைச் சந்தித்து வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்த முடியும். அதனால்தான் எல்லோரும் திரைப்படங்களைப் பார்க்க விரும்புகிறார்கள். யாருக்கு என்ன கவலை இருந்தாலும் ஒரு சினிமா படத்தைப் பார்க்கின்ற அந்த மூன்று மணி நேரமாவது கவலையை மறந்து ஒரு கனவுலகில் சஞ்சரிக்க முடிகிறது அல்லவா?

உள்ளதைச் சொன்னால் அது உண்மை! அதையே உள்ளம் விரும்புகின்ற வண்ணம் சொன்னால் அது கலை! இது கலை உலகம்! இது கனவுலகம்! என்றாலும் இது முற்றிலும் கற்பனை உலகமல்ல! வாழ்க்கையின் பிரதிபலிப்பே திரைப்படம். ஆதலால் இது எதார்த்த உலகம்! அழகுணர்ச்சி ஆட்சி செலுத்துவதால் இது கனவுலகம்.

ஆகவேதான் இது சாமானிய மக்களையும் வசீகரிக்கும் சந்தோஷ உலகமாக விளங்குகிறது. மனிதனின் கண்டுபிடிப்புகளில் இது மகத்தான கண்டுபிடிப்பு. பொழுது போக்காகவும், அதேசமயம் வாழ்க்கையின் திறனாய்வாகவும் திரை உலகம் விளங்குவதால் சிறியவரை ஈர்ப்பதைப் போலவே பெரியவரையும் ஈர்க்கின்றது. அது மட்டும் அல்லாமல் இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் அட்சய பாத்திரமாகவும் திரைப்பட உலகம் திகழ்கிறது!

உலகிலேயே அதிகமான திரைப்படங்களை உருவாக்கித் தரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதும், இந்தியாவிலேயே அதிகத் திரைப்படங்களை உருவாக்கித் தரும் நகரம் சென்னை மாநகரம் என்பதும் நாம் பெருமைப்படத்தக்க செய்திகளாகும்.

இத்தகைய பெருமைக்கு உரிய தமிழ்த் திரைப்படத் துறை பல்வேறு காரணங்களால் நலிவுற்றுக் கிடந்த போது, 'சரிவிலிருந்து மீண்டு வருமா தமிழ்த்திரை உலகம்?' என்ற சந்தேகத்தில் எல்லோரும் தவித்துக் கிடந்த போது நீங்கள் என்னைச் சந்தித்தீர்கள். உங்கள் கோரிக்கைகளை என் முன் வைத்தீர்கள். திரையுலகம் நசிவடையும் போது அதைக் காப்பாற்ற வேண்டியது எனது கடமை என எண்ணி, அதை எனது சொந்தப் பிரச்சினையாகவே கருதி உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உதவிகளை வழங்கி இருக்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டிய பரிதாபத்தில் இருந்த வேளையில் அழிவின் விளிம்பிலே இருந்த திரைப்படத் தொழிலை மீட்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த நான் உங்கள் கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற உத்தரவிட்டேன்.

அடுத்தவருடைய அறிவை, ஆற்றலை, உழைப்பை, அதன் பயனைத் திருட்டுத்தனமாக அபகரித்து வந்த திருட்டு VCDயை ஒழிக்க பல நடவடிக்கைகள் எடுக்க ஆணையிட்டேன். அதன் காரணமாக திருட்டு VCD ஒழிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாகத் திரையரங்குகளை மக்கள் நாடி வரத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த மாற்றத்தை உடனடியாக ஏற்படுத்தியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிலபேர் திரைப்படத்தால் என்ன பயன் என்று கேட்கிறார்கள். மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பவற்றை விடச் சிறந்த பயன் உலகத்தில் உண்டா? மக்களுக்கு



மகிழ்ச்சி அளிப்பவர்கள் நீங்கள். மகிழ்ச்சி அளிக்கும் நீங்களே மனக் கவலையில் ஆழ்ந்து விட்டால் மக்களுக்கு நீங்கள் எப்படி மகிழ்ச்சி அளிக்க முடியும்? தமிழ்த் திரைப்பட உலகம் மகிழ்ச்சியாக இருந்தால் தானே தமிழ் மக்கள் மகிழ்ச்சியோடு விளங்க முடியும்? உங்கள் துயரைப் போக்குவது என்பது சமுதாயத்துக்கு மகிழ்ச்சி அளிக்கும் செயல்அல்லவா?

திரைப்படத்தைக் குறை கூறுபவர்கள் யார்? அதன் ஆளுமையைக் கண்டு அச்சப்படுபவர்கள்! அது தானே உண்மை? அவர்கள் திராவிட இயக்க வரலாற்றையே அறியாதவர்கள் என்பதே அதை விட பெரிய உண்மை!

திரைப்படத்தைச் சமூகப் போராட்டத்துக்கான ஆயுதமாகப் பயன்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா!

திரைப்படத்தைச் சமூக விழிப்புணர்ச்சிக்காகப் பயன்படுத்தியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.!

இவர்களைப் பற்றியும் இவர்களது ஆயுட்காலப் பணியைப் பற்றியும் அரை குறையாகத் தெரிந்து கொண்டவர்களும், தெரிந்து கொண்டு இருந்தாலும், அதை எப்படியாவது மூடி மறைக்க நினைப்பவர்களும் தான் இன்றைக்குத் திரைஉலகைத் தங்கள் எதிரியாக நினைக்கிறார்கள்.

நீங்கள் எந்த எந்தக் கோரிக்கைகளை முன் வைத்தீர்களோ, அவற்றை எல்லாம் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் ஏற்றுக் கொண்டதோடு நிற்காமல் உங்கள் எதிர்பார்ப்புக்கும் மேல் சலுகைகளை வழங்கியுள்ளேன் என்று பலரும் குறிப்பிட்டீர்களே– அதைச் செய்யும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி நான் அக மகிழ்கிறேன்.

திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தகுதியுள்ள திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கடந்த செப்டம்பர் 23 ஆம் தேதி அன்று நீங்கள் என்னை நேரில் சந்தித்த போதுகேட்டுக்கொண்டீர்கள். இந்தக் கோரிக்கையை நான் உடனடியாக ஏற்றுக் கொண்டதுடன் 2003–ஆம் ஆண்டு முதல், குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தகுதியுள்ள திரைப்படங்களுக்கு மானியத்தொகையை, திரைப்படம் ஒன்றிற்கு 7 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் ஆணையிட்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் கடந்த ஆண்டுகளில் திரைப்படத் தொழில் சந்தித்து வந்த இக்கட்டான நிலையைக் கருத்தில்கொண்டு, 2000 முதல் 2002 வரையிலான 3 ஆண்டுகளுக்கும் இந்த மானிய உதவியை வழங்கிட வேண்டும் என்று நீங்கள் பின்னர் விடுத்த கோரிக்கையை மிகவும் கவனத்தோடும் கனிவோடும் பரிசீலித்து கடும் நிதி நெருக்கடி காரணமாக, 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்த, குறைந்த செலவில் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட தகுதியுள்ள தமிழ்த் திரைப்படங்களுக்கான மானியம் வழங்கிட நான் முடிவு செய்துள்ளேன். அதன்படி 2000, 2001 மற்றும்

2002 ஆகிய ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தகுதியுள்ள தமிழ்த் திரைப்படங்களுக்கு படம் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும் என்பதை இந்தநேரத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைத்துறை என்பது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் திரிவேணி சங்கமம் ஆகும். இங்கே இயல் வல்லவர்கள் இருக்கிறீர்கள்! இசை வல்லவர்கள் இங்கே இருக்கிறீர்கள்! நாட்டியத்தில் வல்லவர்களும், நடிப்பில் வல்லவர்களும் இருக்கிறீர்கள்! அதாவது பேசும் கிளிகளும், பாடும் குயில்களும், ஆடும் மயில்களும் இந்த அவையில் நிரம்பி இருக்கிறீர்கள். எனக்கு நீங்கள் ஆடும் மயிலாகத் தெரிகிறீர்கள்! பாடும் குயிலாகத் தெரிகிறீர்கள்! பேசும் கிளியாகத் தெரிகிறீர்கள்! ஆனால் ஒருவருக்கோ நீங்கள் காக்காய்க் கூட்டமாகக் கண்ணுக்குத் தெரிகிறீர்கள்! அப்படியானால் அவர் பார்வையில் தான் ஏதோ கோளாறு என்று சொல்ல வேண்டும்.

நீங்கள் கலைத்தாயின் செல்லக் குழந்தைகள் ! நீங்கள் காக்காய்க் கூட்டமா ? அப்படி ஒருவர் சொல்லி இருக்கிறார் என்றால் – அது காட்சியின் பிழையா ? இல்லை கண்ணின் பிழையா ? அதையும் நீங்கள் தான் சொல்ல வேண்டும் !

அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க நான் எடுத்து வரும் முயற்சிகளை எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

திட்டமிட்டு சிலர் ஏற்படுத்தும் தடைகளைத் தகர்த்து எறிந்து தங்கத் தமிழகத்தை புதிய பொற்காலத் தமிழகத்தை நான் உருவாக்கியே தீருவேன். அந்த சாதனைகளுக்கு எல்லாம் தோளோடு தோள் நின்று நீங்கள் ஊக்கம் அளிப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இன்று இந்த மறக்க முடியாத விழாவில் எனக்கு வழங்கப்பட்ட வாழ்த்துகளுக்கும், பாராட்டுகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அருமை கலை நிகழ்ச்சிகளை வழங்கியவர்களுக்கும், அவற்றை உருவாக்கியவர்களுக்கும், திரை உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இந்த விழாவை இத்தனைச் சிறப்பாக ஏற்பாடு செய்தவர்கள் அனைவருக்கும் எனது அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்பார்கள். இன்றைய தினம் நீங்கள் அனைவரும் சேர்ந்து திருக்கோயில் அன்னதான திட்டத்திற்கு 1 கோடியே 8 ஆயிரம் ரூபாய் நிதியாக வழங்கி இருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் இன்று அன்னபூரணிகளாக மாறிவிட்டீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய விழாவில் தமிழ்த் திரைப்பட உலகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் கூட அந்த Film Chambers of Commerce–லிருந்தும், திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் இவ்வளவு தூரம் வந்து இந்த விழாவில் கலந்து கொண்டமைக்காக அவர்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலை நிகழ்ச்சிகள் நடத்தியவர்கள் அனைவருமே மிகவும் சிறப்பாக இந்த நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதில் என் மனதைத் தொட்ட ஒரு விஷயம் என்னவென்றால், இப்போது ரமலான் மாதம். இஸ்லாமியர்கள் ரம்ஜான் நோன்பு கடைபிடிக்கிறார்கள். இந்த நேரத்தில் அந்த இஸ்லாமிய இனத்தைச் சார்ந்த அன்புச் சகோதரர் ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் நோன்பு கடைபிடிக்கும் நேரத்தில் எந்த மேடை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதில்லை என்ற மரபையும் இன்றைக்கு ஒதுக்கிவிட்டு, எனக்காக, இன்று நோன்பு கடைபிடிக்கும் நேரத்தில்கூட இவ்வளவு தூரம் மும்பையிலிருந்து சென்னைக்கு வந்து இங்கே அற்புதமான கலைநிகழ்ச்சி நடத்தினார். அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரத்தின் அருமையைக் கருதி நான் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி, குறிப்பிட முடியவில்லை என்றாலும், அனைவருக்கும் எனது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, இன்றைய தினம் பேசியவர்கள் எல்லோருமே சொன்ன பாராட்டு மொழிகள், வெறும் மேடை சம்பிரதாயத்திற்காக அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வந்த வார்த்தைகள் அவை என்பதை நான் நன்கு உணருகிறேன்.

அந்த வகையில், இங்கே வந்து என்னை பெருமைப்படுத்திய அன்புச் சகோதரர் ரஜினிகாந்த் அவர்களுக்கும், அன்புச் சகோதரர் கமலஹாசன் அவர்களுக்கும், என் அன்பு அக்கா மனோரமா அவர்களுக்கும், என் தாய் ஸ்தானத்தில் இருக்கும் பழம்பெரும் நடிகை அஞ்சலிதேவி அவர்களுக்கும், என் மூத்த சகோதரி சரோஜாதேவி அவர்களுக்கும், என் அன்புச் சகோதரி சச்சு அவர்களுக்கும், இன்னும், இளைய தலைமுறையைச் சேர்ந்த விஜய், தனுஷ் போன்றவர்களுக்கும், அற்புதமான உரை நிகழ்த்திய திரு. சத்யராஜ் அவர்களுக்கும், திரு. பார்த்திபன் அவர்களுக்கும், மிகவும் சிந்திக்க வைத்த ஓர் உரையை



வழங்கிய அன்புச்சகோதரர் பாரதிராஜா அவர்களுக்கும், இன்னும் சொல்லப் போனால் இங்கு பேசிய அனைவருக்குமே, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்குமே, நான் எப்படி நன்றி சொல்வது என்றே எனக்கு புரியவில்லை.

இன்றைய விழாவில் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டன. பெப்ஸி தொழிலாளர்கள் சார்பாக முன்னாள் பெப்ஸி தலைவர் இயக்குநர் சிகரம் பாலச்சந்தர் அவர்களும் அதே கோரிக்கையை முன் வைத்தார். அதேபோல பெப்ஸி தலைவர் திரு. விஜயன் அவர்களும் அந்த கோரிக்கையை முன் வைத்தார். இப்போது பேசிய சகோதரர் விஜயகாந்த் அவர்களும் அதே கோரிக்கையை முன் வைத்தார். அதைப் போலவே இயக்குநர்கள் சங்கத்திற்கு சொந்தமாக ஒரு இடம் வேண்டும் என்று கேட்டார்கள். இன்னும் பல கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டன.

உங்களுக்கெல்லாம் என்னைப் பற்றி ஒரு விஷயம் நன்றாக புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நான் எப்போதுமே என்ன செய்ய முடியுமோ அதைத் தான் சொல்வேன். எதையாவது சொன்னால், வார்த்தைக் கொடுத்து விட்டால், உயிரே போனாலும், கொடுத்த வார்த்தையைக் காப்பாற்றாமல் விட்டுவிட மாட்டேன். ஆகவேதான் – இங்கே ஒருவர் பேசினார். எப்போதும் இறுக்கமாக இருக்கிறார் என்று – அது இறுக்கம் அல்ல. ஒரு reserved தன்மை. நான் இயற்கையாகவே அப்படித்தான். ஏனென்றால், உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தைகளை அள்ளிக் கொட்டிவிட்டால், வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டால் நாளை அவற்றை எல்லாம் நான் செயல்படுத்தி ஆகவேண்டுமே. அதனால் தான் யோசித்து, அளந்து வாக்குறுதிகளை அளிக்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்கிறேன். நான் ஒன்றைச் சொன்னால் என்னை நம்பலாம் என்று உங்களுக்கு தெரியும். பெப்ஸி தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினைக்கு நிச்சயமாக மிக விரைவில் ஒரு நல்ல தீர்வைக் காண்பேன். இயக்குநர்கள் சங்கத்திற்கு ஒரு தனி இடம் வழங்கப்படும். இதைப்போலவே, உங்கள் கோரிக்கைகள் ஒவ்வொன்றும் கனிவுடன், பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற வாக்குறுதியை அளித்து, மீண்டும் ஒரு முறை இவ்வளவு பிரம்மாண்டமான பாராட்டு விழாவை எனக்காக நீங்கள் எடுத்து, என்னை கௌரவப்படுத்தியதற்காக, பெருமைப்படுத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க !
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க !
என்று கூறி, விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

*8.11.2004 அன்று திரைப்படத் துறையினர்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு*
*வழங்கிய பாராட்டு விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
செல்வி **ஜெ ஜெயலலிதா** *அவர்களின் ஏற்புரை*

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் விஜயதசமி வாழ்த்துச் செய்தி

நவராத்திரி விழாவையும், விஜயதசமித் திருநாளையும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த மங்கல வேளையில், என் அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'யாதும் ஆகி நிற்கும்' அன்னை பராசக்தியை, மலைமகளாகவும், அலைமகளாகவும், கலை மகளாகவும் வழிபடும் திருவிழா நவராத்திரித் திருவிழா! வாழ்வுக்கு வேண்டிய மூன்று பொருள்கள் ஆற்றல், செல்வம் மற்றும் கல்வி ஆகும். ஆற்றலில் மிகுந்து, செல்வத்தில் சிறந்து, கல்வியில் உயர்ந்து விளங்க, அன்னையை ஒன்பது நாட்கள் வழிபட்டு, சரஸ்வதி பூஜையையும், ஆயுத பூஜையையும் கொண்டாடி, பத்தாம் திருநாளை – வெற்றித் திருநாளாக – விஜயதசமித் திருநாளாகக் கொண்டாடி வருகிறோம்.

காலம் காலமாக நமது முன்னோர்கள் கொண்டாடி வரும் சீர் மிகுந்த இந்தப் பண்டிகை, கவின்மிகு கைவினைஞர்களின் – கடும் உழைப்பை நல்கிடும் பல்வகைத் தொழிலாளர்களின் – வாழ்க்கை வளத்திற்கு வழிவகை செய்திடும் திருநாளாக விளங்குவதால், சமூக நோக்கிலும் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதால் தங்களது தொழிலுக்கு ஆதாரமான தொழிற்கருவிகளை பூஜைக்குரிய பொருட்களாக வைத்து மென்மேலும் தொழில் வளர அன்னையின் அருள் வேண்டி வழிபடும் திருநாளாகவும் இப்பண்டிகை அமைகிறது.

இத்தகைய சிறப்புமிக்க திருநாளில், அனைத்துத் தமிழரும் வெற்றி மேல் வெற்றி பெற்று வெற்றிப் பண்பாட, எனது மனம் கனிந்த விஜயதசமித் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

❖ ❖ ❖



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க, தீபாவளித் திருநாள் உற்சாகத்துடன் கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில், அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபாவளி நாள், மறம் மடிந்த நாள் ! அறம் எழுந்த நாள் ! எனவே, வீழட்டும் மறம் ! வெல்லட்டும் அறம் !

இந்தத் திருநாளில், அகத்தே இருக்கும் இருளும், புறத்தே இருக்கும் இருளும் மறையட்டும் ! எங்கும் ஒளிமயம் ஆகட்டும் !

இந்தத் தீபாவளி நன்னாளில் எத்திக்கும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் எனது தித்திக்கும் தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.



# "சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு"

## – என்னும் நூலினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வெளியிட்டார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்23.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் கலைமாமணி பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ள "சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு" என்னும் நூலை வெளியிட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து இந்த நூலின் முதல் பிரதியைப் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் திரு. ஏவிஎம். சரவணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சென்னையைச் சேர்ந்த பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் தமிழ்த் திரைப்படத் துறையில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் தொடர்புத் துறையிலும், கலைத்துறையைச் சேர்ந்த பல்வேறு பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு அரும்பணியாற்றி வருபவர் ஆவார். இவ்வகையில் 1931–ஆம் ஆண்டு முதலான தமிழ்த் திரைப்படங்கள் குறித்த புகைப்படங்கள், தமிழ்த் திரையுலகக் கலைஞர்கள் பற்றிய புத்தகங்கள், திரைப்படமான நாவல்கள், நாடகங்கள், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த பல்வேறு புத்தகங்கள், கலையுலகைச் சார்ந்த பல்வேறு சேகரிப்புகள், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த கிடைத்தற்கரிய விவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்துள்ளதாகவும், இவையனைத்தும் எதிர்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில், தமிழக அரசு பெற்றுக் கொண்டு, ஒரு தொகையைத் தனக்கு உதவியாக வழங்கவேண்டும் என்றும் மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் அவர் கோரியிருந்தார். மேலும், இந்தத் தகவல்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் "சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு" என்னும் நூலை எழுதியுள்ளதாகவும், அதனை வெளியிட நிதியுதவி வழங்கவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

திரு. பிலிம் நியூஸ் ஆனந்தனின் இந்தக் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திரு. ஆனந்தன் சேகரித்து வைத்துள்ள அரிய தகவல்கள் மற்றும் அவர் எழுதியுள்ள நூலின் சிறப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு நூலை அச்சிட்டு வெளியிட 5.5 இலட்சம் ரூபாயும், அவரது சேவைக்காக 10 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 15.5 இலட்சம் ரூபாயைத் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கினார்கள்.

நூல் வெளியிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிய நிதி உதவியின் மூலம் திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் "சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு" என்னும் பெயரில் தமிழ் திரைப்பட உலகைப் பற்றிய விவரங்கள் அடங்கிய தகவல் களஞ்சியமாக நூலை உருவாக்கி உள்ளார். இந்தச் சிறப்புமிகு நூலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்கள். இந்த நூலின் முதல் பிரதியைப் பிரபல திரைப்பட தயாரிப்பாளர் திரு. ஏவிஎம். சரவணன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திரு. ஏவிஎம். சரவணன் அவர்களிடத்தில், இந்த நூல் திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் நீண்ட நாள் கனவு. அந்தக் கனவு இன்று நனவாகி நூல் வடிவம் பெற்று வெளியாகி உள்ளது. அதன் முதற் பிரதியை உங்களிடம் நான் வழங்குகிறேன் என்று தெரிவித்தார்கள். அப்போது, திரு. ஏவிஎம். சரவணன் தமக்கு இந்த வாய்ப்பை வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *

# நேருவின் மணிமொழிகள்



- நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்து விட்டது. ஆனால் இன்னொரு யாத்திரை தொடங்கி விட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும் நல்வாழ்வுக்கு உகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் தொடங்கியுள்ள யாத்திரையே அது.
- ஜனநாயகத்தின் அர்த்தமே சமத்துவம்தான்.
- ஒழுக்கம், பொறுமை, பரஸ்பர மதிப்பு ஆகியவையே ஜனநாயகத்திற்குத் தேவையானவையாகும். ஒரு ஜனநாயக அமைப்பில் இணக்கம், பரஸ்பர விவாதம் ஆகியவற்றினால்தான் மாற்றங்கள் நிகழுகின்றன. வன்முறைகளினால் அல்ல.



# புதுவடிவம் பெற்றுள்ள மெரினா நீச்சல் குளம்

உலகில் இரண்டாவது மிக நீளமான கடற்கரை என்று புகழ் பெற்றுள்ள சென்னை மெரினா கடற்கரையை அந்தப் பெருமைக்கு நிகரானதாக மாற்றிடவும், அதன் மணற்பரப்பின் மாசுகளை அகற்றி சுற்றுச்சூழலைக் காத்திடவும், பொது மக்கள் சிறப்புடன் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் உலகத் தரத்திற்கு இணையாகக் கடற்கரையை மேம்படுத்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதன் ஒரு அங்கமாக, பராமரிப்பின்றி சிதிலமடைந்து கிடந்த சென்னை மெரினா நீச்சல் குளத்தை, அழகுடன் வடிவமைத்துப் புதுப்பித்திட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது ஆணையின்படி உலகப் புகழ் பெற்ற சென்னை மெரினா கடற்கரையின் அணிகலனாக விளங்கும் வகையில், சென்னை காமராஜர் சாலையில் உள்ள மெரினா நீச்சல் குளம் புதுப்பிக்கப் பட்டுள்ளது. சீருடன் மேம்படுத்தப்பட்டுப் புது வடிவம் பெற்றுள்ள நவீன மெரினா நீச்சல் குளத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.10.2004 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள இந்த மெரினா நீச்சல் குளம் 100 மீட்டர் நீளமும் 30 மீட்டர் அகலமும் கொண்டதாகும். 1947– ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த நீச்சல் குளம் நீந்திப் பழகுபவர்களுக்கு ஏற்ற வகையில் குறைந்தபட்சம் 3 அடியாகவும் அதிகபட்சம் 5½ அடியாகவும் ஆழம் கொண்டதாகும். இந்த நீச்சல் குளம், ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பொது மக்கள் இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், தனது முந்தைய ஆட்சியின் போது

இதைப் புதுப்பிக்க ஆணையிட்டார்கள். அதன்படி 1993–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் இந்த நீச்சல் குளம் புதுப்பிக்கப்பட்டது.

எனினும், அதன் பின்னர் பெரிய அளவிலான பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாத காரணத்தால் இந்த நீச்சல் குளம் பழுதுபட்டுப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உலகப் புகழ் பெற்ற மெரினா கடற்கரைக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் மெரினா நீச்சல் குளத்திற்கு முற்றிலும் ஒரு புதிய வடிவம் கொடுத்துப் பழுதுகளை நீக்கி முழுமையாகப் புதுப்பித்திட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, பராமரிப்பின்றி சிதிலமடைந்து கிடந்த உடை மாற்று அறைகள், சுற்றுச் சுவர் ஆகியவை முற்றிலுமாக அகற்றப்பட்டு, நவீன வடிவ பிளாஸ்டிக் சுற்றுச் சுவர், உடை மாற்றும் அறைகள், குளிக்கும் வசதி மற்றும் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், காண்போரைக் கவரும் வகையில் நீச்சல் குளத்தின் உள்ளேயும், சுற்றிலும் உள்ள நடைபாதையிலும் புதிய வண்ண ஓடுகள் (Tiles) அழகுற பதிக்கப்பட்டுள்ளன. நீச்சல் குள வளாகத்தில் கண்ணைக் கவரும் வகையில் மலர் செடிகள் நடப்பட்டுச் சுற்றுச் சூழல் பாதிக்காத வண்ணம் புல்வெளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சலவைக் கற்களால் அமைக்கப்பட்ட இருக்கை வசதியும் அமைக்கப்பட்டுள்ளது. நீச்சல் குளத்தில் உள்ள நீரைக் குறைந்த கால அளவில் விரைவாகச் சுத்திகரிக்க சுத்திகரிப்பு நிலையமும் நவீனப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது.

நுழைவாயில் அருகே புல்வெளி, நீரூற்று, நீச்சல் குளத்தின் வெளிப்புறத்தைச் சுற்றிலும் புல்வெளிகள் ஆகியவற்றுடன் மெரினா நீச்சல் குளம் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரைப்படி, கடற்கரைச் சூழலுடன் இணைந்து பொலிவூட்டும் வகையில், மொத்தம் 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வடிவத்துடன் புதுப்பிக்கப்பட்டுள்ள சென்னை மெரினா நீச்சல் குளத்தை 23.10.2004 அன்று காலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக அரசின் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், சென்னை மாநகராட்சியின் துணை மேயர் திரு. கராத்தே ஆர்.தியாகராஜன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திருமதி. சி.கே. கரியாலி இ.ஆ.ப., சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் (பொறுப்பு) திரு. சிவதாஸ் மீனா இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.□



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ரம்ஜான் வாழ்த்துச் செய்தி

**(நவம்பர் 15)**

ஈகைத் திருநாளாம் 'ஈத்' திருநாளை இன்புறக் கொண்டாடி மகிழும் எனது அன்பிற்குரிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும், எனது இதயம் கனிந்த 'ஈத் பெருநாள்' வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மாத காலம் அரிய நோன்பிருந்து உடலை, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி இறையருளால் பெற்ற பொருளின் ஒரு பங்கை ஏழையர்க்கு வழங்கி இன்புறும் திருநாள்! ஈகைத் திருநாள் ஈந்து மகிழும் நாள்! ஏழையின் மகிழ்ச்சியில் இதயம் நிறையும் நாள்!

இந்தத் திருநாளில் ஏகநாயகன் இறைவன் அருளால் அமைதி நிலைக்கட்டும்! அன்பு தழைக்கட்டும்! மனங்களில் எல்லாம் மகிழ்ச்சி பெருகட்டும்!

இந்தப் பெருநாளில், என் அன்பிற்கினிய தமிழக இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் ஈத் திருநாள் வாழ்த்துகளை இயம்பி மகிழ்கிறேன்.

* * *



# மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு அரசு நலத் திட்டங்கள்

**(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 25.10.2004)**

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த மக்களின் நலனில் மிகுந்த அக்கறையும், தனி ஈடுபாடும் கொண்டு, சிறப்பான திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகின்றது. எனது அரசு எப்போதுமே மீனவர்கள் மற்றும் அவரது குடும்பங்களைப் பாதுகாக்கும் மீனவ நண்ப அரசாகத் திகழ்கிறது. தமிழகத்திலுள்ள மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எனது தலைமையிலான அரசு, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

கடலுக்குள் சென்று மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதை முற்றிலுமாக நீக்கிட முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு, அவர்களது துயர் நீக்க எனது அரசு பாடுபட்டு வருகின்றது. இலங்கை கடற் படையால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்படும் தமிழக மீனவர்களை உடனே விடுவித்திடவும், அவர்களது படகுகளை மீட்டு தமிழகத்திற்குக் கொண்டு வரவும் மைய அரசை வலியுறுத்தி எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழக மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக இலங்கை கடல் பகுதியில் 5 கடல் மைல் தூரம் வரை மீன்பிடிப்பு மேற்கொள்வதற்குத் தமிழக மீனவர்களுக்கு உரிமம் வழங்க இலங்கை அரசை வலியுறுத்துமாறு கேட்டு மத்திய அரசை நான் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

மேலும், கச்சத்தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழில் மேற்கொள்வதற்கு ஏதுவாக, இப்பகுதியை நிரந்தர குத்தகை அடிப்படையில் பெறுவதற்கும், மைய அரசை நான் வலியுறுத்தி வருகிறேன். 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புதுடெல்லியில் நான் நேரில் சந்தித்த போது இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளேன்.

தமிழக மீனவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களுக்கு, மாதம் ஒன்றிற்கு இருபது கிலோ அரிசி வீதம், மொத்தம் 80 கிலோ அரிசி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், ஒரு கிலோ அரிசி ரூ.3.50 வீதம் பெற்றுக் கொள்ளும் திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2003–2004 ஆம் ஆண்டில் 3,01,773 மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், மீனவர் இறந்தாலோ அல்லது முழு ஊனமடைந்தாலோ காப்புறுதி நிவாரணமாக ரூ.50,000/– அவரது குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. காப்புறுதி செய்யும் மீனவர்களுக்குப் பிரிமியத் தொகை மொத்தமும் அரசால் செலுத்தப்படுகிறது. மீனவர்களிடமிருந்து பிரிமியத் தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 1,70,259 மீனவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு மீன் பிடிப்பு இல்லாத காலங்களில் 4 மாதங்களுக்கு, உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு 300 ரூபாய் வீதம் மொத்தம் 19.48 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக

வழங்கப்பட்டது. அதே போன்று, இத்திட்டத்தின் கீழ், 42,992 மீனவ மகளிருக்கும் நிவாரணம் வழங்கும் திட்டத்தையும் என்னுடைய தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

மீன்பிடி விசைப்படகுகளில் உபயோகிக்கப்படும் டீசலுக்கான விலையை மத்திய அரசு சமீப காலங்களில் வெகுவாக உயர்த்திவிட்டதன் காரணமாக, மீனவர்களுக்கு இது ஒரு மாபெரும் சுமையாக விளங்கி வருகிறது. கடந்த ஜூலை 2002–இல் லிட்டர் ஒன்றுக்கு ரூ.20.06 என்று இருந்த டீசல் விலை, தற்போது லிட்டர் ஒன்றுக்கு ரூ.26.93 என்று அதிகரித்துள்ளது. மத்திய அரசு விசைப் படகுகளுக்கும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கும் வழங்கப்படும் டீசல் விலையைக் கணிசமான அளவு குறைக்க வேண்டும். மத்திய அரசு டீசல் விலையை குறைக்காத இந்தச் சூழ்நிலையில், தாங்க முடியாத இந்தச் சுமையைக் குறைத்து, தங்களுக்கு உதவிட வேண்டும் என்று என்னிடம் மீனவ சமுதாயத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையை நான் கனிவுடன் பரிசீலித்து, அவர்களது துன்பத்தைக் குறைத்து அவர்களது வாழ்விற்கு வளம் சேர்க்கும் வகையில், டீசல் மீதான விற்பனை வரியை முழுவதுமாக நீக்க நான் முடிவெடுத்துள்ளேன். இதனால், மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கு விற்பனை வரி எதுவும் இனிமேல் விதிக்கப்பட மாட்டாது. இதனால் மீனவர்களுக்கு டீசல் விலையில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.5.33 என்ற அளவிற்குச் சலுகை கிடைக்கும். இதுவரை மீனவர்கள் லிட்டர் ஒன்றுக்கு சுமார் ரூ.26.93 என்ற விலையில் டீசல் பெற்று வந்தார்கள். விற்பனை வரியை முழுவதுமாக நீக்கிட நான் ஆணையிட்டதன் காரணமாக, இனி டீசல் லிட்டருக்குச் சுமார் ரூ. 21.60 என்ற விலையில் மீனவர்களுக்குக் கிடைக்கும். ஏறத்தாழ 5,000 விசைப் படகுகள் மற்றும் 15,200 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் வைத்துள்ள மீனவர்கள் இதனால் பயன் பெறுவார்கள். இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 51 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்ற போதிலும், மீனவ சமுதாயத்தின் நலன் கருதி இந்தச் சலுகையை வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

தற்போது மீனவர்கள் டீசல் பெற்று வரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் (TNFDC), தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் (TAFCOFED), மற்றும் குறிப்பிட்ட தனியார் நிறுவனங்கள் நடத்தும் 36 டீசல் விநியோக மையங்கள் மூலம் மேற்சொன்ன குறைக்கப்பட்ட விலையில் டீசல் வழங்கப்படும். மீனவர்களின் நலன் கருதி இந்த டீசல் விநியோகம் செய்யும் மையங்கள் மேலும் அதிகரிக்கப்படும்.

மேலும், மீன்பிடி விசைப் படகுகளில் பயன்படுத்தப்படும் உயர்வேக டீசல் எரி எண்ணெய்க்கு மைய அரசு உதவியுடன் மானியமாக ஒரு லிட்டருக்கு ரூ.1.50 வீதம் வழங்க நான் முடிவெடுத்துள்ளேன். இதன் மூலம் இவ்வாண்டில் (2004–2005) 5.48 கோடி ரூபாய் மானியத் தொகை மீனவர்களுக்கு வழங்கப்படும். மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கான விலையை, வெளிச்சந்தையில் உள்ள விலையுடன் ஒப்பிட்டுப் பார்க்காமல், மானியம் வழங்கி கணிசமாகக் குறைக்க வேண்டும் என்று மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு தமிழகத்திற்குப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்குவதற்காக, 2000– ஆம் ஆண்டில், மாதம் ஒன்றுக்கு 77,108 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்தது. அதன் பிறகு, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை மத்திய அரசு படிப்படியாகக் குறைத்து, தற்போது, அதாவது நடப்பு ஆண்டில் (2004) மாதம் ஒன்றுக்கு 58,392 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மட்டுமே பொது விநியோகத் திட்டத்தில் வழங்க, ஒதுக்கீடு செய்து வருகிறது. இதனால், பொது விநியோகத் திட்டத்தில் தற்போதுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே மண்ணெண்ணெய் வழங்க முடிகிறது. 16.9.2004 அன்று புது டில்லியில் பாரதப் பிரதமர் அவர்களை நான் நேரில் சந்தித்து, தற்போது, தமிழகத்திற்குப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்க மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் அளவினை மாதம் ஒன்றுக்கு 58,392 கிலோ லிட்டருக்குப் பதிலாக, 1,00,200 கிலோ லிட்டர் உடனடியாக வழங்க வேண்டுமென கோரிக்கை மனு ஒன்றினை அளித்துள்ளேன். 4,550 இயந்திரம் பொருத்திய நாட்டுப் படகுகளைப் பயன்படுத்தும் மீனவர்கள், மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி, படகுகளில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். எனவே, அவர்களுக்கு, பொது விநியோகத் திட்டத்தில் கூடுதல் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று எனது அரசு மத்திய அரசிடம் கேட்டுள்ளது. இதற்கான கூடுதல் ஒதுக்கீடு மத்திய அரசால் இன்னமும் வழங்கப்படவில்லை. இச்சூழ்நிலையில், மத்திய அரசிடமிருந்தும், எண்ணெய் நிறுவனங்களிடமிருந்தும் மண்ணெண்ணெயைப் பெற்று, மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எனது அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ★

# தமிழக காவல்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்27.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்த ஆண்டு (2004) நடைபெற்ற தேசிய அளவிலான காவல் துறை விளையாட்டுப் போட்டிகள், காவல்துறை நீர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய தடகள விளையாட்டுப் போட்டிகள் ஆகிய பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தமிழக காவல் துறை விளையாட்டு வீரர்களுக்கு, மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

தேசிய அளவில் நடைபெறும் பல்வேறு காவல் துறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வெற்றி பெறும் காவல் துறை விளையாட்டு வீரர்களுக்குத் தங்கப் பதக்கம் வென்றால் ரூ.50,000, வெள்ளிப் பதக்கம் வென்றால் ரூ.30,000, வெண்கலப் பதக்கம் வென்றால் ரூ.20,000 ரொக்கப் பரிசு வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி இந்த ஆண்டு (2004) நடைபெற்ற தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற காவல் துறை விளையாட்டு வீரர்களுக்கான ரொக்கப் பரிசுகளை 27.10.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

**தேசிய அளவிலான காவல் துறை நீர் விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வெற்றி**

உத்திராஞ்சல் மாநிலம் ரூர்கி நகரில், அனைத்திந்திய காவல் துறை நீர் விளையாட்டுப் போட்டிகள் – 2004, அக்டோபர் மாதம் 16– ஆம் தேதியிலிருந்து 19– ஆம் தேதி வரை நடைபெற்றன. இதில் துடுப்புகளைப் பயன்படுத்தி படகு ஓட்டும் போட்டியில் தமிழகத்தின் சார்பாக திரு. ஆர். கோவிந்தராஜ், திரு. டி. அந்தோணி ஆரோக்கியராஜ், திரு. எம். முனிவரதன், திரு. எம். தமிழரசு ஆகிய 4 பேர்கள் கொண்ட அணி பங்கேற்றது. இந்த அணி, 4 பேர் கலந்து கொள்ளும் 500 மீட்டர் தூரப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், 2,000 மீட்டர் தூரப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது. மேலும், இருவர் கலந்து கொள்ளும் 500 மீட்டர் மற்றும் 2,000 மீட்டர் தூரப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளது. 500 மீட்டர் போட்டியில் தங்கம் வென்றமைக்காக நான்கு வீரர்களுக்கும் தலா 50,000 ரூபாய், 2,000 மீட்டர் போட்டியில் வெள்ளி வென்றமைக்காக நான்கு வீரர்களுக்கும் தலா 30,000 ரூபாய், இருவர் பங்கேற்கும் போட்டியான 2,000 மீட்டர்



போட்டியிலும், 500 மீட்டர் போட்டியிலும் வெள்ளிப் பதக்கங்கள் வென்ற திரு. கோவிந்தராஜ் மற்றும் திரு. அந்தோணி ஆரோக்கியராஜ் இருவருக்கும் இரு வெள்ளிப் பதக்கங்களுக்காகத் தலா ரூ.30,000 + ரூ.30,000 ஆக ரூ. 60,000 ஆக மொத்தம் 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுக்கான காசோலைகளையும், இவர்களுக்குப் பயிற்சி அளித்த பயிற்சியாளர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக 25,000 ரூபாய்க்கான காசோலையினையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

**தேசிய அளவிலான கபடிப் போட்டியில்**
**முதன் முறையாக**
**வெள்ளிப் பதக்கம் வெற்றி**

ஜம்மு–காஷ்மீர் மாநிலம், ஜம்மு நகரில் 53–ஆவது அனைத்திந்திய காவல் துறை கையுந்துப் பந்து, கூடைப் பந்து, கபடி மற்றும் கைப்பந்து விளையாட்டுப் போட்டிகள் – 2004. இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 23–ஆம் தேதியிலிருந்து 28–ஆம் தேதி வரை நடைபெற்றன. இதில் கபடிப் போட்டியில் பங்கேற்ற 12 பேர் கொண்ட தமிழக காவல் துறை அணி முதல் முறையாக வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது. கபடிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற திருவாளர்கள். பி. சந்திரகுமார், எம். சுரேந்திரமுகன், ஐ. ஆனந்த் அப்பாராஜ், பி. காமாட்சி, பி. ராஜாராம், எஸ். முருகன், யு. பிரபாகரன், டி. லிங்கேஸ்வரன், பி. உதயகுமார், எம். குமரன், ஜி. சுந்தரபாண்டியன், எஸ். ராஜா ஆகிய தமிழக காவல் துறை விளையாட்டு வீரர்களுக்கும், பயிற்சி அளித்த காவல் துறை பயிற்சியாளர் திரு. எ.எஸ். மனோகரன் அவர்களுக்கும் தலா ரூ.30,000 வீதம் மொத்தம் 3 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

**தேசிய அளவிலான தடகளப் போட்டியில்**
**'போல் வால்ட்' கம்பு ஊன்றித் தாண்டும்**
**போட்டியில் வெண்கலப் பதக்கம் வெற்றி**

மராட்டிய மாநிலம் மும்பை நகரில், 44–ஆவது தேசிய தடகளப் போட்டிகள் இந்த ஆண்டு செப்டம்பர் 10–ஆம் தேதி முதல் 12–ஆம் தேதி வரை நடைபெற்றன. இதில் கம்பு ஊன்றித் தாண்டும் 'போல் வால்ட்' போட்டியில் பங்கேற்ற திரு. ஆர். ரஞ்சித்குமார் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். இதனைப் பாராட்டி ரொக்கப் பரிசாக ரூ.20,000–க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

தேசிய அளவிலான காவல் துறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வென்றெடுத்த 17 விளையாட்டு வீரர்கள் மற்றும் 2 பயிற்சியாளர்கள் ஆக மொத்தம் 19 பேர்களுக்கு ரொக்கப் பரிசுகளாக மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான



காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி, அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் தனது மனமுவந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது காவல் துறை தலைமை இயக்குநர், திரு. ஐ.கே. கோவிந்த், இ.கா.ப., காவல் துறை கூடுதல் இயக்குநர் திரு. கே.வி.எஸ். மூர்த்தி, ஆயுதப் படை காவல் துறைத் தலைவர் திரு. எம். பாலசந்திரன், ஆயுதப் படை காவல் துறை துணைத் தலைவர் திரு. எம்.எஸ்.ஜாபர் சேட் ஆகியோர் உடனிருந்தனர். ✶

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாடுகளில் வேலை தேடும் இந்தியர்களுக்கு குறிப்பாகத் தமிழர்களுக்கு மேலைநாடுகளில் வேலைவாய்ப்புகளைக் கண்டறிந்து கிடைக்கச் செய்ய பணிபுரிந்து வரும் தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 25 ஆண்டு கால சேவையை நிறைவு செய்து வெள்ளிவிழா கண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 25 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கானோர் இந்த நிறுவனத்தின் மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்த நிறுவனத்தில் பதிவு பெற்றவர்கள் மருத்துவர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், கணினிப் பொறியாளர், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர், கட்டுமானத் தொழிலாளர் என பல தரப்பட்ட வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர். இந்த நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பதிவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வேலைவாய்ப்புகள் வரும்போது பதிவுதாரர்களுக்கு தெரிவிக்க இயலும், பல்வேறு காரணங்களுக்காக சிலர் பதிவை புதுப்பிக்கத் தவறி உள்ளனர்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், வெள்ளி விழா கொண்டாடும் இந்த வேளையில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு ஒரு சலுகையினை அறிவித்துள்ளது. இந்த நிறுவனத்தில் பதிவு செய்து பதிவைப் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் ரூ.221–க்கான வரைவோலையினை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், சென்னை (Overseas Manpower Corporation Ltd, Chennai) என்ற பெயருக்கு அனுப்பி தங்கள் பதிவை புதுப்பித்து முந்தைய பதிவு மூப்பை தக்க வைத்துக் கொள்ளலாம்.

31.10.2004 வரை அறிவிக்கப்பட்டிருந்த இச்சலுகை, இச்சலுகையினை அறிந்திராத பதிவுதாரர்கள் பயன்பெறும் வகையில் 30.11.2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 30.11.2004க்குள் புதுப் பிக்கத் தவறியவர்களின் பதிவுகள் நிறுவனத்திலிருந்து நீக்கப்படும். எனவே, இந்த கடைசி வாய்ப்பை பயன்டுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவைப் புதுப்பிக்க விரும்பும் மனுதாரர்கள் தங்கள் பதிவு எண் மற்றும் விலாசம் ஆகியவற்றினை தெளிவாக எழுதி தற்போதைய கல்வித்தகுதி, முன் அனுபவம் போன்ற விவரங்களை கணினி வழியில் தயார் செய்து விண்ணப்பத்துடன் இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**"நிர்வாக இயக்குநர்,
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்,
(தமிழக அரசு நிறுவனம்)
41, மெக்னிக்கல்ஸ் ரோடு,
சேத்துப்பட்டு, சென்னை – 600 031''**

# பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கம்பி வட ஊர்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.11.2004 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் 4 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள கம்பிவட ஊர்தியை (Rope Car) தொடங்கி வைத்தார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும். தமிழகத்திலிருந்து மட்டுமல்லாமல், இந்தியாவின் ஏனைய மாநிலங்க ளிலிருந்தும் தண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்ய பக்தர்கள் அதிக அளவில் நாள்தோறும் இத்திருக்கோயிலுக்கு வருகை தருகின்றனர்.

கடல் மட்டத்திலிருந்து 150 மீட்டர் உயரத்தில், மொத்தம் 693 படிகளுடன் கூடிய இத்திருக்கோயிலுக்கு பக்தர்கள் வருகை புரிய ஏதுவாக ஏற்கெனவே மூன்று இழுவை இரயில்கள் உள்ளன. ஆனால், இவற்றைக் கொண்டு, பெருந்திரளாக வருகை தருகின்ற பக்தர்கள் கூட்டத்தை சமாளிக்க இயலவில்லை என்பதனை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கூடுதல் வசதியாகவும், பக்தர்கள் சிரமமின்றி திருக்கோயிலை எளிதில் அடைந்திட ஏதுவாகவும், கம்பிவட ஊர்தியை (Rope Car) அமைத்திட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையை ஏற்று, கம்பிவட ஊர்தி அமைக்கும் பணிகள் சிறப்பாகவும், விரைவாகவும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கம்பிவட ஊர்தியின் கீழ்தள நிலையம் பழனி மலையடிவாரம் கிரி வீதியில், கிழக்கு மூல வாய்க்கால் அருகில் அமைக்கப்பட்டுள்ளது. மேல்தள கம்பிவட ஊர்தி நிலையம் மலை உச்சியில் திருக்கோயிலின் கீழ்ப்புறம் திருமஞ்சன பாதை முடியும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கம்பிவடத்தின் நீளம் 323 மீட்டர்



ஆகும். பக்தர்கள் பயணிக்க மொத்தம் 24 பெட்டிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஒரு பெட்டியில் 4 நபர்கள் அமர்ந்து பயணிக்கலாம். ஒரு வழிப் பயணம் செய்ய 2 நிமிடம் 45 நொடிகள் பிடிக்கும். இதன் மூலம், ஒரு மணி நேரத்தில் 800 நபர்களை மலையடிவாரத்திலிருந்து, மலை உச்சியில் உள்ள திருக்கோயிலுக்கு ஏற்றிச் செல்ல முடியும்.

அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமியை தரிசனம் செய்து, அவரை வழிபட்டு அருள் பெற்றிட வருகை தருகின்ற பக்தர்களின் வசதிக்காக, 4 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய கம்பிவட ஊர்தியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.11.2004 அன்று பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் தொடங்கி வைத்தார்கள். ●

**வே**ளாண் தமிழ் அறிவியல் இதழ்கள் பற்றிய ஆய்வுக்கு முன், சென்ற காலங்களில் உழவர்களுக்காக நடத்தப்பட்ட இதழ்களைத் தொகுத்துப் பார்ப்பது கூடுதல் புரிதலைக் கொடுக்கும் என்பதால், அவை இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன. இதழ் தொடங்கப்பட்ட காலம் மற்றும் அவற்றில் வெளிவந்த படைப்புகள் குறித்தும் பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.




'உழுவோன்' மற்றும் 'விவசாய தீபிகை' என்ற வேளாண் அறிவியல் இதழ்கள் 1904–ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. இதில் உழுவோன், உழவர் சிறப்பு, நீர்வள வேளாண்மை போன்ற விபரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து விவசாயிகளுக்கான சங்கத்தினர் தேவை வலியுறுத்தப்பட்டது. விவசாய தீபிகை இதழில் விவசாய அறிவியல் கட்டுரைகளுடன் விவசாயச் சார்புத் தொழில்களான கால்நடை வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு பற்றியும், இந்திய மற்றும் வெளிநாட்டு விவசாய முறைகள் பற்றியும் உள்ள விபரங்களையும் வெளியிட்டன. இதில் புதிய வடிவங்களாக உரையாடல்கள், குழந்தைகளுக்கான வேளாண்மைக் கருத்துகள், வேளாண் புதிர்கள், கேள்வி பதில்கள் ஆகியன இடம் பெற்றிருந்தன.

இந்த இதழ்களுக்கு அடுத்து வந்த இதழ்களில் தமிழ்நாடு அரசாங்கத்தில் இருந்து வெளிவந்த 'மேழிச்செல்வம்' குறிப்பிடத்தக்க ஒரு இதழாகும். இதில் உழவர்களுக்குப் பயன்படும் வேளாண் அறிவியல் கட்டுரைகள், வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சியாளர் களால் எழுதப்பட்டன. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் ஒவ்வொரு மாதமும் பயிரிடப்பட வேண்டிய பயிர்களின் பட்டியலை மாதந்தோறும் வெளியிட்டு வந்தன.

இதை அடுத்து 1950க்குப் பின் செங்கல்பட்டில் இருந்து வெளிவந்த 'விவசாயி' என்ற இதழ் ஒரு மாறுபட்ட கோணத்தில் இருந்துள்ளது. இவ்விதழில் பயிர்த்தொழிலுக்குத் தேவையான வேளாண் அறிவியல் கட்டுரைகள் அதிகம் இடம் பெறவில்லை. மாறாக, விவசாயிகளின் கடன் நிவாரண மசோதா, நிலக்கரி வசூல், விவசாயிகளின் கடன் சுமையை நீக்கும் சட்ட மசோதா முதலான, நிலம் தொடர்பான சட்டப் பிரச்சினைகளுக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது.

தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் பகுதியில் இருந்து 1956களில் 'பயிர்த்தொழில்' என்ற வார இதழ் வெளிவந்தது. இதில் வாராந்திர பாரத நாட்டுப் பயிர்த்தொழில் செய்திகள், உழவர்கள் மற்றும் உழவுத் தொழில் சார்ந்த கட்டுரைகள், சிறுகதைகள், தொடர்கதை நாடகங்கள் பிரசுரமாகின. இத்துடன் கால பலன், ஜோதிடம், காலநிலை ஆகியனவும் வெளிவந்தன.

விவசாய புரட்சி மாத இதழ் என்ற முழக்கத்துடன் 1962இல் 'விவசாய உலகம்' என்ற இதழ் சென்னையில் இருந்து வெளிவந்தது. வேளாண்மை பற்றிய பொதுவான தகவல் கட்டுரைகளுடன் அடிப்படை வேளாண் அறிவியல் கட்டுரைகள், இலக்கியச் செய்திகள், வீட்டு வைத்தியம், வேளாண் சாதனங்கள், சிறுதொழில்களிலும் வேளாண்மை போன்ற செய்திகளைத் தாங்கி வந்தது.

விவசாயப் பிரச்சினைகளை விளக்கும் ஒரே பத்திரிகை என்ற முழக்கத்துடன் 'விவசாய நாடு' என்ற இதழ் 1968இல் திருவாரூரிலிருந்து வெளிவந்தது. உழவர்களுக்குத் தேவையான வேளாண் அறிவியல்

கட்டுரைகள், புதிய இயந்திரங்கள், விவசாய சங்கச் செய்திகள், சட்டச் சிக்கல்கள் போன்றவற்றிற்கு இவ்விதழ் முதலிடம் கொடுத்தது.

சென்னையிலிருந்து 'வேளாண்மை வளம்' என்ற இதழ் 1968இல் காலாண்டு இதழாக வெளிவந்த்து. இது குறிப்பாக, டிராக்டர்ஸ் அண்டு ஃபாம் எக்யூப்மெண்ட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் இதழாக வெளிவந்தது. அந்நிறுவனத்தின் செயல்பாடுகளை உழவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவிக்கும் நோக்கில் இவ்விதழ் நடத்தப்பட்டது. புதிய கருவிகள், பயிரிடும் முறைகள், உரங்கள் பற்றிய கட்டுரைகள் இதில் அதிகம் இடம் பெற்றிருந்தன.

இந்தக் காலகட்டத்தில்தான் 'வளரும் வேளாண்மை' என்ற இதழைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டு வந்தது. ஆராய்ச்சியின் முடிவுகளை உழவர்களுக்குத் தெரிவிப்பதே இதன் நோக்கமாக இருந்து வந்துள்ளது. இவ்விதழ் பற்றிய ஆய்வே பின்பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளது. 1976களில் 'விஞ்ஞான விவசாயம்' என்ற இதழ் கோயில்பட்டியில் இருந்து வெளிவந்தது. இவ்விதழ், விவசாயிகளுக்கான நவீன வேளாண்மைத் தகவல் கட்டுரைகளையும், புதிய முறைகள், கருவிகள், உரங்கள் பற்றிய உழவர்களுக்கான செய்திகளையும் வெளியிட்டுள்ளது. இதில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் கட்டுரைகளே அதிகம் வெளிவந்தன. இத்துடன் உழவர்களின் அனுபவக் கட்டுரைகள், உழவர்களின் கேள்விகளுக்குப் பதில் பகுதி, உழவியல் தொடர்பான இலக்கியக் கட்டுரைகள், உழவர்களிடம் வழங்கி வரும் வேளாண்மைப் பழமொழிகள் போன்றனவும் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் சார்பில் 1977லிருந்து 'நிலவளம்' என்ற இதழ் வெளியிடப்படுகிறது. இவ்விதழில் வேளாண்மைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலைக்கழகத்திலிருந்து 1981 முதல் 'கால்நடைக் கதிர்' என்ற இதழ் வெளி வருகிறது. இவ்விதழும் 'வளரும் வேளாண்மை' இதழ் போன்றே உழவர்களுக்குக் கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகியன பற்றிய அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது.

எஸ்.கே.எம். நிறுவனத்தின் சார்பில் 1982இல் இருந்து 'கோழி நண்பன்' என்ற இதழ் வெளியிடப்படுகிறது. இவ்விதழில் கோழி வளர்ப்பு, தீவனங்கள், நோய்த் தடுப்பு முறை பற்றிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

'உங்கள் விவசாயம்' என்ற இதழ் 1988லிருந்து வெளி வருகிறது. வேளாண்மை அறிவியல் செய்திகளை ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து உழவர்களுக்குக் கொண்டு செல்வதே இதன் நோக்கம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது.

'நம் வழி வேளாண்மை' என்ற இதழ் மதுரையிலிருந்து 1999 முதல் வெளிவருகிறது. இவ்விதழ் இயற்கை வேளாண்மை, உழவர்களின் ஆய்வுகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை தருகிறது.

'நவீன வேளாண்மை' என்ற இதழை 1996இல் சென்னையில் இருந்து வெளியிட்டு வருகின்றனர். இவ்விதழ் பல்வேறு வடிவமைப்புகளுடன் மாறி மாறி வந்து கொண்டுள்ளது. கட்டுரை மற்றும் குறிப்புகள் என்ற வடிவங்களையும் படங்களுடன் கூடிய உதாரணங்களையும் தாங்கி வருகிறது.

இன்னும் இதில் குறிப்பிடப்படாத சிறிய மற்றும் பெரிய இதழ்கள் பல காலங்களில் வெளியிடப்பட்டன. சில இதழ்கள் சில காலம் வெளிவந்தன. சில இதழ்கள் ஒன்றிரண்டு ஆண்டுகளில் காணாமல் போயின. நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்படும் இதழ்கள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. இதுவரை வணிகரீதியில் வெளிவந்த இதழ்கள் அதிக காலம் நீடித்து நிற்க முடியாமல் பல வடிவங்களுக்கு உட்பட்டு பின் மறைந்துபோயின. நிறுவனங்களின் உதவியுடன் வரும் இதழ்கள், பெரிய அளவுக்குப் பாதிப்புகள் எதையும் ஏற்படுத்த முடியவில்லை. வேளாண்மை என்ற உடன் குறிப்பிட்டுச் சொல்லும்படியோ, உழவர்கள் முன்வந்து கேட்டு வாங்கும்படியோ, இதுநாள் வரை வேளாண் அறிவியலில் இதழ்கள் வெளிவரவில்லை என்றே கூறலாம். எழுபது சதவிகிதம் வேளாண்மையை மையமாகக் கொண்ட நாட்டில் இலட்சக்கணக்கான படித்த உழவர்கள் உள்ள தமிழ்நாட்டில் தொடர்ந்து இதழ்களைக் கொண்டு வர முடியாத நிலைமைக்குக் காரணம் என்ன ? மற்ற இதழ்களை வாங்கும் உழவர்களே கூட இந்த இதழ்களை வாங்காதது ஏன் ? என்ற பல கேள்விகளுக்கு விடை காணும் நோக்கில் முயற்சித்தால், முடிவு உழவர்களிடம் இல்லை. இதழ்களின் உள்ளடக்கத்திலும், வடிவத்திலும்தான் உள்ளது என்பதை அறிய முடியும்.

வேளாண்மை வளர்ச்சிக்குச் சென்ற காலங்களில் வந்த வேளாண் அறிவியல் தமிழ் இதழ்களின் பங்கு

போதுமான அளவு இல்லை என்பதே. வேளாண் அறிவியல் என்பது காலத்தின் கட்டாயம். உழவர்களுக்குப் பெரிதும் இன்றியமையாதது. ஒவ்வோர் அறிவியல் இதழுக்கும் தனிநடை உண்டு. சொல்லமைப்பு உண்டு, மரபு உண்டு. ஆனால், வேளாண் இதழ்களில் அத்தகைய மாற்றம் கொண்டு வரப்படவில்லை. ஏற்கெனவே இருக்கும் மற்ற துறை இதழ்கள் போன்றே இவ்விதழ்களும் கொண்டு வரப்பட்டதால் அதிக அளவு உழவர்களைச் சென்றடையவில்லை. மற்ற துறைகளில் நாளிதழ்கள், வார இதழ்கள், திங்கள் இதழ்கள், பருவ இதழ்கள் என இருப்பினும் இதில் திங்கள் இதழ்களே அதிகம் கொண்டுவரப்பட்டுள்ளன.



### வேளாண் அறிவியல் இதழ்களின் வடிவம்

வேளாண் இதழ்களின் வடிவம், தொடக்க காலத்தில் இருந்தே அதிகம் கட்டுரை வடிவத்தையே கொண்டிருந்தன. அதுவும் ஆராய்ச்சி நிறுவனங்களில் இருப்பவர்களின் மொழிபெயர்ப்புத்தன்மை கொண்ட கட்டுரைகளே அதிகம் இடம் பெற்றன. குறிப்பாக, வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவரும் இதழில் முழுக்க முழுக்கக் கட்டுரை வடிவமே பின்பற்றப்படுகிறது. இதிலும் பல பக்கங்கள் நீளும். பெரிய கட்டுரைகளும் அதிக அளவு புள்ளி விவரங்களைக் கொண்டதாகவும் இக்கட்டுரைகள் இருந்தன. இதழ்களின் அட்டைப் படங்களும் மற்ற வணிக ரீதியான இதழ்களுக்கு முற்றிலும் மாறுபட்டும், ஈர்ப்பு இன்றியும் உள்ளன. அதிக அளவு படங்கள் இல்லாமலே செய்திகள் கொடுக்கப்படுவதும், சிறு குறிப்புகள் அதிகமின்றியும் இருப்பதுமே நடைமுறையாக உள்ளது. இதழ்களின் உள்ளடக்கம் என்று பார்த்தால் அவை உடனடிச் செய்திகளைக் கொடுப்பது என்று தொடங்காமல், தெரிந்த விபரங்களைக் கொடுப்பதாகவே உள்ளன. தொடர்ந்து வேளாண்மையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஏற்ப இதழின் உள்ளடக்கம் மாற்றப்படுவதில்லை. எப்போதும் ஒரே வடிவத்தையும் ஒரே மாதிரியான உள்ளடக்கத்தையும் கொண்டனவாக உள்ளன. உதாரணமாக, வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவரும் வேளாண்மை இதழை எடுத்துக்கொள்வோம். இவ்விதழ் 1972 முதல் வெளிவருகிறது. அப்போதிலிருந்து அதன் வடிவத்தில் சென்ற ஆண்டு வரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. உள்ளடக்கத்திலும் இதே நிலைதான்.

ஒன்று இந்த வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் இதழ் விரிவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தொடர்ந்து இதழ்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதும், அதுவே சுயமாக இயங்குவது என்று இன்றி, நிறுவனத்தைச் சார்ந்து இருப்பதும், அதன் வளர்ச்சி இன்மையைக் காட்டுகிறது. இருந்தும் அதிக மாற்றங்கள் கொண்டு வரப்படவில்லை. தொடர்ந்து, மாற்றத்திற்கு உள்ளாகி வரும் வேளாண்மைக்கு ஏற்பத் தொடர்ந்து இதழிலும் ஏற்படுத்தி இருக்க வேண்டும். புறநிலை எதார்த்தம் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாதது ஆச்சரியமே. அதேபோல, உழவர்களின் நிலைமைக்கு ஏற்பப் படைப்புகளில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. இதுவே ஒரு பொதுவான இதழாக வளராததற்கு முக்கியக் காரணமாகும். வடிவங்களில் கட்டுரை வடிவத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்ததற்குப் பதில், உரையாடல் செய்திகள், கவிதை, கதை எனப் பல்வேறு வடிவங்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

வேளாண் அறிவியல் இதழ்கள் சிறப்பாக வெளிவரவும் பெரும்பான்மை உழவர்களைச் சென்றடையவும் செய்யப்பட, மேற்கொள்ளப்பட வேண்டிய சில ஆலோசனைகள்:

வேளாண்மை அறிவியல் தமிழ் இதழ்கள் கட்டுரைத் தொகுப்புகளாக இன்றி, செய்திகளின் தொகுப்புகளாக வெளிவர வேண்டும். தொழில்நுட்பம் மட்டுமே வேளாண்மை உற்பத்திக்கு முக்கியமான காரணமில்லை. உழவர்களின் நிலை, அரசின் கொள்கை, உற்பத்தி முறை, வளர்ந்துவரும் உற்பத்திச் சக்திகளின் நிலை, நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரம் போன்ற அனைத்தும் வேளாண்மை உற்பத்திக்குப் பங்காற்றுகின்றன.



இவற்றோடு இணைத்தோ தொடர்புபடுத்தியோ தொழில் நுட்பங்கள் கொடுக்கப்பட வேண்டும். இத்தகைய இதழ்களின் பிரதான முகவர்கள் உழவர்களே, உழவர்களில் அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யும் உழவர்கள் முதல், இன்னும் பழமையான முறைகளில் பின்தங்கிய காலாவதியான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் உழவர்களும் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பல்வேறு நிலைகளில் உள்ள உழவர்களும் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஒரே வடிவத்துடன் ஒரே மாதிரியான உள்ளடக்கத்துடன் கருத்துகளைக் கொடுப்பது என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே அளவில் வடிவமைத்த ஆயத்த ஆடையைக் கொடுப்பது போலிருக்கும். தொழில்நுட்பங்களே பல்வேறு நிலையில் உள்ளன. அவையே இன்னும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது.

இதைப் புதுக்கவிதையில் சொல்வதென்றால்,

வேளாண் தொழில்நுட்பங்கள்
அளவெடுக்கப்படாமல் தைக்கப்பட்ட
ஆயத்த ஆடைகள்
பொருந்தியவர்கள் போட்டுக்கொண்டார்கள்
பொருந்தாதவர்கள்
இன்னும் கோவணத்துடன்

என்று கூறலாம். ஒட்டுமொத்தமாக அறுவடை செய்து, தானியத்தைப் பிரித்து மூட்டையில் சேகரிக்கும் அறுவடை இயந்திரமும் உள்ளது. அதே சமயத்தில் கையால் அறுவடை செய்யும் நிலையும் நிலவுகிறது என்பதைத்தான் இக்கவிதை சுட்டிக்காட்டுகிறது.

வேளாண்மை இதழ்கள் இந்த நிலையைக் கணக்கில் கொண்டு, இதில் ஒவ்வொருவருக்கும் வடிவத்தையும் தொழில்நுட்பத்தையும் கொடுப்பதாகக் கொண்டுவரப்பட வேண்டும். இதழ்கள் வெறும் விபரத்தைக் கொடுப்பதாக மட்டுமின்றி, அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான வழிமுறைகளையும் முன் வைக்க வேண்டும். உடனடித் தேவையை நிறைவு செய்யும் அதே சமயத்தில் தொலைநோக்குப் பார்வையையும் கொடுக்க வேண்டும். அன்றாட வாழ்வில் உழவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வதோடு, பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளையும் பயிற்றுவிப்பதாக இதழ்கள் இருக்க வேண்டும்.

உதாரணமாக, இன்று உழவர்களிடம் எழுந்துள்ள கேள்விகளான, உலகமயமாதலால் வேளாண்மை பாதிக்கப்படுமா? இதனால் நமக்கு நன்மையா? தீமையா? உலக வர்த்தக நிறுவனத்தின் செயல்பாடு என்ன? முழுமையான இயற்கை வேளாண்மை சாத்தியமா? இதனால் உற்பத்தி குறைந்துவிடுமா? பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு வருவதால் ஏற்படும் பாதிப்புகள் என்ன? அதைத் தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்? இயற்கை வளங்களைப் பாதுகாக்காததால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன? எதிர்காலத்தில் வேளாண்மை எப்படி இருக்கும்? இது போன்ற கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதாகவும், இதன் மீதான விவாதத்தைத் தொடர்ச்சியாக எடுத்துச் செல்வதாகவும் படைப்புகள் இருக்க வேண்டும்.

எனவே, இன்றைய நிலையில் வேளாண் அறிவியல் தமிழ் இதழ்கள் தங்களை முற்றாக மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. வளமான ஒரு தமிழகத்தை உருவாக்கும் நோக்குடன் அவை புனரமைக்கப்பட வேண்டும். விளம்பரதாரர்களின் தயவிலும் நிறுவன நிதியின் தயவிலும் நடத்தப்படும் இவ்விதழ்கள் உழவர்களின் ஆதரவில் நடத்தப்பட வேண்டுமானால் மேற்கண்ட மாற்றங்கள் தவிர்க்கப்பட முடியாத வையாகும். இது, வேளாண்மை அறிவியல் தமிழ் இதழ்களின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி தமிழக வேளாண்மை வளர்ச்சிக்கும் அவசியமான தவிர்க்கப் படவியலாத தேவையாகும்.

– முனைவர் **ப. வெங்கடாசலம்**

*– அறிவியல் தமிழ் நூல்களும், இதழ்களும் என்ற நூலிலிருந்து*

*வெளியீடு: அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர் – 613 005.*

* * *

தருமபுரி மாவட்டத்தில்

# உயிர்த்தெழும் பயிர்த்தொழில்

தருமபுரி இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டம். மலையையும் மலைசார்ந்த பகுதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இம்மாவட்டத்தில் தனிநபர் வருமானத்தை உயர்த்துவது என்பது அவ்வளவு எளிதல்ல. மாவட்டத்தின் பெரும்பாலான பகுதி கிராமமாகும். அதில் வாழும் மக்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர். சராசரியாகச் சாகுபடி மேற்கொள்ளப்படும் 1.69 இலட்சம் எக்டேர் பரப்பளவில் 88% சிறு மற்றும் குறு விவசாயி எல்லைக்குட்பட்டே உள்ளது. சவால்கள் வெகு தூரம் இருப்பினும் அதற்கான கூறுகள் மிகவும் குறைவே.

ஆனால், தற்பொழுது இது வெகுவாக மாறி வருகிறது. தருமபுரி மாவட்ட விவசாயிகள் அதிக அளவில் வருமானம் ஈட்டித்தரக் கூடிய மற்றும் சுற்றுச் சூழலில் நிலைத்து நீடித்து இருக்கக் கூடிய புதிய தொழில்நுட்ப அணுகுமுறைகளைத் தைரியமாகக் கையாள முன்வந்துள்ளனர். மாநில அரசின் இத்தகைய ஒருமித்த ஒருங்கிணைக்கக் கூடிய திட்டச் செயல்பாட்டிற்கு விவசாயிகள் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த இரண்டு ஆண்டு காலத் தொடர் மழையின்மையும், வறட்சியும் நெல், கரும்பு மற்றும் நிலக்கடலை பயிர்ச்சாகுபடிப் பரப்பினைக் கணிசமாகக் குறைத்துள்ளது.

ஆனால், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு 2002–2003ஆம் ஆண்டு 19,385 எக்டேரிலிருந்து, 2003–2004ஆம் ஆண்டு 22,378 எக்டேராக பரப்பு அதிகரித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டசபையின் நிதிநிலை அறிக்கை கூட்டத்தின் பொழுது, அனைவரும் உயர்வடையும் நோக்குடன் கூடிய மாற்றுப்பயிர்த் திட்டத்தினை அறிவித்தார்கள். தமிழகத்தில் முத்தாய்ப்பாக இந்த மாற்றுப் பயிர் திட்டத்திற்கான ஓர் செயல் திட்டத்தினைத் தீட்டி முன் நிற்கிறது தருமபுரி மாவட்டம்.

புழுதிக்கரை என்கிற கிராமத்தில் 28.50 ஏக்கர் தரிசு நிலம் சாகுபடி செய்திட ஏற்றதாக்கி, ஜெட்ரோபா, சொர்க மரம் மற்றும் புங்க மரம் ஆகியன வளர்த்து ஓர் தாவர எரிபொருள் உற்பத்தி மாதிரி பண்ணையம் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் சுயஉதவிக் குழுக்களும், அப்பகுதி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுக் குழுக்களும் அதனைப் பராமரித்து அப்பகுதி விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை



| பயிர் | இயல்பான பரப்பு (எக்டரில்) | சாகுபடி பரப்பு (எக்டரில்) | | |
|---|---|---|---|---|
| | | 2002 – 2003 | 2003 – 2004 | 2004 – 2005 (ஆகஸ்ட் 04 வரை) |
| நெல் | 18,259 | 9,170 | 4,035 | 2,585 |
| கரும்பு | 17,038 | 13,553 | 7,548 | 5,524 |
| நிலக்கடலை | 17,648 | 5,391 | 12,932 | 10,685 |

உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாது, இம்மாவட்டத்தில் செயல்படும் 142 நீர்வடிப்பகுதிக் கிராமங்களில் நீர்வடிப்பகுதி ஒன்றிற்கு 5 எக்டேர் வீதம் மொத்தம் 710 எக்டேர் பரப்பளவில் ஜெட்ரோபா சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. சர்க்கரைச்சோளம் மற்றும் சர்க்கரைக்கிழங்கு ஆகியன கரும்புச் சாகுபடி மேற்கொள்ளப்படும் சுமார் 4,000 எக்டேர் பரப்பளவில் மாற்றுப் பயிராகப் பயிரிட விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

நெல், கரும்பு போன்ற பயிர்களுக்குப் பயிர்க் கடன்கள் வழங்குவதைப் போல் காட்டாமணக்கு, சர்க்கரைச்சோளம் மற்றும் சர்க்கரைக்கிழங்கு பயிர்களுக்கும் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ள சாகுபடிச் செலவின விவரங்களை நபார்டு மற்றும் முன்னோடி வங்கிகள் மூலம் பயிர்க் கடன்கள் வழங்கும் பட்டியலில் சேர்த்து, விவசாயிகள் பயிர்க் கடன் பெற மாவட்ட நிருவாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும், மேற்கண்ட பயிர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் (Clusters) சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காகத் தனி திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு அவைகளுக்கு வங்கிகள் 'திட்டங்களின்அடிப்படையில் முதலீடு' (Project Based Investment) செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில அரசின் துல்லியப் பண்ணையம் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் வட்டாரத்தில் வெற்றிச் சின்னங்களாக வெளிவந்து கொண்டிருப்பதும், இதர வட்டாரங்களில் அதனைச் செயல்படுத்திட நாட்டம் செலுத்தவும், இத்திட்டம் மூலம் பலரும் பயனடைவர் என்பதில் ஐயமில்லை. சுமார் 50 விவசாயிகள் தாமே முன்வந்து இத்தகைய திட்டத்தில் பங்கு கொண்டு வருமானம் ஈட்டித்தரும் காய்கறி பயிர்ச் சாகுபடி மேற்கொள்ள உள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ், மின் மோட்டார் அல்லது ஆயில் என்ஜின் உதவியுடன் ஆண்டு முழுமையும் நீர்ப்பாசன ஆதாரம் கொண்ட குறைந்தபட்சம் ஒரு எக்டேர் வயல்கள் தேர்வு செய்யப்படும். இதில் இராசயன உரங்கள் திரவ நிலை உர நிருவாகத்துடன் கூடிய சொட்டு நீர்ப் பாசனம் முறை நிறுவப்படும். இதன் மூலம் பயன் பெறும் விவசாயிகள் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குக் காய்கறிப் பயிர்களைச் சாகுபடி செய்தல் வேண்டும். இதற்கான அனைத்துத் தொழில்நுட்ப ஆலோசனைகளும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மூலம் வழங்கப்படும்.

தேவையினை உணர்ந்து மாறுதலுக்கு உட்பட்ட பயிர்க்கடன் இத்தகைய மாற்றுப்பயிர் திட்டம் செயல்படுத்திட அவசியம். மாவட்ட நிருவாகம் பலரும் விரும்பத்தக்க வகையில், எளிமையாக்கப்பட்ட ரூ. 202 கோடி நிதி ஆதாரம் கொண்ட பல்வேறு பயிர்க் கடன் திட்டம் மூலம் செயல்படுத்திட திட்டமிடப் பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தொகையினைவிட ரூபாய் 108.50 கோடி கூடுதலாகும். கடன் வழங்கும் நிறுவனங்கள் தங்களின் கடன் வழங்கும் வரன்முறைகளை மாற்றி நீடித்த நிலையான வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி ஊக்கப்படுத்திட முன்வந்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் சுயஉதவிக்குழு நன்றாக உள்ளது. இருப்பினும் ஒவ்வொரு சிறு மற்றும் குறு விவசாயக் குடும்பத்திலும் ஒரு உறுப்பினரேனும் ஒரு




பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 118ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 14–11–2004 அன்று, சென்னை கத்திபாரா சந்திப்பில் உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச்சிலைக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்து மரியாதை செலுத்தினர்.

---



சுயஉதவிக் குழு உறுப்பினராகச் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓராண்டிற்கு மேல் சுயஉதவிக் குழுக்களாகச் செயல்பட்டு வருகிறது. மாவட்ட நிருவாகம், வட்டார அளவில் சுய வேலை வாய்ப்பிற்கு வழி வகுக்கும் வகையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது. இத்தகைய பணிகள் தொடர் வறட்சியின் போது விவசாய நிலங்களில் வருமானம் இல்லாத பொழுது, ஒவ்வொரு கிராமக் குடும்பத்திற்கும் வருமானத்தை ஈட்டித்தரும் ஓர் அங்கமாக இருக்கும்.

வேளாண் விரிவாக்கம் எளிமையாக்கப்பட்டு வட்டார அளவில் கருத்தரங்குகளும், விவசாயக் கருத்துப் பரிமாற்றக் குழுக்களும் அமைக்கப்பட்டு துறையின் தொழில் நுட்பம் விவசாயிகளுக்குச் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேளாண் துறையின் பயிற்சி வழி தொடர்பு திட்டம் திருத்தியமைக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பயனுள்ள வகையில் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. தொய்வுடன் காணப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை, புத்துணர்வு ஊட்டப்பட்டு வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்குத் தெரிவித்து விற்பனைத் தொடர்பினை ஏற்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் பயிர்த்தொழில் உயிர்த்தெழ தொடங்கியுள்ளது. சோதனைகள் அதிகமிருப்பினும், வாய்ப்புகள் கூடுதலாக உள்ளது. இதில் ஆரம்ப இடர்பாடுகளும், கஷ்டங்களும் இருக்கும். எனினும், சுற்றுப்புறச் சூழல் பாதகமின்றி வருமானத்தைக் கூட்டித்தரக்கூடிய, மாற்றுப்பயிர்த் திட்டம் தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்கு வழி வகுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**– மூ.நா. கிருட்டிணசாமி,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தருமபுரி.*



# பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும்

– மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா
அவர்கள் ஆணை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும் என்றும், மற்ற மொழிகளும் பெயர்ப் பலகைகளில் உபயோகிக்கப்பட்டால், ஆங்கிலம் இரண்டாவது இடத்திலும், இதர மொழிகள் மூன்றாவது இடத்திலும் இருக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு தனது 29.12.1983–ஆம் நாளிட்ட தொழிலாளர் துறை ஆணை எண். 3312 மற்றும் 29.2.1984–ஆம் நாளிட்ட தொழிலாளர் துறை ஆணை எண்.499 ஆகியவற்றின் மூலமாக ஆணைகள் வெளியிட்டது. இந்த ஆணைகளின்படி, பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துகள், மற்ற மொழி எழுத்துகளைவிட பெரிய அளவில் இருக்க வேண்டும் என்றும், பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழியில் எழுதப்பட்ட பெயருக்கு அதிக இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. இந்த அரசு ஆணைகள் தற்போதும் நடைமுறையில் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் தங்கள் கடைகள் மற்றும் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் இந்த அரசு ஆணைகள் தவறாது கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தற்போது ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையை அமல்படுத்தும் வகையில் தொழிலாளர் ஆணையர் தனது சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளார். 1983 மற்றும் 1984–ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும் என்றும், மற்ற மொழிகள் பெயர்ப் பலகைகளில் உபயோகிக்கப்பட்டால், தமிழ் வடிவம் முதலிலும், ஆங்கில வடிவம் இரண்டாவது இடத்திலும், மற்ற வடிவங்கள் மூன்றாவது இடத்திலும் இருக்க வேண்டும் என்றும், அப்பெயர்ப் பலகைகளில் தமிழ் வடிவத்திற்கு அதிக இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தும் இந்த அரசாணையைத் தீவிரமாக அமல்படுத்துமாறு, தொழிலாளர் ஆணையர் தனது துறையின் சார்நிலைஅலுவலர்களுக்கு அந்தச் சுற்றறிக்கையில் அறிவுறுத்தி உள்ளார். மேலும், அந்தச் சுற்றறிக்கையில், மேற்கண்ட விதிகளின்படி பெயர்ப் பலகைகளை அமைக்காத கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களின் மீது தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள் மற்றும் தமிழ்நாடு உணவு விடுதிகள் விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்து உள்ளார். கடைகள் மற்றும் நிறுவனங்கள் இந்த விதிகளை மீறி நடக்குமாயின், அதற்குச் சம்பந்தப்பட்ட துறை ஆய்வு அலுவலர்களே பொறுப்பாக்கப்படுவார்கள் என்றும் தொழிலாளர் ஆணையர் தமது சுற்றறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

✶




# டைசல்
# உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்**

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10–11–2004 அன்று சென்னை தரமணியில், 62.5 கோடி ரூபாய் செலவில், அமெரிக்க நாட்டின் கார்னெல் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உத்திகளையும், வடிவமைப்பையும் பெற்று, உருவாக்கப்பட்டுள்ள டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவினை (TICEL Bio Park) தொடங்கி வைத்தார்கள்.

உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களுக்கு உலக அளவில் வரவேற்பு உள்ளதாலும், பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்பதாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கும் அதன் மேம்பாட்டிற்கும் ஏற்ற வகையில், உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன், உயிரியல் தொழில்நுட்ப பூங்கா ஒன்றினை அமைத்திட 22–4–2003 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் கார்னெல் பல்கலைக்கழக உதவியுடன், அதன் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப உத்திகளைப் பெற்று, 62.5 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசின் TIDCO நிறுவனத்தின் மூலமாக சென்னை தரமணியில் டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா 1,32,642 சதுர அடி பரப்பளவில் மொத்தம் 6 தளங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில், மொத்தம் 22,000 சதுர அடி பரப்பு கொண்ட தரைத்தளத்தில் நுண்ணுயிரியல் மற்றும் புளித்துப் பொங்கும் திறன் (Micro biology and Fermentation), மூலக்கூறு உயிரியல் (Molecular Biology), தாவரத் திசு வளர்ப்பு (Plant Tissue Culture), விலங்கின திசு வளர்ப்பு (Animal Tissue Culture), பதனிடுதல் (Downstream Processing), பகுப்பாய்வு (Analysis) மற்றும் உயிரியல் சார்ந்த ஆராய்ச்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் வகையில் அனைத்து அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் 6 நவீன சோதனைக்கூடங்கள் அடங்கிய உயிரியல் வாய்ப்பு வள மையம் (Bio Resource Centre) அமைக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி வழங்கவும், இது அறிவார்ந்த திற நுட்பங்களைப் பெற்றிடவும், வீடியோ கலந்தாய்வு மையத்துடன் கூடிய பயிற்சி மையம் ஒன்றும் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு முன்னணி ஆய்வு நிறுவனங்களுடன் சேர்ந்து, ஆராய்ச்சி மேற்கொள்ளவும் டைசல் திட்டமிட்டுள்ளது.

ஏனைய 5 தளங்களும், உயிரியல் ஆராய்ச்சி மையங்கள் நிறுவிட முன்வரும் நிறுவனங்




களுக்கும், தனியாருக்கும் ஒதுக்கீடு செய்து தரப்படும். இந்தப் பகுதிகள், இரண்டு மற்றும் மூன்றாம் நிலை உயிரி பாதுகாப்பு அளவு (Bio Safety Level - BSL-2 & BSL-3) கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்கள் அமைத்திட விரும்புவோர் இந்த இடத்தை வாடகைக்கோ, குத்தகைக்கோ பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் விரும்பினால் விலை கொடுத்து உரிமையாக்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படும். நிறுவனங்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர், அழுத்தக்காற்று, வெற்றிடம் ஏற்படுத்தும் வசதி மற்றும் ஆய்வகப் பணிகளுக்குத் தேவைப்படும் கனிமம் நீக்கப்பட்ட தண்ணீர் ஆகிய வசதிகள் தடையின்றி கிடைத்திட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆய்வகத்திற்குத் தேவையான வடிகட்டப்பட்ட தூய காற்று வசதியளிக்கும் ஒருமுகப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதி, மின்சாரத் தேவைகளை சமாளிக்க 100% ஜெனரேட்டர் வசதிகள், ஆய்வகக் கழிவுகளை செம்மைப்படுத்தி அகற்றுதல் ஆகிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மழை நீர் சேகரிப்பு வசதிகள் உரிய முறையில் செய்யப்பட்டுள்ளன.

தற்போது, டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவில் எஸ்.ஜி.எஸ். இந்தியா நிறுவனம் **15,250** சதுர அடியையும், விம்டா லேப்ஸ் நிறுவனம் **12,200** சதுர அடியையும், பிராண்டியர் லைப் லைன் நிறுவனம் **1,525** சதுர அடியையும் வாடகைக்கு எடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உந்து சக்தியை அளிக்கும் மையமாக டைசல் தொழில்நுட்பப் பூங்கா விளங்கும். இதன் மூலம் முதற்கட்டமாக **1,500** பேர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இதன் செயல்பாடுகளால் அடுத்த **5** ஆண்டுகளில் ரூபாய் **1000** கோடிக்கு உயிரியல் தொழில்நுட்ப முதலீடுகளை தமிழகம் ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்ப மேம்பாட்டின் செயல் மையமாகத் திகழும் வகையில் தரமணியில் **62.5** கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **10–11–2004** அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., தொழில்துறை செயலாளர், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவின் தலைவர் திரு. ரமேஷ் ராம் மிஸ்ரா, இ.ஆ.ப., டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவின் மேலாண்மை இயக்குநர் திரு. கே.ஆர். விசுவநாதன் ஆகியோர் பங்கேற்றனர். ✶

# வீரதீரச் சாகசச் செயல்கள் புரிந்த அதிரடிப்படையினருக்குச் சிறப்பு காவல் பதக்கங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (28.10.2004)



**கா**ட்டுக் கொள்ளையன் வீரப்பனையும், அவனது கும்பலையும் ஒழித்துக் கட்டித் தமிழகம் மற்றும் கர்நாடக மக்கள் அமைதியுடன் வாழ வழி அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினரைக் கௌரவிக்கும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வீட்டு மனைகள் வழங்கப்படும் என்று நான் அறிவித்து, 30.10.2004 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ள விழாவில் இந்தப் பரிசுகளை வழங்க உள்ளேன்.

வீரதீரச் சாகசச் செயல்கள் புரிந்த அதிரடிப் படையினருக்கு மேலும் சிறப்பு செய்யும் வகையில், கீழ்கண்ட 'சிறப்பு காவல் பதக்கங்களை' (Special Police Medals) வழங்கிட நான் முடிவெடுத்துள்ளேன்.

தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையில் பணியாற்றிய காலத்தில் வீரதீரம் மற்றும் சாகசச் செயல்கள் புரிந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்குத் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப்படை வீரதீரச் செயல் பதக்கம்" (Tamil Nadu Chief Minister's Police Medal for Gallantry Bravery and Heroic Action) என்னும் பெயரில் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

வீரப்பனுக்கும், அவனது கும்பலுக்கும் எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளில் காயம் அடைந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்குத் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப்படை வீர விழுப்புண் பதக்கம்" (Tamil Nadu Chief Minister's Special Task Force Injury Medal) என்னும் பெயரில் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்ட வீரதீரச் செயல் பதக்கம் மற்றும் வீர விழுப்புண் பதக்கம் ஆகிய இரு பதக்கங்களைப் பெறுபவர்களைத் தவிர்த்து, சிறப்பு அதிரடிப்படையில் தற்போது பணிபுரியும் அனைவரும் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப்படை பங்கேற்பு பதக்கம்" (Tamil Nadu Chief Minister's Special Task Force Participation Medal) என்னும் பெயரில் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.

மேலும், சிறப்பு அதிரடிப்படையில் இதற்கு முன்னதாகக் குறைந்தது இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து தற்போது வெவ்வேறு பிரிவுகளில் பணியாற்றி வரும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களும் இந்த வெள்ளிப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். அவர்களும் 30.10.2004 அன்று நடைபெறவுள்ள விழாவில் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொள்ள அழைக்கப் படுவார்கள்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை ஒழித்துக் கட்டும் பணியில் முன்னர் நடந்த மோதல்களில் தங்களது இன்னுயிரை இழந்தவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களின் தியாகத்தை மறந்து விடாமல் அவர்களுக்குத் தகுந்த கௌரவம் அளித்திட வேண்டும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

அதன் அடிப்படையில், தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த சிறப்பு அதிரடிப்படை. காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களின் குடும்பங்களுக்குத் தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி 10 இலட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. ஆனால்,

திரு.நாகராஜ் அவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவியாக 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்கப் பட்டிருப்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. எனவே, கருணைத் தொகை மொத்தம் 10 இலட்சம் ரூபாய் என்ற அளவில், ஏற்கெனவே அளிக்கப்பட்ட இந்த 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் போக, மீதமுள்ள 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயை தற்போது ரொக்கமாக அவரது மனைவி திருமதி. மாதேஸ்வரி அவர்களுக்கு வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

அதேபோல, சிறப்பு அதிரடிப்படையில் பணியாற்றி வீரப்பனுக்கு எதிரான முந்தைய நடவடிக்கைகளில் காயமுற்ற காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள், மொத்த நிதி உதவியாக 3 இலட்சம் ரூபாய் பெறும் வகையில், அவர்கள் குழுகாப்பீடாகவும், கருணைத் தொகையாகவும் முன்னர் பெற்ற தொகை போக, மீதமுள்ள தொகையை ரொக்கமாக தற்போது வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். மேலும் காயமடைந்த அனைவருக்கும் அவர்கள் விரும்புகிற இடத்தில் வீட்டுமனை வழங்கிடவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதுவன்றி, காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்த சிறப்பு அதிரடிப்படைக்கு உதவிய வனத்துறை அலுவலர் மற்றும் காவலர்களுக்கு உரிய சிறப்பு செய்திட வேண்டும் என்னும் நோக்கத்துடன், அவர்களுடைய பணியைப் பாராட்டி கீழ்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. முன்பு, சிறப்பு அதிரடிப்படையுடன் சென்று தாக்குதலில் காயம்பட்ட வனவர் திரு.பி.அழகேசன் அவர்களுக்கு, 1 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

2. வனப் பகுதியில் அதிரடிப்படையுடன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட 8 வனச்சரகர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

3. சிறப்பு அதிரடிப்படையுடன் இணைந்து பணியாற்றிய வனவர் (Forester) வனக் காப்பாளர் (Forest Guard) மற்றும் வனக் காவலர் (Forest Watcher) ஆகிய நிலைகளில் உள்ள 42 வன அலுவலர்களுக்கு ஒரு படி பதவி உயர்வும், 1 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

4. வீரப்பனுடன் முன்னர் நடந்த தாக்குதலின் போது 1993–ஆம் ஆண்டில் தங்கள் உயிரினை இழந்த வனத்துறை பணியாளர்கள் இருவரின் குடும்பங் களுக்கு நிதி உதவியாக தலா 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு முன்னதாக வீரப்பனால் கொல்லப்பட்ட சேலத்தைச் சேர்ந்த வனச் சரகர் திரு.வி.சிதம்பரம், அந்தியூரைச் சேர்ந்த வனக் காப்பாளர் திரு.என்.பழனிச்சாமி, திருச்செங் கோட்டைச் சேர்ந்த வனக் காப்பாளர் திரு.எம்.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோரின் குடும்பங்களுக்கு மிகச் சிறிய அளவிலான தொகை மட்டுமே வழங்கப்பட்டிருப்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தமது இன்னுயிரை இழந்த அவர்களது தியாகத்தைப் போற்றி அவர்களது குடும்பங்களுக்கும் தலா மொத்தம் 10 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கும் வகையில், ஏற்கெனவே வழங்கப்பட்ட நிதி உதவி போக, மீதமுள்ள தொகை தற்போது ரொக்கமாக வழங்கப்படும்.

5. காயம் அடைந்த வனவர் திரு.பி.அழகேசன் அவர்களுக்கு தமிழக முதலமைச்சரின் வீரவிழுப்புண் பதக்கமும், வீரப்பனைப் பிடித்திட உதவிடும் வகையில் பணியாற்றிய 50 வனப் பணியாளர் களுக்கு தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப் படை பங்கேற்பு பதக்கமும் வழங்கப்படும்.

6. சிறப்பு அதிரடிப்படையுடன் பணி புரிந்த 105 தினக் கூலித் தோட்டக் காவலர்கள், வனம் மற்றும் தோட்டக் காவலர்களாக முறையான தொகுப்பு ஊதியத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள்.

வீரப்பனை ஒழித்துக் கட்டும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பணியாற்றிய எவரும் – அவர்கள் ஆற்றிய பணி சிறியதாயினும் அல்லது பெரியதாயினும் சரி – அதற்குரிய சிறப்பை அவர்களுக்கு வழங்காமல் விட்டுவிடக் கூடாது என்ற சீரிய நோக்கத்துடன் மேற்காணும் அறிவிப்புகளை நான் வெளியிட்டுள்ளேன். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் பரிசுகளும், பதக்கங்களும் இம்மாதம் 30–ஆம் தேதி நடைபெற உள்ள விழாவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரப்பனை பிடிக்கின்ற பணியில் ஈடுபட்டு தங்களது இன்னுயிரை இழந்த தமிழக சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் வீரத்தை, எதிர்காலச் சந்ததியினரும் போற்றிட வேண்டும் என்பது எனது விருப்பமாகும். எனவே அவர்களது தீரச் செயலை என்றென்றும் நினைவு கொள்ளும் வகையில், நினைவுச் சின்னம் ஒன்றினை எழுப்பிட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நினைவுச் சின்னத்தை காணுகின்ற இளைய தலைமுறையினர் வீர உணர்வுபெற்று, தங்களது வாழ்க்கையில் தீரச் செயல்கள் புரிந்திட இது தூண்டு கோலாக அமையும். இந்த நினைவுச் சின்னம் புதிதாகக் கட்டப்பட உள்ள காவலர் பயிற்சிக் கழக (Police Academy) வளாகத்தில் அமைக்கப்படும்.

வீரப்பனின் கொடுமைக்கு ஆளாகி, அவனால் கொலை செய்யப்பட்ட மலை வாழ் மக்கள் மற்றும் ஏனையோர் பற்றிய முழு விவரங்களை உடனடியாகச் சேகரிக்குமாறு அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டு உள்ளேன். இது பற்றிய விவரங்கள் கிடைக்கப்பெற்ற உடன், அந்தக் குடும்பங்களுக்கு தகுந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு, அவர்கள் மறுவாழ்வு பெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவு அடைகிறேன்.

❖ ❖ ❖

# தமிழ்நாடு காவல்துறை இந்தியாவிலேயே இணையற்ற காவல்படை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



இந்நாள் தமிழகக் காவல் துறை வரலாற்றிலேயே ஒரு பொன்னாள்! தமிழகக் காவல் துறைக்கு மட்டும் அல்லாமல் தமிழகம் முழுமைக்குமே ஒரு திருநாள்!

தமிழக வரலாற்றில் 2004–ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஆண்டாக ஆகியிருக்கிறது. இல்லை, ஆக்கப்பட்டிருக்கிறது! நாம் ஆக்கி இருக்கிறோம்! கடந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலே எடுக்கப்பட்ட முயற்சிக்கு இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே வெற்றி கிடைத்து இருக்கிறது.

இது மகத்தான வெற்றியா? ஆம், மகத்தான வெற்றி தான்! 20 ஆண்டுகளாக இரவும் பகலும் நடைபெற்று வந்த ஒரு போராட்டம் இருபதே நிமிடங்களில் முடித்து வைக்கப்பட்டு இருக்கிறது என்பது சாதாரண விஷயமா? அந்த வெற்றி சாதாரண வெற்றியா? அந்த வெற்றியைச் சாதித்துக் கொடுத்த நீங்கள்தான் சாதாரணமானவர்களா?

அசாதாரண ஆற்றலோடு, அசாதாரணப் பொறுமையுடன், அசாதாரண விவேகத்தின்

துணையோடு, அசாதாரண வீரத்தால், அசாதாரண வெற்றியைப் படைத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்களாகிய உங்களைப் பாராட்டச் சாதாரண விழா போதாது என்றுதான் இந்த மகத்தான விழாவுக்கு நான் ஏற்பாடு செய்தேன்.

உங்களோடு இன்று உங்கள் குடும்பத்தாரும் இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன்.

இத்தனை சிறப்புகளை இன்று நீங்கள் பெறுவது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அந்தச் சிறப்புகளை உங்கள் குடும்பத்தார் சூழ்ந்திருக்க நீங்கள் பெறுவதோ உங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கும். அதைக் கண்ணார நேரில் காண்பதில் உங்கள் குடும்பத்தாரும் களிப்படைவார்கள். அதற்காகவே வீரப்பனையும் அவன் கூட்டாளிகளையும் வீழ்த்திய உங்களுக்குப் பாராட்டு விழாவை உங்கள் குடும்பத்தார் முன்னிலையிலேயே நடத்த நான் விரும்பினேன்.

போராடும்போது தனியாக நின்றீர்கள்! பெற்ற வெற்றிக்கு வாகை சூடும் வேளையிலோ குடும்பத்தாருடன் வந்திருக்கிறீர்கள்! அன்று ஒரு தாய் பெற்ற மக்களாகப் போராடினீர்கள்! இன்று ஒரே குடும்பமாகக் கூடியுள்ளீர்கள். இந்தக் காட்சியின் மாட்சிக்காகவே இத்தனை ஏற்பாடுகளைச் செய்து, இந்த விழாவை மறக்க முடியாத விழாவாக நான் உங்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறேன்.

இரக்கமற்ற கொடியவன் வீரப்பனையும் அவன் கூட்டாளிகளையும் எதிர்த்து நடத்திய அசுர வேட்டை 20 ஆண்டு காலம் நடைபெற்றது. 20 நிமிட சாகசச் செயல் அதற்கு வெற்றிகரமாக முற்றுப் புள்ளி வைத்தது.

இரண்டே வரிகளில் இவ்வாறு சுருங்கச் சொன்னாலும் இடைப்பட்ட காலத்தில் வீரப்பன் நடத்திய கொலைகள் எத்தனை? கொள்ளைகள் எத்தனை? கொடுமைகள் எத்தனை? அவற்றை எதிர்த்துக் காவல் துறை வீரர்களும், வனத் துறை வீரர்களும், பொது மக்களும் செய்த தியாகங்கள் தான் எத்தனை, எத்தனை?

மனித உயிர்களை மலிவாகக் கருதிய வீரப்பன் செய்த படுகொலைகள், அழித்து நாசமாக்கிய அரிய வன வளங்கள், கொன்று குவித்த யானைகள் – ஆகியவற்றைக் கண நேரம் நினைத்துப் பாருங்கள்.

இவற்றை எல்லாம், பொறுப்புள்ள எந்த அரசால் தான் சகித்துக் கொள்ள இயலும்? எனவேதான் பயங்கரக் கொள்ளைக்காரனும் அவனுடைய கூட்டாளிகளும் ஏற்படுத்தி வந்த இன்னல்களுக்கு முடிவு கட்டும் வகையில் 1993–ஆம் ஆண்டு நான் சிறப்பு அதிரடிப்படையை உருவாக்கினேன். 1996–ஆம் ஆண்டு என்னுடைய ஆட்சிக் காலம் முடிவடையும் வரையில் வீரப்பனைப் பிடிக்கும் முயற்சிகள் தொய்வு இல்லாமல் தொடரப்பட்டன. வீரப்பனின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. அவனுடைய கூட்டாளிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது.

தமிழ்நாடு காவல் துறை சிறந்த காவல் படை – இந்தியாவிலேயே இணையற்ற காவல் படை – என்பதை நான் எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கிறேன். தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும் எனக்கு எப்போதும் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. பணியின் கடுமை காரணமாகவும், பொல்லாதவர்களின் பொய்ப் பிரச்சாரம் காரணமாகவும், உங்கள் மீது உங்களுக்குக் கூட கொஞ்சம் நம்பிக்கை குறைந்து இருக்கலாம். ஆனால், இந்த நாட்டிலேயே உங்கள் மீது வைத்த நம்பிக்கை ஒரு சிறிதும் குறையாதவர் ஒருவர் உண்டு என்றால், அவர் உங்கள் அன்புக்குரிய முதலமைச்சர் ஒருவர் தான்.



ஆனால், அதற்குப் பின் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு வீரப்பனைப் பிடிப்பதில் ஏதாவது அக்கறை காட்டியதா? அந்த அரசு நான் அமைத்த சிறப்பு அதிரடிப்படையின் நடவடிக்கைகளை நிறுத்தியது; அதனைச் செயல் அற்றதாக ஆக்கியது. அதனால் சிறப்பு அதிரடிப்படை பயன் அற்றதாகப் போனது. இது தானே முந்தைய ஆட்சியில் நடந்தது?

2001–ஆம் ஆண்டு நான் மீண்டும் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றேன். உடனே, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்குப் புத்துயிர் அளித்தேன். அதை உயிர்த் துடிப்புள்ளதாக ஆக்கினேன். நான் பொறுப்பு ஏற்ற பிறகுதான், தமிழக சிறப்பு அதிரடிப் படைக்கும், கர்நாடக அதிரடிப் படைக்கும் சுமுகமான அணுகுமுறை ஏற்பட்டது. சிறப்பு அதிரடிப் படைக்கான வீரர்களை உடல் தகுதி மற்றும் மன உறுதி ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களது ஆர்வத்தினைக் கருத்தில் கொண்டு தெரிவு செய்ததோடு, நவீன ரக துப்பாக்கிகள், புதிய வகைக் கருவிகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை அவர்களுக்கு வழங்கினேன். உளவுப் பிரிவுத் தகவல் என்பது எந்த ஒரு நடவடிக்கையின் வெற்றிக்கும் அடிப்படையான ஆதாரம் என்பதால் நுண்ணறிவுப் பிரிவைப் பலப்படுத்தினேன். இத்தனைக்கும் மேலாக கொடியவன் வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதிரடிப்படையை முற்றிலும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தேன்.

இவ்வாறு இன்றைய வெற்றிக்கான ஒவ்வொரு அம்சத்தையும் தீர்க்கமாக ஆராய்ந்து தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்குத் தேவையான வசதிகளை எல்லாம் வழங்கி அதற்கு இலக்கையும் நான் நிர்மாணித்துத் தந்தேன்.

வீரத்தில் சிறந்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்களாகிய நீங்களும் பசி, தாகம் இவற்றை மறந்து கண் துஞ்சாது கடமையிலே கருத்தாய் இருந்தீர்கள். அப்படி இருந்தும் இவற்றுக்கெல்லாம் பாராட்டு கிடைத்ததா? பாராட்டு கிடைக்காவிட்டால் கூடப் பரவாயில்லை! எள்ளி நகையாடியவர் எத்தனை பேர்! வீரப்பனைப் பிடிக்க மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் சிலரால் கேலி செய்யப்பட்டனவே! 2003–2004–ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கை மீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பதில் அளிக்கும் போது ஏளனம் செய்தவர்களுக்கும், எகத்தாளமாய்க் கேள்வி கேட்டவர்களுக்கும் ஏற்ற பதிலை நான் அளித்தேன்.

ஐந்தாண்டு காலம் எனக்கு முன் ஆட்சி நடத்தியவர்கள் என்ன செய்தார்கள்? வீரப்பனோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள்!

குப்பை மீது கோழி பிடிக்கப் போனவர்கள் ––

கோழிப் பிடிப்பதாகப் பாவலா காட்டிக் கொண்டிருந்தவர்கள் ––

'கோழியே கோழியே! நீ முட்டை கொடுத்தால் போதும், நிச்சயம் உன்னைப் பிடிக்க மாட்டோம்!' என்று திருட்டுக் கோழியிடம் திரை மறைவு ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் ––

'தூதர்கள்' என்று அழைக்கப்பட்டவர்களின் துணையோடு பேரம் பேசியவர்கள்--

கடத்தப்பட்டவர்களை மீட்கும் நாடகத்துக்குக் கதை வசனம் எழுதியவர்கள் --

அதில் காசு பார்த்தவர்கள் --

இவர்கள் எல்லாம் யார் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்; நாட்டு மக்களும் மிக நன்றாக அறிவார்கள்.

இப்படி தீமைக்குப் பக்க மேளம் வாசித்துக் கொண்டிருந்தவர்கள் பகடி செய்த போதும் சட்டமன்றப் பேரவையில் நான் அன்று சொன்ன

தமிழ்நாடு காவல் துறை சிறந்த காவல் படை – இந்தியாவிலேயே இணையற்ற காவல் படை – என்பதை நான் எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கிறேன். தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும் எனக்கு எப்போதும் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. பணியின் கடுமை காரணமாகவும், பொல்லாதவர்களின் பொய்ப் பிரச்சாரம் காரணமாகவும், உங்கள் மீது உங்களுக்குக் கூட கொஞ்சம் நம்பிக்கை குறைந்து இருக்கலாம். ஆனால், இந்த நாட்டிலேயே உங்கள் மீது வைத்த நம்பிக்கை ஒரு சிறிதும் குறையாதவர் ஒருவர் உண்டு என்றால், அவர் உங்கள் அன்புக்குரிய முதலமைச்சர் ஒருவர்தான்.



வாசகம் இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

"வீரப்பனைப் பிடிப்பது ஒன்றுதான் பாக்கி. அதையும் விரைவில் செய்து முடிப்போம்" என்று அன்று நான் முழக்கம் இட்டேன்.

சொன்னதைச் சொன்னபடி இன்று நீங்கள் நடத்திக் காட்டி இருக்கிறீர்கள்!

'மாயமான் மாரீசன்' போல எப்போதும் நழுவி வந்தான் வீரப்பன். அந்த வீரப்பனையும், அவன் கூட்டாளிகளையும் நிச்சயம் நீங்கள் பிடிப்பீர்கள்; அல்லது முடிப்பீர்கள் என்பதை நான் அறிந்திருந்தேன்.

20 ஆயிரம் சதுர மைல் பரப்புள்ள அடர்ந்த காடு! அங்கே விஷம் கக்கும் பாம்புக்கும், கொட்டும்




தேளுக்கும், கடும் புலிக்கும், கரடிக்கும், கடும் பசிக்கும், கொடு நோய்க்கும் அஞ்சாது குள்ள நரி வீரப்பனின் கொடுமைகளுக்கும் பயப்படாது அயராது பாடுபட்டு அக்டோபர் 18–ஆம் நாள் கொடுமையைக் கொன்று அமைதியை மீட்டுத் தந்த வீரர்களே, உங்களைப் பாராட்டுகிறேன்!

அபாயகரமான இந்தப் பணியை விரும்பி மேற்கொண்டு தங்கள் குடும்பங்களை விட்டுப் பல ஆண்டுகளாகப் பிரிந்திருந்து தங்கள் பாதுகாப்பையும் தங்கள் இல்லத்தின் வசதிகளையும் துறந்திருந்த சிறப்பு அதிரடிப் படையின் தலைவரும், கூடுதல் காவல் துறை இயக்குநருமாகிய திரு. கே. விஜயகுமார் முதலாக, சிறப்பு அதிரடிப் படையின் கடைசிக் காவலர் வரைக்கும் – அதிகாரிகள் முதலாக சமையல்காரர் மற்றும் ஏவலர் வரைக்கும் உள்ள அனைவருக்கும் – கொலைகாரப் பேரழிவில் இருந்து நமது மக்களைக் காப்பாற்றியுள்ள அற்புதச் சாதனைக்காக ஒவ்வொருவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வீட்டு மனை ஆகியவற்றை நான் மகிழ்ச்சிப் பெருக்கோடு வழங்கியுள்ளேன்.

அது மட்டுமின்றி, உங்களது செயல்திறனை அறிந்து நீங்கள் புரிந்துள்ள தியாகத்தை உணர்ந்து வீரதீர சாகசச் செயல்கள் ஆற்றியமைக்கும், வீரவிழுப்புண் பெற்றமைக்கும் இப்பணியில் பங்கேற்றமைக்கும் மனமுவந்து பாராட்டி, தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை அணிவித்து மகிழ்ந்துள்ளேன்.

இரக்கமில்லா அரக்கன் வீரப்பனை ஒழித்துக் கட்டும் பணியில் துணிவுடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் ஒருவர் கூட உரிய சிறப்புச் செய்யப்படாமல் விடுபட்டுவிடக் கூடாது என்ற உணர்வுடன் சிறப்பு அதிரடிப் படையுடன் இணைந்து பணியாற்றிய வனவர் முதல் வனத் தோட்டக் காவலர் வரையிலான வனத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கும் ஒரு படி பதவி உயர்வு, ரொக்கப் பரிசு ஆகிய பரிசுகள் வழங்கியும், வீரப் பதக்கங்கள் அணிவித்தும் கௌரவித்துள்ளேன்.



வீரப்பனைப் பிடிக்கின்ற பணியில் ஈடுபட்டு தங்களது இன்னுயிரை இழந்த தமிழக சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் வீரத்தை எதிர்காலச் சந்ததியினர் போற்றிட வேண்டும் என்பதற்காக, அவர்களது தீரச்செயலை என்றென்றும் நினைவுகொள்ளும் வகையில் நினைவுச்சின்னம் ஒன்றினைப் புதிதாக கட்டப்பட உள்ள காவலர் பயிற்சிக் கழக வளாகத்தில், அதாவது Police Academy வளாகத்தில் அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நினைவுச் சின்னத்தைக் காணுகின்ற இளைய தலைமுறையினர் வீர உணர்வு பெற்று இந்த நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காகத் தன்னலம் கருதாது உழைத்திடவும் – தங்களது வாழ்க்கையில் தீரச் செயல்கள் புரிந்திடவும் – இது தூண்டுகோலாகத் திகழும்.

தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை பெற்ற வெற்றியை இன்று நாடு பாராட்டுகிறது. ஏன்? உலகமே பாராட்டுகிறது. ஆனால், சில உள்ளூர் மனிதர்களுக்குப் பாராட்ட மனம் வரவில்லை. ஒரு வேளை அவர்களது மனம் பாராட்ட நினைத்தாலும், அவர்களது வாய் ஒத்துழைக்க மறுக்கிறதோ என்னவோ! காரணம், என்றைக்கும் நல்லதை அவர்கள் பாராட்டியதே இல்லை. 20 ஆண்டு காலப் போராட்டத்துக்கு இறுதியில் ஒரு வெற்றி கிடைத்து இருக்கிறது. இது இமாலய வெற்றி! உலகமே அதைக் கொண்டாடும் போது ஒரு சிலர் அதைப் பற்றி என்ன குறை சொல்லலாம் என்பதிலேயே குறியாக இருக்கிறார்களே? அவர்களைப் பற்றி என்ன சொல்வது? அதிரடிப்படையினரின் வீரத்தையும், தீரத்தையும் அவர்கள் செய்த தியாகத்தையும் கொச்சைப்படுத்துகின்ற இவர்களைப் பார்த்து இந்த நாடே எள்ளி நகையாடுகிறது.

இந்த நேரத்தில் காவல் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் உங்கள் வாயிலாக நான் ஒரு வேண்டுகோளை முன் வைக்கிறேன். தீரத்தில் சிறந்த தமிழகக் காவல் துறை, திறமையில் சிறந்த தமிழகக் காவல் துறை, உழைப்பில் சிறந்த தமிழகக் காவல் துறை பழி வராத வண்ணம் பணியாற்ற வேண்டும். புகழ் வரும் என்றால் அதற்காக உயிரையும் தரலாம். ஆனால், பழி வரும் என்றால் உலகமே பரிசாகக் கிடைத்தாலும் அதனை ஒதுக்கி விட வேண்டும். இது தானே தமிழர் நெறி!

தமிழர்கள் நுண்ணறிவு மிக்கவர்கள். தமிழகக் காவல் துறை நுட்பமாக உணரும் திறன் உடையது. ஆகவே, வாழ்வாங்கு வாழ வழி சொன்ன வள்ளுவப்

பெருமானின் வாய் மொழி ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்"

ஒருவரது பெருமைக்கும், அவரது சிறுமைக்கும் அவர் செய்யும் செயலே உரை கல்லாகும் என்பது தான் இந்தக் குறளின் பொருள். இந்தத் திருக்குறளை தமிழகக் காவல் துறையினர் என்றைக்கும் நினைவில் கொள்ள வேண்டும்; நிச்சயம் பின்பற்ற

கொடியவன் வீரப்பனைப் பிடித்தே ஆக வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் திரு. வால்டர் தேவாரம் அவர்களை அதிரடிப்படைத் தலைவராக முதலில் நான் நியமித்தேன். திரு.தேவாரம் அவர்கள் சிறப்புடன் பணியாற்றி 100 பேராக இருந்த வீரப்பன் கும்பலை ஐந்து பேராகக் குறைத்தார். அடர்ந்த காட்டின் உட்பகுதியில் இருந்து கொண்டு தமிழகத்தின் நலனைத் துச்சமென நினைத்த தீயவர்களின் துணையுடன் தமிழகத்தை ஆட்டிப் படைக்க எண்ணிய வீரப்பனின் மன உறுதியைக் குலைத்து அவனது நம்பிக்கையைத் தகர்த்தார்.




வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு! இது என் எதிர்பார்ப்பு மட்டும் அல்ல, இந்த நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் கூட!

நீங்கள் மகத்தான செயலைச் செய்துதான் மகத்தானப் புகழைப் பெற்று இருக்கிறீர்கள். செயல் என்பது செடியானால் புகழ் என்பது பூவாகும்! புகழ் என்பது வீரச் செயலின் விழுமிய நறுமணம்! அந்த நறுமணத்தை உணர்ந்த நன்றிப் பெருக்குதான் இன்று நடைபெறும் இந்த விழா!

அதே போல, இன்றைக்குச் சென்னை மாநகரத்தின் காவல் துறை ஆணையராகப் பணியாற்றி கொண்டிருக்கும் திரு. ஆர்.நடராஜ் அவர்கள் வீரப்பனை ஒழித்துக் கட்டிய இன்றைய வெற்றிக்கு அடித்தளம் அமைத்துத் தந்தார். திரு. ஆர். நடராஜ் சிறப்பு அதிரடிப்படையின் தலைவராக இருந்து கொலைகாரன் வீரப்பனுக்கு அஞ்ச வேண்டியது இல்லை என்ற துணிவை மலைவாழ் மக்களுக்கும் உள்ளூர் பகுதி மக்களுக்கும் அளித்தார். அவர்களின்

மேம்பாட்டுக்காக உளப்பூர்வமாகப் பணியாற்றி சிறப்பு அதிரடிப்படையின்பால் அவர்களை நம்பிக்கை கொள்ள வைத்தார். உளவுத் தகவல்களைத் துல்லியமாகப் பெற்றிடும் வகையில் நுண்ணறிவுப் பிரிவைப் பலப்படுத்தினார். வீரப்பனை எப்படியும் வெற்றிக் கொண்டே தீருவோம் என்று சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் உறுதி பூண ஒரு தூண்டுகோலாகத் திகழ்ந்தார்.

இப்படி தனக்கு முன்னே இருந்த சிறப்பு அதிரடிப் படைத் தலைவர்கள் அமைத்து தந்த அடித்தளத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு வீர உணர்வையும், விழுமிய திறத்தையும் வெளிப்படுத்தி மதி நுட்பத்துடன் சிறந்த உத்திகளைக் கையாண்டு இன்றைய சிறப்பு அதிரடிப்படைத் தலைவர் திரு. கே. விஜயகுமார் வீரப்பனை ஒழித்துக் கட்டியதன் மூலம் மகத்தான சாதனை படைத்துள்ளார். திரு. விஜயகுமார் அவர்கள் நிகழ்த்தியுள்ள இந்தச் சாதனை, உலகப் புகழ்மிகு சாதனை! காலம் காலமாகச் சரித்திரத்திலே இடம் பெறப் போகும் சாதனை!

இப்படிப்பட்ட சரித்திரச் சாதனை படைத்த இவர்களுக்குத் தங்கப் பதக்கம் அணிவித்துப் பரிசுகள் வழங்கியதில் உள்ளபடியே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

'செயலைச் செய்! பலனை எதிர்பாராதே!' என்கிறது பகவத் கீதை. எல்லாச் செயலுக்கும் பலன் உண்டு. ஆனால் பலனை நினைத்துக் கொண்டே இருப்பவர்களால் செயலைச் சிறப்பாகச் செய்ய முடியாது. நீங்கள் பலன் கருதாது பாடுபட்டீர்கள்; இன்று உங்களுக்குக் கை மேல் பலன் கிடைத்து இருக்கிறது! சாதாரண பலன் அல்ல! உங்கள் தலைமுறைகள் நினைவு கூறப்போகிற பலன்! எதிர்காலத்தில் உங்கள் பேரப் பிள்ளைகள் "என்ன Reward கிடைத்தது தாத்தா?" என்று கேட்டால், "இதோ Award கிடைத்தது" என்று சொல்லி ஒரு பதக்கத்தை மட்டும் காட்டாமல், "என்ன Reward என்றா கேட்டாய்? இன்றைக்கு நாம் இருக்கிற இந்த இடமே என் வீரத்துக்குப் பரிசாக எங்கள் முதலமைச்சர் அம்மா கொடுத்தது அல்லவா!" என்று நீங்கள் கூறும் வண்ணம் உங்களது வீரத்துக்குப் பரிசாக வீட்டு மனை வழங்கியிருக்கிறேன்.

வீரத்துக்கு வீட்டு மனை பரிசா? என்று சிலர் வினாத் தொடுக்கலாம். எந்தத் தமிழ் நிலத்தை வன்முறைக்காரர்களிடம் இருந்து மீட்க நீங்கள் போராடினீர்களோ, அந்த நிலத்திலே ஒரு சிறு பகுதியை உங்களுக்குப் பரிசு அளிப்பதுதானே பொருத்தம்?

எந்தப் பதவியில் இருந்து கொண்டு நீங்கள் தீமையை அழிக்கப் போராடினீர்களோ, அந்தப் பதவிக்கு ஒரு படி மேல் உங்களை உயர்த்தி உட்கார வைப்பதுதானே முறை?

காட்டுப் பொருள்களைக் கொள்ளையடித்த கொள்ளையர்களுக்கு நாட்டுப் பொருளையும் தாரை வார்த்தார்களே? அந்தக் கூட்டுக் கொள்ளைக்கு முடிவு கட்டிய உங்களுக்குத் தக்க பரிசு என்பது ரொக்கப் பரிசாய்த் தானே இருக்க முடியும்?

எனவேதான், இங்கே உங்களுக்கு முப்பரிசை நான் வழங்கி இருக்கிறேன்.

தமிழகக் காவல் துறைக்கு, உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்த உங்களுக்குத் தமிழக மக்கள் சார்பாக என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்!

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை என்றும் சரித்திரம் சொல்லும்!

என்பதைத் தெரிவித்து, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தமிழக சிறப்பு அதிரடிப்படையினர்
மற்றும் வனத்துறையினரைப் பாராட்டி
பரிசுகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
30.10.2004 அன்று ஆற்றிய உரை.

# விண்ணில் பாய்ந்த முதலாவது கல்விக்கான செயற்கைக் கோள்



இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் தமது புவிநிலை செயற்கைக்கோள் செலுத்து வாகனமான ஜிஎஸ்எல்வி – எஃப்–1 மூலம் நாட்டின் முதலாவது கல்விப் பணி செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி வரலாறு படைத்துள்ளது. சென்னையிலிருந்து 80 கி.மீ. தொலைவில் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதிஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து கல்விச் செயற்கைக்கோளை தாங்கியவாறு ஜிஎஸ்எல்வி செலுத்து வாகனம் விண்ணில் வெற்றிகரமாகப் பாய்ந்தேறியது.

19.9.2004 அன்று அதிகாலை ஒரு மணிக்கு தொடங்கி செயற்கைக்கோள் செலுத்துவதற்கான கால அட்டவணை குறித்த காலத்தில் முடிவடைந்து மாலை சரியாக 4.01 மணிக்கு ஜிஎஸ்எல்வி செலுத்து வாகனம் வானில் பாய்ந்தது. சதீஷ் தவான் விண்வெளி தளத்தில் கூடியிருந்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் பலத்த கையொலிக்கிடையே ஜிஎஸ்எல்வி வாகனம் தமது இலக்கை நோக்கி சீறிப் பாய்ந்தது.

ஜிஎஸ்எல்வி ரக வாகனங்கள் திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் தயாரிக்கப்படுகின்றன. 2001 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ஜிஎஸ்எல்வி வாகனங்கள் வளர்ச்சி ஆய்வு நோக்கங்களுக்காக செலுத்தப்பட்ட நிலையில், தற்போது விண்ணில் பாய்ந்த ஜிஎஸ்எல்வி–எஃப்–1 செலுத்து வாகனம் இந்த ரக வாகனங்களில் முதலாவது முழுமையான பயன்பாட்டு வாகனமாகும்.

ஏஜுசாட் எனப்படும் கல்விக்கான செயற்கைக்கோள் நாட்டின் கல்வித்துறையில் பெரும் புரட்சியை உருவாக்கக் கூடியதாகும். டிடிஎச் எனப்படும் வீட்டிற்கே நேரடி ஒளிபரப்பு எனும் அதிநவீன தொழில் நுட்பத்தின்மூலம் தொலை தூரக் கல்வி வசதிகளை வீடுகளுக்கே கொண்டு சேர்க்க இந்த செயற்கைக்கோள் உதவும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு முழுமையாக சேவை வழங்கும் வகையில் ஏஜுசாட் செயற்கைக்கோள் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் ஐந்து சமிக்ஞை அனுப்பிகள் நாட்டின் வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களுக்கு முழுமையாக சேவையாற்றும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.

செலுத்து நிலையில் 1,950 கிலோ எடையுள்ள ஏஜுசாட் செயற்கைக்கோளில் 1,110 கிலோ அளவிற்கு அதன் சுற்றுப்பாதை நிலைப்பாட்டிற்கும், பராமரிப்பிற்கும் தேவையான எரிபொருட்கள்அடங்கியுள்ளன. ஏழு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பணியாற்றும் அளவிற்கு இந்த செயற்கைகோள் உருவாக்கப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து 35,985 கிலோ மீட்டர் உயரத்தில் புவிவட்டப் பாதையில் இந்த செயற்கைகோள் நிறுத்தப்பட்டுள்ளது.எஜீசாட் செயற்கைக்கோள்களுடன் இணை நிலையில் நிறுத்தப்படும்.

புவியின் சுற்றுப்பாதையில் விடப்பட்டபின் இந்த செயற்கைக்கோளில் இரண்டு சூரிய மின்தகடுகள் செயல்படத்துவங்கின. இந்தோனேஷியா நாட்டில் பியாக் தீவிலிருந்து செயல்படம் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தின் மூலம் செயற்கைக்கோள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. செயற்கைக்கோள் செலுத்தப்பட்ட பிறகு தேவைப்படும் அனைத்து கட்டுப்பாடுகளும் கர்நாடக மாநிலம் ஹசனில் அமைந்துள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்தது கண்காணிக்கப்படுகிறது. இப்பணிக்கு தேவையான உதவிகளை கனடா நாட்டின் லேக் கொவிச்சன் இத்தாலியின் ஃபுசினோ மற்றும் சீனாவில் அமைந்துள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையங்கள் ஹசனில் உள்ள நிலையத்துக்கு கண்காணிப்பு பணிகளில் உதவி வருகின்றன. வரும் நாட்களில் ஏஜுசாட் செயற்கைக்கோள் தற்போதுள்ள புவியின் நீள்வட்ட பாதையிலிருந்து இறுதி சுற்றுப்பாதைக்கு உந்தப்படும்.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்கள் ஆகிய நிலைகளில் கல்வித் தொடர்பு

# காவல்துறை அதிகாரிகளுக்கு மகாத்மா காந்தி காவல்துறைப் பதக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

அறிவிப்பு

---

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் கள்ளச்சாரயத்தை ஒழிப்பதில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியதற்காக தமிழக காவல் துறையைச் சேர்ந்த நான்கு காவல்துறை அதிகாரிகள், 2004ஆம் ஆண்டிற்கான "மகாத்மா காந்தி காவல்துறைப் பதக்கம்" வழங்கப்பட தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

காந்தி ஜெயந்தியை ஒட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்தப் பதக்கங்களைப் பெறுபவர்களில் 1) செல்வி பி.கே.செந்தில்குமாரி, காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, செங்கை கிழக்கு மாவட்டம் 2) திருமதி. லஷ்மி சுப்பிரமணியன், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, விழுப்புரம் மாவட்டம் 3) திரு.ஏ.எஸ்.நந்தகுமார், காவல்துறை துணை கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கோவை மாவட்டம் 4) திரு.ஆர்.சுசில்குமார், ஆய்வாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, சென்னை ஆகியோர் அடங்குவர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும் இந்தப் பதக்கங்களுடன் ஒவ்வொரு வருக்கும் ரூபாய் பத்தாயிரத்துக்கான ரொக்கப் பரிசும் வழங்கப்படும். "மகாத்மா காந்தி காவல் துறை பதக்கங்கள்" வருகின்ற குடியரசு தினத்தன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்படும். ❖

---

சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப் பட்டுள்ள இந்தசெயற்கைக்கோள் முறைசாரா கல்விக்கும், வளர்ச்சிப் பணி பற்றிய தகவல் தொடர்புக்கும் பயன்படும்.

முதல் நிலையில் ஏற்கெனவே இயங்கி வரும் இன்சாட்– 3பியில் அமைந்துள்ள சமிக்ஞை அனுப்பி பயன்படுத்தப் படும். இந்நிலையில் கர்நாடகா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் பயனடையும்.

இரண்டாவது கட்டத்தில், குறிப்பிடப்பட்டுள்ள புவி நிலையில் ஏஜுசாட் செயற்கைக்கோள் நிலை நிறுத்தப்பட்ட பின் நாட்டின் ஐந்து மண்டலங்களுக்கும் குறைந்தபட்சம் ஒருஇணைப்பு மூலம் சேவை வழங்கப்படும். இந்நிலையில் ஒவ்வொரு மண்டலத்திலும் 200 பள்ளிகள் வரை பயன் பெறுவதோடு கூடுதலாக இரண்டு மாநிலங்களும் ஒரு தேசிய ஆய்வு நிறுவனமும் பயனடையும்.

மூன்றாவது கட்டத்தில் ஏஜுசாட் செயற்கைக்கோள் கட்டமைப்பு முழுமையான செயல் திறனைப் பெற்று 30 இணைப்புகள் வரை வழங்கக் கூடிய நிலையில் செயல்படும். இதன் ஒவ்வொரு இணைப்பின் மூலமும் சுமார் 5,000 தொலைதூர முனையங்கள் பயன்பெறும்.

ஏஜுசாட் செயற்கைக்கோளுக்குத் தேவையான விண்வெளிப் பகுமானத்தையும், செயல் திறனையும் செயற்கைக்கோள் வாயிலான இருதரப்பு தொலை தூரக் கல்விக்கான வசதிகளையும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் வழங்கும். இச்செயற்கைக்கோள் மூலமான கல்வித் திட்டங்களை வகுப்பது இதனை பயன்படுத்திக்கொள்ளும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்ததாகும். உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு செலுத்தப்பட்டுள்ள ஏஜுசாட் செயற்கைக்கோள் நாடு தழுவிய தொலைதூரக் கல்விக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



– பத்திரிகைத் தகவல் அலுவலகம்,
சென்னை.

# கண் பாதுகாப்பு

கண் நமது உடலில் உள்ள மிக முக்கியமான உறுப்புகளில் ஒன்று. கண் பழுது ஆகிவிட்டால், ஒருவரது வாழ்க்கையே மிகவும் பாதிக்கப்படும். அத்தகைய கண்ணானது பல வழிகளில் பாதிப்படைய வாய்ப்புகள் உண்டு. அவற்றில் மிக முக்கியமானது விபத்துகளால் கண்ணில் ஏற்படும் காயங்கள், ஏற்படக்கூடிய பல்வேறு சாத்தியக் கூறுகளையும், அவற்றைத் தவிர்க்கக்கூடிய வழிமுறைகளையும் பார்ப்போம்.

காயங்களால் கண் பாதிப்பு ஏற்படுவோரில் சிறுவர்கள் மிக முக்கியமானவர்களாவார்கள். பல்வேறு கூர்மையான விளையாட்டுப் பொருட்கள், வில் அம்பு, கில்லி தாண்டு அல்லது கட்டிப்புள், கூர்மையான குச்சிகள், பென்சில், பேனா, விசைத் துப்பாக்கி போன்றவைகளை வைத்து விளையாட அனுமதிக்கக் கூடாது. கத்தி, கத்திரிக்கோல், காம்பஸ் போன்ற கூர்மையான பொருட்களை அவர்கள் வைத்திருக்கும் போது நாம் கண்காணிக்க வேண்டும். மேலும் அவர்கள் உபயோகிக்கும் விளையாட்டுப் பொருட்கள் அவர்களை மட்டுமின்றி, அருகில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் மற்றவர்களையும் பாதிக்கலாம். மேலும் சிறுவர்கள் ஒருவரோடு ஒருவர் விளையாடும் போது அவர்களது கை மற்றும் விரல் நகம் போன்றவற்றாலும் கண்கள் பாதிக்கப்பட வாய்ப்புகள் உண்டு. சிறுவர்களை குளிப்பாட்டும் போது உபயோகிக்கும் சீயக்காய் துகள்களும், கண்களில் ரணம் ஏற்படுத்தக்கூடும். வீட்டில் உபயோகிக்கும் பிளீச்சிங் பவுடர், பெனாயில் மற்றும் பல இரசாயனப் பொருட்கள் அவர்களது கண்களில் பட வாய்ப்புகள் உண்டு. ஆகையால் இது போன்ற பொருட்கள் அவர்கள் வசம் கொடுக்காமல் இருக்க வேண்டும். இது போன்ற பாதிப்பு ஏற்பட்டால் சிறுவர்களுக்கு உடனடியாக பெற்றோரிடம் கூறத் தெரியாததால் நாம் அவர்கள் கண்களில் ஏற்படும் கண்ணீர் கசிதல், கண்ணில் வலி ஏற்படுதல், கண் சிவப்பாகி விடுதல், வெளிச்சத்தைப் பார்க்க இயலாது போகுதல் போன்ற எந்தவொரு சிறு அறிகுறியையும் உடனடியாகக் கவனித்து கண் மருத்துவரிடம் அழைத்துச் சென்று தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும்.

இயன்ற வரையில் சிறுவர் சிறுமியரிடம் இத்தகைய கூர்மையான பொருட்கள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களுக்கும் சாலை விபத்துகளில் கண்கள் பாதிக்கப்படலாம். கண்ணாடித் துண்டுகள், தூசி ஆகியன கண்ணில் குத்தி உட்புகலாம் அல்லது கண்களின் மேற்புறத்தில் தங்கி ரணமாகலாம். மேலும் நாம் நமது வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் நம்முடன் பழகும் போது அதனுடைய நகங்களாலும் ரோமங்களாலும் நமது குழந்தைகள் மட்டுமின்றி நமது கண்களும் பாதிப்புக்கு உள்ளாகும். இரசாயனப் பொருட்கள் நிறைந்த பாட்டில்களைத் திறக்கும் போது கவனத்துடன் இல்லாவிடில் இரசாயனம் கண்ணில் தெளித்து பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். இவ்வாறு ஏற்பட்டால் உடனடியாக மிகச் சுத்தமான தண்ணீரில் கண்களைக் கழுவி உடனடியாக மருத்துவச் சிகிச்சை பெற வேண்டும்.

**இத்தகைய விபத்து ஏற்பட்டால், கண்களை பலமாக அழுத்தித் தேய்ப்பதைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் கண்ணின் முக்கியப் பகுதியான கார்னியா என்னும் கருவிழி மிகவும் பாதிக்க வாய்ப்புள்ளது.**

மேலும் சூரியனையும் கிரகங்களையும் முறையான பாதுகாப்பு இன்றி பார்த்து கண்ணின் விழித்திரை பாதிக்கப்பட்டு பார்வை இழப்பவர்கள் ஏராளம். இதற்கு சிகிச்சையே இல்லாததால் இவ்வாறு பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். சில தொழிற்சாலைகளில் நாள் முழுவதும் வெல்டிங் (Welding) செய்பவர்கள் அதற்குத் தகுந்த கருப்பு கவசம் (Shield) அணிந்து வெல்டிங் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கண்ணில் நடுப்பார்வை (Centre Vision) மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு விடும்.

இப்பொழுது விளையாட்டுத் துறையில் ஏராளமானவர் ஈடுபட்டு வருகிறார்கள். ஆக்கி, கால்பந்து போன்ற விளையாட்டுகளில் கம்பிகளால் ஆன முக மறைப்புகளையும், முகமூடிகளையும் உபயோகிப்பது நலம். நீச்சல் போன்ற நீர் விளையாட்டுகளில் அதற்கான சிறப்புக் கண்ணாடிகள் அணிவது நல்லது.

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் பாதுகாப்பிற்காக கண் கண்ணாடி அல்லது ஹெல்மெட்டை அணிந்து செல்ல வேண்டும். இதனால் பயணிக்கும்போது தூசி அல்லது சிறு பூச்சிகள் கண்ணில் விழாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தொழில் துறையில் பணிபுரிபவர்கள் பல்வேறு வகையில் கண் பாதிப்புக்குள்ளாகிறார்கள். சுத்தியினால் அடிக்கும்போதும் உளியினால் செதுக்கும்போதும் கடைசல் பிடிக்கும் போதும் மிக வேகமாகப் பறந்து வரும் இரும்பு, செம்பு, பித்தளை போன்ற பல்வேறு உலோகத் துகள்கள் கருவிழியின் மேற்புறத்தில் தங்கி விடுவது மட்டுமின்றி கண்களின் உட்புறத்தில் சென்று தங்கி

விடுவதும் உண்டு. இத்துகள்கள் பின்பு சீழ்பிடித்து கண்ணையே எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படக்கூடும். தொழிற்சாலைகளில் உருக்கிய உலோகங்களும், கண்களில் பட்டு கண்ணிமைகள் கருவிழிகள் வெந்துபோக வாய்ப்புகள் உண்டு. சுரங்கங்களிலும், மலைகள் உடைக்கும் இடத்திலும், வெடி வைத்து கிணறு தோண்டுபவர்களும், கண்களையே இழக்க நேரிடுகிறது.

இவர்கள் தகுந்த பாதுகாப்பு அணிகலன்களை அணிந்து கொண்டு பணி செய்தால், இத்தகைய விபத்துகளையும், கண்பார்வை இழப்பையும் தவிர்க்க முடியும்.

தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்தப்படும் இரசாயனங்கள், ஆவி மூலமாகவோ அல்லது சிறு துகள்களாக தெளித்து கண்ணில் விழக் கூடும். சில சமயங்களில் நமது தோல் மூலமாகவோ அல்லது சுவாசிப்பது மூலமாகவோ நமது பார்வை நரம்புகளை பாதித்து, பார்வையை இழக்க நேரிடும். ஆகையால் இத்தகைய தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் பார்வையில் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக கண் மருத்துவரை அணுக வேண்டும்.

மேலும் சில தொழிற்சாலைகளில் புறஊதாவும் (Ultraviolet), அகச்சிவப்புக் கதிர்களையும் (Infrared) உபயோகிக்கிறார்கள். லேசர் மற்றும் கதிர்வீச்சு தன்மையுடைய பொருட்களையும் அவற்றிலிருந்து வெளிப்படும் உபயோகமற்ற ஆனால் கதிர்வீச்சு தன்மையுடைய பொருட்கள் கண்களையும், கருவிழி படலத்தையும் பாதிக்கும் லேசர்கள் நேரடியாக அல்லது வழுவழுப்பான பொருட்களின் மீது பட்டு திரும்பும் போதே கண்களை தாக்கக் கூடும்.

இவர்கள் பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து (Protective glasses) வேலை செய்வதால் விபத்தில் ஏற்படும் கண்பார்வை இழப்பினைத் தவிர்க்க முடியும்.



விவசாய வேலைகளில் ஈடுபட்டு இருப்பவர்களும், கண்களில் தூசி படுவதாலும், மண், சேறு, இலைகள் நிறைந்துள்ள கைகளினால் கண்களை துடைத்துக் கொள்வதாலும் கருவிழியில் புண் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றன. சேற்றிலும், சகதியிலும் நிறைந்து காணப்படும் காளான் கிருமிகள் கண்களை தாக்கும் அபாயம் இவர்களுக்கு மிக அதிகமாகவே இருக்கின்றன. அறுவடைக் காலங்களில் நெல்மணி மற்றும் கதிர் இலைகளினால் கண்களில் காயம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு கண்கள் பாதிக்கப்படும் போது சிறிதும் காலதாமதமின்றி கண் மருத்துவரை அணுகி சரியான முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள தவறினால் பார்வை நிரந்தரமாக இழந்திடும் சூழல் ஏற்படும். சுத்தமான தண்ணீரினால் கண்களை கழுவ வேண்டும். அசுத்தம் நிறைந்த கைகளினால் கண்களைத் துடைப்பதைத் தவிர்ப்பதாலும் கண்களில் புண் ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்கலாம்.

**முக்கிய வேண்டுகோள்**

பள்ளிக்குழந்தைகளையும், அதைவிட சிறிய குழந்தைகளையும் நல்ல அனுபவமிக்க கண் மருத்துவரிடம் பரிசோதித்தல் மிகவும் அவசியம். ஏனென்றால் சில கண்களில் உள்ள குறைபாடுகள் பலருக்கு இருப்பதே தெரிவதில்லை. அவர்கள் கண் பார்வைக் குறைவிற்கு கண்ணாடி கடையில் (Optical shop) சென்று Power மட்டும் பரிசோதித்துக் கண்ணாடி அணிந்து கொள்கிறார்கள். இது நல்லதல்ல. ஏனென்றால், சில கண் குறைபாடுகள் ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்பது கண்ணாடி பரிசோதகர்களினால் இயலாது. உதாரணத்திற்கு கிளாகோமா (Glacoma) என்ற கண் நீர் அழுத்த நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சையைத் தொடங்கினால், கண் பார்வை இழப்பை முற்றிலும் தவிர்க்கலாம். மேலும் இதே நோய் முற்றிய நிலையில் கண்டுபிடித்தால் கட்டாயமாக அறுவை சிகிச்சைதான் செய்ய முடியும். அப்படிச் செய்தாலும் இழந்த பார்வையைத் திரும்பப் பெறுவது இயலாத காரியம்.

அதேபோல் ஒரு கண்ணில் கிட்டப்பார்வை அதிகமாகவும் அடுத்த கண் நன்றாகவும் இருக்கும்பட்சத்தில் குறையுள்ள கண் உபயோகப்படாமல் சென்று விடும். இந்தக் குறையை ஆரம்பத்தில் கண்டு பிடித்தால் அந்தக் கண் குறைபாட்டைத் தவிர்க்கலாம்.

மேலும் மாறுகண் என்பது அதிர்ஷ்டத்தைக் குறிப்பது அல்ல. எனவே சிறு குழந்தையாக இருந்தாலும் மாறுகண் இருந்தால் உடனே அனுபவமிக்க கண் மருத்துவரை அணுகி ஆலோசிப்பது பல வகையில் உங்கள் குழந்தைக்கு நன்மை பயக்கும்.

• **மரு. எம்.எஸ். ராஜரத்தினம்**, எம்.எஸ்.டி.ஓ.,
அரசு கண் மருத்துவமனை, எழும்பூர்,
சென்னை.

# அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்குச் சலுகைகள்



(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 20.10.2004)

ஓர் அரசின் திட்டமிடப்பட்ட பயன்கள் ஏழை, எளிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்திட, அந்த அரசின் சேவை செயலாக்க ஏற்பாடு மேம்படுத்தப்பட வேண்டும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. பொது நிதியில் எப்போதுமே நிதி ஆதாரப் பற்றாகுறை நிலவுகின்ற நெருக்கடியான ஒரு சூழ்நிலையில், இந்தச் சேவை செயலாக்க ஏற்பாடுகள் எந்த அளவிற்கு மேம்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தத் தேவையில்லை. ஒருபுறம், அரசுப் பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அதன் வாயிலாக அவர்கள் மக்களுக்கு மேலும், சிறப்பாகச் சேவையாற்ற ஊக்கம் அளித்திட வேண்டும். மறுபுறம், ஏழை, எளிய மக்களுக்குப் போதிய பயன்கள் உரிய நேரத்தில் சென்றடைவதை உறுதிப்படுத்தவும் வேண்டும். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நுட்பமான சம நிலையைக் கண்டறிந்து பராமரித்து வருவதில்தான் ஒரு நல்லாட்சியின் நிருவாகத் திறமையே இருக்கிறது. அரசின் சேவைகளை மக்களிடத்தில் சென்று சேர்க்கின்ற சேவை செயலாக்க அமைப்பின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் ஒரு நல்லாட்சியின் இந்த இன்றியமையாத அம்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

என்னுடைய அரசு, 2001–ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்தச் சம நிலையை உறுதிப்படுத்த வேண்டிய நிலை இருந்தது. அந்த நேரத்தில், தமிழ்நாட்டின் நிதி நிலைமை கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவுக்குச் சீரழிந்து இருந்தது. 1996–2001 வரையில் ஆட்சி செய்த முந்தைய தி.மு.க.அரசு, அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஏராளமானச் சலுகைகளை வாரி வழங்குவது போல பாசாங்கு செய்தது. ஆனால், அந்த அரசால், தான் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியவில்லை. முந்தைய தி.மு.க. அரசு, ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய சம்பளம் மற்றும் படிகளின் நிலுவையில் 60 சதவிகிதத் தொகை வழங்கப்படுவதை 2003–2004–ஆம் ஆண்டுக்கு ஒத்தி வைத்தது. அதேபோன்று, ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளும் முந்தைய தி.மு.க. அரசால் ஒத்தி போடப்பட்டன. பொறுப்புள்ள எந்த ஒரு அரசும், தன்னால் நிறைவேற்ற முடியாத சலுகைகளை அறிவிக்காது.

எதிர்காலத்தில் வழங்க முடியும் என்ற நம்பிக்கை இல்லாத போதும், முந்தைய தி.மு.க. அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆனால், நிறைவேற்றாமல் விட்டுச் சென்றதால் ஏற்பட்ட நிதிப் பொறுப்புகளை என்னுடைய அரசு, படிப்படியாக நிறைவேற்ற அண்மையில் முன் வந்துள்ளது. ஏழை, எளிய மக்களின் தேவைகளை மனதில் கொள்ளும் அதே நேரத்தில்,

அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் மக்களுக்கு மேலும், சிறப்பாகச் சேவை ஆற்றிட ஏதுவாக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, என்னுடைய அரசு எந்த அளவிற்குப் பொறுப்புடன் பொது நிதியை நிருவகித்து வருகிறது என்பதை இதுவே எடுத்துக்காட்டும்.

2001–ஆம் ஆண்டு மே திங்களில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற போது, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணப் பட்டிகளுக்குக் கூட தொகை வழங்க முடியாத நிலைமையில் அரசு கஜானா இருந்தது என்பதும், அத்தகைய பட்டிகள் பல மாதங்களாக, ஏன் ஆண்டுகளாகக்கூட நிலுவையில் வைக்கப்பட்டு இருந்தன என்பதும் அனைவரும் அறிந்ததே. 2001–2002–ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் 11–ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைகளையடுத்து, மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதி ஆதாரங்கள் மேலும் குறைந்து, சமாளிக்க முடியாத அளவுக்கு நிதி நிலைமை மிகவும் மோசமாகி, நடப்புப் பொறுப்புகளும், தொகை வழங்கப்படாத பட்டிகளும் 4,000 கோடி ரூபாய் அளவிற்கு நிலுவையாக இருந்தன. அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் இதே நிலைமை நிலவவே, முந்தைய தி.மு.க. அரசால் என்னுடைய அரசின் மீது திணிக்கப்பட்ட சீர்கேடான நிதி நிலைமையைச் சீரமைப்பதைத் தவிர, இவ்வரசிற்கு வேறு வழியில்லாமல் போயிற்று. மக்களுக்குத் தேவையான எந்த ஒரு புதிய திட்டத்தையுமே செயல்படுத்த முடியவில்லை. அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப் பட்டு வரும் பயன்களைக் கூட தொடர்ந்து வழங்க முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டது.

இந்தக் காரணத்திற்காகத்தான், நிலைமை சீராகும்வரை பொறுமை காத்திடும்படி நான் அரசுப் பணியாளர்களையும், ஆசிரியர்களையும் கேட்டுக் கொண்டேன். துரதிருஷ்டவசமாக, என்னுடைய வேண்டுகோளையும் மீறி, கடந்த 2003–ஆம் ஆண்டில், சில அரசுப் பணியாளர் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும், சில அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. அரசு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருமே நமது உண்மையான எஜமானர்களான மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டை அப்போது என்னுடைய அரசு நிலை நாட்ட வேண்டியிருந்தது. நாம் எந்த ஒரு சூழ்நிலையிலும் பொது மக்களுக்கு இன்னல் விளைவிக்கக் கூடாது என்ற கோட்பாடு கடந்த ஆண்டு நிலை நிறுத்தப்பட்டது.

இந்த நிலைமை தெளிவுபடுத்தப்பட்டதுமே, அரசுப் பணியாளர்கள் அல்லது ஆசிரியர்கள் மீது எந்தவித கசப்புணர்வோ அல்லது அவர்களைப் புண்படுத்தும் நோக்கமோ எதுவும் இவ்வரசிற்கு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தினேன். அனைத்து சங்கங் களையும் பேச்சு வார்த்தைக்கு நான் இன்று (20.10.2004) அழைத்துள்ளதே எனக்கோ என்னுடைய அரசுக்கோ அவர்கள் மீது எந்தவிதமான கசப்புணர்வும் இல்லை என்பதை உணர்த்துகிறது. நீதிபதிகள் குழுவின் பரிந்துரைப்படி தண்டிக்கப்பட்டவர்களுக்கும் நான் பொது மன்னிப்பு அளிப்பதாக அறிவித்தேன். இதனை நான் 2004–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே சட்டமன்றப் பேரவையில் அறிவித்தேன். அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது எனக்கு எந்தவிதமான கசப்புணர்வும் இல்லை என்பதனை மீண்டும் 2004–ஆம் ஆண்டு மே திங்களில் வலியுறுத்தினேன்.

முந்தைய தி.மு.க. அரசு அதலபாதாளத்தில் தள்ளிவிட்டுச் சென்ற நிதி நிலைமையை, மிகுந்த சிரமப்பட்டு மீட்டு, என்னுடைய அரசு கணிசமான அளவுக்குச் சீர்படுத்தியுள்ளது. இதற்காக, எல்லோருமே சில தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. இந்தச் சரிக்கட்டல் காரணமான சுமை ஏழை, எளிய மக்களின் தோள்களில் சுமத்தப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் என்னுடைய அரசுக்கு இருந்தது. அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் இந்தப் பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டும். 2004–ஆம் ஆண்டு மே திங்களில் ஏழை, எளிய மக்களுக்காக நான் புதிய சலுகைகளை அறிவித்தேன். இது அரசின் நிதி நிலைமை மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இருந்தாலும், நிதி நிலைமையைச் சீரமைக்க நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளால், ஏழை, எளிய மக்களுக்கான இந்தச் சலுகைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியாதாரங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே நேரத்தில், டீசல் விலை உயர்வினால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், நிலக்கரி விலை உயர்வினால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் புதிதாக ஏற்பட்டுள்ள செலவு உயர்வு காரணமாக எழுந்துள்ள அச்சுறுத்தலுக்கு இன்னும் நாம் முழுமையாகத் தீர்வு காணவில்லை. விவசாயிகள், குடிசை வாழ்வோர் மற்றும் வீட்டுப் பயன்பாட்டிற்காக, மின்சாரம் வழங்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உரிய மானியத் தொகைகளை ரொக்கமாக அளிக்க வேண்டியுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிகரித்துள்ள மானியத்தையும் வழங்க வேண்டியுள்ளது. இந்த அனைத்துத் தேவைகளையும் நாம் நிறைவு செய்தாக வேண்டும். நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு, இந்தத் தேவைகளுக்கும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையே சரியானதொரு சமநிலையை நாம் காண வேண்டியுள்ளது.

இந்தப் பின்னணியில் தான், சில அரசியல் கட்சித் தலைவர்கள் கூறி வருவதைப் போல, என்னுடைய அரசுக்கு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது எந்தவிதமான கசப்புணர்வோ அல்லது பாரபட்சமோ அறவே இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நேரில் கேட்டறிவதற்காக, அவர்களது

சங்கப் பிரதிநிதிகளை நான் அழைத்தேன். ஏழை, எளிய மக்களுக்குச் சேவை செய்வது என்ற நமது பொதுவான குறிக்கோளை நிறைவேற்றும் முயற்சியில் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் சங்கங்கள் முழு ஒத்துழைப்பு நல்கியிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும், நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற ஆக்கபூர்வமான சிந்தனையோடும், புதிய தீர்மானத்தோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை புரிவதற்கு வாய்ப்பான நிலைமை உருவாகி இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பரஸ்பர புரிதலின் அடிப்படையில்தான் என்னுடைய அரசிடம் வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் கருதிப் பார்க்கப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பல சலுகைகளை வழங்க வேண்டும் என்று என்னுடைய மனம் விரும்பினாலும், நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்காமல் இன்னமும் அச்சுறுத்தி வருகிறது. அனைத்துக் கோரிக்கைகளையும் என்னுடைய அரசு மிகுந்த கவனத்துடனும், விரிவாகவும் பரிசீலித்துள்ளது. அதே நேரத்தில் நிதி நிலைமையையும் மறு மதிப்பீடு செய்துள்ளோம். 2003–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு நிதிப் பொறுப்புகள் சட்டத்தின் கீழ் எழுந்துள்ள பொறுப்புகளையும் என்னுடைய அரசு கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக, நம்முடைய உண்மையான எஜமானர்களான மக்களுக்கு இன்னும் சிறப்பாகச் சேவையாற்றிட வேண்டியுள்ளது. இதற்காக என்னுடைய அரசு மிகவும் பாடுபட்டு வருகிறது.

இந்த அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டும், என்னுடைய அரசுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு சுமூகமான உறவை ஏற்படுத்தும் நோக்கத்தோடும், 1.7.2004–ஆம் நாள் முதற்கொண்டு, அடிப்படைச் சம்பளத்தில் 4 விழுக்காடு என்ற வீதத்தில், ஒரு தவணை அகவிலைப்படி வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது, அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பொருந்தும். அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள், உள்ளாட்சி மன்ற பணியாளர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் பிறருக்கும் இது பொருந்தும். இப்பயன், ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்படும். இதன்மூலம், மொத்த அகவிலைப்படியானது 1.7.2004 முதல் 55 விழுக்காட்டிலிருந்து 59 விழுக்காடாக உயரும். 1.7.2004 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படியின் நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படும். மேலும், 1.7.2004 முதல் தொகுப்பூதியம் பெறுவோர், அறுதியிட்ட சம்பளம் பெறுவோர் (Fixed Pay) மற்றும் 1.1.96 அன்றையபடி மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கு மேல் மதிப்பூதியம் பெறுவோர் ஆகியோருக்கு ஒட்டுமொத்தமாக மாதம் ஒன்றுக்கு ரூ.20/–ம், மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கும் குறைவாக மதிப்பூதியம் பெறுவோர்க்கு; மாதம் ஒன்றுக்கு ரூ.10/–ம் உயர்த்தப்படும். இந்த அகவிலைப்படி வழங்குவதன் மூலம் 12.33 இலட்சம் அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிறரும், 4.37 இலட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவர். இதன்மூலம் அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, மொத்தம் 267.08 கோடி ரூபாய் செலவு ஏற்படும். 1.7.2004 முதல் 30.9.2004 வரையிலான காலத்துக்கு உரிய, 66.77 கோடி ரூபாய் அளவுக்கான நிலுவைத் தொகை முழுவதும் உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும்.

எஞ்சிய அகவிலைப்படி தவணைகளையும் வழங்க வேண்டுமென அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் கேட்டுக் கொண்டுள்ளனர். அடிப்படைச் சம்பளத்தில் 2 விழுக்காடு என்ற விகிதத்திலான அடுத்தத் தவணை அகவிலைப்படி 1.1.2005 முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன். இதனால், ஆண்டு ஒன்றுக்கு, அரசுக்கு 135.38 கோடி ரூபாய் செலவாகும். இதன்மூலம் 1.1.2005 முதல் மொத்த அகவிலைப்படி 61 விழுக்காடாக உயரும். இவ்வாறாக, மத்திய அரசு வழங்கும் அகவிலைப்படிக்கும், மாநில அரசு வழங்கும் அகவிலைப்படிக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறைக்க பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமை மேலும் சீரடையும்போது, இந்த இடைவெளியை எதிர்காலத்தில் மேலும் குறைக்க என்னுடைய அரசு முயற்சி எடுக்கும். இந்த அகவிலைப்படி உயர்வை அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் பெரிதும் வரவேற்பார்கள் என நான் நம்புகிறேன்.

நெருக்கடியான நிதி இடர்ப்பாட்டிலும் ஈட்டிய விடுப்பை சரண் செய்து, அதற்கு ஈடாக ரொக்கத் தொகை பெற்றுக் கொள்ளும் வசதியை வழங்குவது பற்றி நான் பரிசீலிக்க வேண்டும் என அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் இன்று என்னிடம் கோரிக்கை வைத்தனர். ஈட்டிய விடுப்பைச் சரண் செய்து ரொக்கத் தொகை பெற்றுக் கொள்ளும் வசதி, பெரும்பாலான மாநிலங்களிலும், மத்திய அரசுப் பணியிலும்கூட இல்லை. அப்படி இருந்தும், அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் தங்களுக்கு இச்சலுகை வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களது கோரிக்கையை நான் மிக கவனமுடன் பரிசீலித்து, ஆண்டு ஒன்றுக்கு 7 நாட்கள் ஈட்டிய விடுப்பைச் சரண் செய்து, அதற்கு ஈடாக ரொக்கத் தொகை பெற்றுக்கொள்ளும் வசதியை வழங்குவதென நான் முடிவு செய்துள்ளேன். அரசுக்கு ஏற்படும் செலவு ஆண்டு முழுவதும் ஒரே சீராக இருக்கின்ற வகையில், ஏற்கெனவே உள்ள சுழற்சி முறையில் இது வழங்கப்படும். இச்சலுகை இன்று முதல் (20.10.2004) செயலுக்கு வரும். இதனால், அனைத்துப் பணியாளர்களும், ஆசிரியர்களும் பயன்பெறுவர். இந்த வகையில் ஆண்டு ஒன்றுக்கு, அரசுக்கு, 171.34 கோடி ரூபாய் செலவு ஏற்படும். பொது நிதித் தேவைக்காக நிதி

ஆதாரங்களைச் சேமிக்க வேண்டிய கட்டாய நிலை இருந்தும், மேலும், இச்சலுகை பெரும்பாலான மாநிலங்களிலும், மத்திய அரசுப் பணியிலும் இல்லாத நிலையிலும்கூட, அரசுக்கும், அரசு ஊழியர்களுக்கும் இடையிலான நல்லெண்ணத்தை மேம்படுத்தவும் ஏழை எளியவர்களுக்குச் சேவையாற்றுவதில் அரசுப் பணியாளர்கள் மேலும், சிறப்பாகச் செயல்பட ஊக்கமளிக்கும் வகையிலும் நான் இந்தச் சலுகையை வழங்க முடிவு செய்துள்ளேன்.

நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு, பொதுமக்கள்தான் நம்முடைய உண்மையான எஜமானர்கள். அவர்களுக்கு நாம் ஒருபோதும் இடையூறு விளைவிக்ககூடாது. எனவே, அரசுப் பணியாளர்கள் கோரிக்கைகளை வைக்கும்போது, இந்த எண்ணம் அவர்கள் மனதில் மேலோங்கி நிற்க வேண்டும். என்னுடைய அரசு, பொதுநலக் கொள்கையாக, "வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை" என்ற கோட்பாட்டை வரையறுத்துள்ளது. இந்தக் கோட்பாட்டிலிருந்து விலக முடியாது. கடந்த ஆண்டு 1.7.2003 முதல் 24.7.2003 வரையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, பணிக்கு வராத நாட்களை, பெருந்தன்மையோடு பணிக் காலமாக கருதவேண்டும் என்று அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் இன்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் ஏற்கெனவே உயர்நீதிமன்றத்தில் வருத்தம் தெரிவித்து, வேலைநிறுத்தத்தின் தொடக்கத்திலேயே அதனை முடித்துக்கொண்டு, பணிக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்ததையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். "வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை" என்ற கோட்பாட்டில் உள்ளடங்கியுள்ள ஒழுங்குணர்வு நிலைநாட்டப்பட வேண்டும். அதே நேரத்தில், கடந்த ஆண்டில் அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தை, தவறான வழிகாட்டுதலின்பேரில் நடைபெற்ற ஒரு துரதிருஷ்டவசமான, மறக்கப்பட வேண்டிய ஒரு சம்பவமாகக் கருத முடிவு செய்துள்ளேன். இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே பெருந்தன்மையான ஒரு முடிவெடுப்பது எனத் தீர்மானித்துள்ளேன். 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 முடிய உள்ள கால அளவு, சம்பளமில்லாக் கால அளவாக கருதப்படும். 24.7.2003 வரையிலான எஞ்சியுள்ள கால அளவு பணிக்காலமாகக் கருதப்படும். "வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை" என்ற கோட்பாட்டிலிருந்து பெரிதும் விலகி, அரசுப் பணியாளர்களும் ஆசிரியர்களும் இந்த உணர்வை முழுவதும் பிரதிபலித்து ஏழை எளிய மக்களின் நன்மைக்காக இவ்வரசு மேற்கொள்கிற அனைத்து முயற்சிகளிலும், முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த முடிவை எடுத்துள்ளேன்.

அரசு மக்களுக்குச் செம்மையாகவும், சிறப்பாகவும் சேவை செய்திட, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அரசோடு நெருங்கி ஒத்துழைத்து, பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டியது அவசியமாகிறது. அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் ஒரு கணம்கூட தங்களுடைய இந்தப் பொறுப்பை மறந்துவிடலாகாது. அவர்களுக்குக் குறைகள் இருக்கலாம், கோரிக்கைகளும் இருக்கலாம். ஆனால், அரசின் திட்டங்கள் ஏழை எளிய மக்களை சென்றடைந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே அரசின் தலையாயக் கடமை என்பதனை பணியாளர் சங்கங்களும், அமைப்புகளும் உணர வேண்டும். அரசுப் பணியாளர் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும் ஆட்சி நிருவாகத்தின் இந்த தலையாய குறிக்கோளை மறந்து, தவறான வழியில் சென்றுவிடலாகாது. என்னுடைய அரசு அவர்களுடைய கோரிக்கைகளையும், வேண்டுகோளினையும் ஏழை எளிய மக்களின் நலனுக்கு அரசு அளிக்க வேண்டிய முன்னுரிமையின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு ஒரு சமன்பாட்டுடன் எப்போதும் பரிசீலிக்கும். இந்த அணுகுமுறை உணர்ந்துகொள்ளப்படவேண்டும். இதை ஏற்றுக்கொண்டு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் 2003 ஜூலை திங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை அடுத்து ரத்து செய்யப்பட்ட சங்கங்களின் அங்கீகாரத்தை மீண்டும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து தங்கள் கடமைகளையும், பொறுப்புகளையும் மிகுந்த கவனத்துடன் நிறைவேற்றுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள். அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் வெளிப்படுத்திய நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பு உணர்வையும் கருத்தில்கொண்டு, 2003 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் வேலை நிறுத்தத்திற்கு முந்தைய நிலையை மீண்டும் ஏற்படுத்துவதென நான் முடிவு செய்துள்ளேன். வேலை நிறுத்தத்தையடுத்து, அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட 37 அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அனைத்திற்கும் மீண்டும் அங்கீகாரம் அளிக்கப்படும். இச்சங்கங்கள் பொறுப்பான முறையில் செயல்பட்டு, தங்கள் சங்க உறுப்பினர்களிடையே, மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை செய்திட வேண்டும் என்ற உணர்வை ஊட்டும் என்று என்னுடைய அரசு எதிர்பார்க்கிறது.

பொருத்தமான அமைப்புகள் ஏற்படுத்தப் படுமேயானால், பல சிறு பிரச்சினைகளை மாவட்ட அளவுகளிலும், துறை அளவுகளிலுமே எளிதாக தீர்த்துக் கொள்ளலாம் என்று அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் இன்று என்னிடம் தெரிவித்தனர். மேம்பட்ட செயல்பாடு மற்றும் செயல்திறனில் கவனம் செலுத்தவும், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கெனவும், மாவட்ட நிலையிலும், துறையளவிலும் மற்றும் தலைமைச் செயலகத் துறையளவிலும் "சேவை செயலாக்க மேம்பாடு மற்றும் குறைதீர்ப்புக் குழுக்கள்" ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தலைமைச் செயலாளர் தலைமையிலான, "மாநில

அளவிலான கூட்டுக்குழு" திருத்தியமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினைகளை இந்தக் குழுவில் விவாதித்துத் தீர்வு காணலாம். மேற்சொன்ன இந்த நடவடிக்கைகள், மக்களுக்கு மேலும் சிறந்த முறையில் சேவை செய்வதற்காக என்னுடைய அரசு, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்களோடு நடத்தக்கூடிய கலந்துரையாடல்களுக்கு உதவும் என்று நம்புகிறேன்.

ஓய்வூதியமில்லாப் பணிகளைச் சேர்ந்த மதிய உணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் அங்கன்வாடிப் பணியாளர், ஆயாக்கள், சமையற்காரர்கள், உதவியாளர்கள் போன்றவர்களுக்குச் சில சலுகைகள் வழங்கிட வேண்டுமென்று கோரப்பட்டது. அதைப் போலவே, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வசதியாக இருக்கும் வகையில், பள்ளி நேரங்கள், குறிப்பாகக் கிராமப் புறங்களில், தக்கவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையும் வைக்கப்பட்டது. இக்கோரிக்கைகள், சாதகமாக பரிசீலிக்கப் பட்டு அறிவிப்புகள் தனியே வெளியிடப்படும்.

அரசுப் பணியாளர் சங்கங்கள் முன்வைத்த கருத்துகள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலித்த பின்னர் நான் இந்தச் சலுகைத் தொகுப்பை வகுத்துள்ளேன். அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்வது என்ற என்னுடைய அரசின் உறுதியான முயற்சிக்கு, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர்கள் தங்களது முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் அளிப்பார்கள் என்ற நம்பிக்கையில் நான் இந்த முடிவை எடுத்துள்ளேன். ✶

# 8.5 சதவிகிதம் பிழி திறன் கொண்ட கரும்புக்கு வழங்கப்பட்ட தொகை உயர்வு



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைக் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி 2003 – 2004 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவிகிதம் பிழி திறன் (Recovery) கொண்ட கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்ட தொகை 695 ரூபாயுடன் தற்போது கூடுதலாக 35 ரூபாயும் சேர்த்து வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 730 ரூபாய் விலையாகக் கிடைக்கும்.

2003 – 2004ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு (Crushing Season) 8.5 சதவிகிதம் பிழி திறன் (Recovery) கொண்ட கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 730 ரூபாய் குறைந்தபட்ச விலையாக (Statutory Minimum Prices) மத்திய அரசு அறிவித்தது. இதில் முதற்கட்டமாக தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த கரும்பு விவசாயிகளுக்கு 695 ரூபாய் வழங்கப்பட்டது. கரும்பு விவசாயிகளின் நலன் கருதி டன் ஒன்றுக்கு மீதமுள்ள 35 ரூபாயை உடனடியாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த 85,337 கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள். மேற்கண்ட ஆலைகளிலிருந்து 11.04 கோடி ரூபாய் கூடுதலாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

✶ ✶ ✶

# தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள்



மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா**
அவர்கள் திறந்து வைத்தார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்23.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சென்னையில் 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 3,340 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 13 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 1,832 தனி வீடுகள், ஆக மொத்தம் 49 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 5,172 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகளைத் திறந்து வைத்தார்கள்.

சென்னையில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள தனி வீடுகள் பற்றிய விவரம் வருமாறு:

சென்னை அடுக்கும்ாடிக் குடியிருப்புகள்: (மொத்த எண்ணிக்கை 3,340 – மதிப்பு ரூ.35.25 கோடி)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | இல்லங்கள் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஒக்கியம் துரைப்பாக்கம் | 2,538 | 2,623.30 |
| 2. | பாரதி நகர் | 324 | 381.80 |
| 3. | காமராஜ் நகர் | 144 | 151.80 |
| 4. | மகாகவி பாரதி நகர் | 48 | 54.50 |
| 5. | பீர்க்கங்கரணை | 198 | 217.50 |
| 6. | செம்மஞ்சேரி | 88 | 96.10 |

மதுரை தனி வீடுகள்: (மொத்த எண்ணிக்கை 916 – மதிப்பு ரூ.6.875 கோடி)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | இல்லங்கள் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | விளாச்சேரி | 84 | 63.00 |
| 2. | தனக்கன்குளம் | 170 | 127.50 |
| 3. | கடவூர் | 202 | 152.00 |
| 4. | இடையப்பட்டி | 432 | 324.00 |
| 5. | வலையான்குளம் | 28 | 21.00 |

கோயம்புத்தூர் தனி வீடுகள்: (மொத்த எண்ணிக்கை 916 – மதிப்பு ரூ.6.875 கோடி)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | இல்லங்கள் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கோண்டி நகர் | 56 | 42.00 |
| 2. | பெரியார் சதுக்கம் | 27 | 20.25 |
| 3. | சுகுணாபுரம் பகுதி–1 | 242 | 182.00 |
| 4. | சுகுணாபுரம் கிழக்கு | 289 | 216.75 |
| 5. | பிள்ளையார்புரம் | 302 | 226.50 |

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 49 கோடி ரூபாய் மதிப்பில், சாலை வசதி, தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் முதலான அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்ட மேற்காணும் 5,172 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேற்காணும் குடியிருப்புகள், தவணை முறை திட்டத்தின் கீழ் மாதம் 250 ரூபாய் வீதம் 20 ஆண்டுகள் செலுத்தி உரிமையாக்கிக் கொள்ளும் வகையில் ஆற்றோரங்கள், சாலை ஓரங்கள், ஏரிக்கரை ஓரம் மற்றும் கடற்கரைப் பகுதி முதலான இடங்களில் குடிசை போட்டு வாழ்கின்ற குடிசைவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்து தரப்படும். ●

# சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான 2,200 ஏக்கர் பரப்பளவுள்ள பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்பு அகற்றம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நடவடிக்கை

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இயற்கை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என்றழைக்கப்படும் 2,200 ஏக்கர் பரப்பளவுள்ள பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. மிகப்பெரிய மழைநீர் சேகரிப்பு அமைப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி சேலம் மாநகராட்சி நிறைவேற்றியுள்ளது.

பனமரத்துப்பட்டி ஏரி இயற்கையாகவே நான்கு புறமும் மலைகளால் சூழப்பட்டு, சேலம் மாநகரிலிருந்து சுமார் 100 அடி உயரத்தில் அமைந்துள்ள இயற்கை மேல்நிலை நீர்த்தேக்க ஏரியாகும். இந்த ஏரியில் 30 ஆண்டுகளாகச் சிலர் ஆக்கிரமிப்புச் செய்து விவசாயம் செய்து, சிறிய குடிசை வீடுகள் கட்டிக் கொண்டு ஏரியின் நீர்பிடிப்பு முக்கியப் பகுதிகளை அடைத்து ஆக்கிரமிப்பு செய்திருந்தனர்.

தற்பொழுது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நீர் ஆதாரங்களை முழுமையாகப் பாதுகாக்கவும், ஆக்கிர மிப்புகளை அகற்றிடவும் மாநிலம் முழுவதும் மழைநீரைச் சேமித்திடவும் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இதன் அடிப்படையிலும் நீதிமன்ற உத்தரவுகளின்படியும் பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அக்டோபர் 2ஆம் தேதி முதல், பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வந்தன.

பனமரத்துப்பட்டி ஏரி 1910ஆம் ஆண்டு முதல் சேலம் நகராட்சி மூலம் 2,200 ஏக்கர் நிலம் சொந்தமாக வாங்கப்பட்டுக் குடிநீர்த் தேவைக்கு முழுமையாக பயன்படுத்தப்பட்டு வந்தது. தொடர்ந்து 1965ஆம் ஆண்டு வரை சேலம் நகருக்குப் பனமரத்துப்பட்டி ஏரி தண்ணீர்தான் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன்பிறகு, மேட்டூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டதாலும், மழைக் குறைவினால் ஏற்பட்ட வறட்சி காலங்களில் ஏரியின் நீர்மட்டம் குறைந்தால்,



காலப்போக்கில் பனமரத்துப்பட்டி ஏரி தண்ணீர் பயன்படுத்தப்படாமலும், ஏரி சரியான பராமரிப்பின்றியும் அப்பகுதி மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, மீண்டும் அடிக்கடி குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதாலும் உள்ளாட்சி அமைப்புகள் தங்களது நீர் நிலைகளை முழுமையாகப் பாதுகாத்து மழை நீரைச் சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டுள்ளதால், சேலம் மாநகராட்சி மூலம் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஏரி ஆக்கிரமிப்



பாளர்களை நீதிமன்ற உத்தரவு மூலம் அகற்றிட ஆணைகள் பெறப்பட்டு தொடர்ந்து 20 நாட்கள் சுமார் 1,200 பணியாளர்கள் நாள்தோறும் பணியில் ஈடுபட்டும் மாநகராட்சி, வருவாய்த்துறை, காவல்துறை, இணைந்து 14 புல்டோசர்கள், பொக்லின் எந்திரங்கள் மூலம் ஏரியின் நீர்பிடிப்புப் பகுதிகளில் கட்டப்பட்டிருந்த அனைத்துக் குடிசை வீடுகளும், விவசாயப் பயிர்களும் அழிக்கப்பட்டு ஏரி ஆக்கிரமிப்பு முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. ஏரியின் நுழைவுப் பகுதிகளான வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் முள்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டும், 24 மணி நேரமும், காவலர்கள், மாநகராட்சி ஊழியர்கள் இனி யாரும் ஆக்கிரமிப்புச் செய்யாமல் கண்காணித்திட ரூ.8 இலட்சம் மதிப்பில் காவலர் அறைகள் கட்டப்பட்டு வருகின்றன. பிடாரி அம்மன் கோயில் அருகில் செக்போஸ்ட் அமைக்கப்பட்டுள்ளது. நீர்ப் பிடிப்பு பகுதிகளிலிருந்து மழைநீரைச் சேமித்திட 6 இடங்களிலிருந்து வரத்து வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வரும் மழை காலத்தில் ஏரியின் முழு கொள்ளளவும் மழை நீர் சேமித்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகப் பனமரத்துப்பட்டி ஏரி மூலம் மாநகராட்சிக்கு வருவாயைப் பெருக்கிட இங்குள்ள தென்னை மரங்கள் சிறப்பாகப் பராமரிக்கப் படவுள்ளன. சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட நிழல் தரும் மரங்களும் நடப்படவுள்ளன. ஏரியின் பழமையை இயற்கைச் சூழலுக்கேற்ப மீண்டும் புதுப்பித்துப் பாதுகாக்கப்படும்.

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான பனமரத்துப் பட்டி ஏரி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மழை நீர் சேகரிக்கப்படுவதன் மூலம், கடல் கரையிலிருந்து மிகவும் தொலைவில் உள்ள சேலம் பகுதி மக்களுக்கு ஓர் கடலைப் பார்ப்பது போல் தோற்றமளிக்கும். மேலும், சேலம் மற்றும் பனமரத்துப்பட்டி ஒன்றியப் பகுதிகளைச் சார்ந்த சுமார் 200 கிராமங்களின் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதனால் அப்பகுதிகளில் எந்த நாளும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லை. எதிர்காலத்தில் பனமரத்துப்பட்டி ஏரி சுற்றுலாத் தலமாகவும் பல்வேறு மூலிகைப் பண்ணைகளை உருவாக்குவதன் மூலம் சேலம் மாநகராட்சிக்கு நிரந்தர வருவாய் பெருகவும் வாய்ப்புகள் உள்ளன.

ஏரியின் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியில் மாநகர மேயர் வணக்கத்திற்குரிய ஆர். சுரேஷ்குமார் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் திரு. பால்சாமி, மாநகரப் பொறியாளர் திரு. இரா. விஜய்குமார், மாநகர திட்டப்பிரிவு நிருவாகப் பொறியாளர் திரு. ச.ந. மணி ஆகியோர் மற்றும் மாநகராட்சியின் பொறிஞர் பிரிவைச் சேர்ந்த அனைத்து உதவிப் பொறியாளர்களும், தொழில்நுட்ப உதவியாளர்களும் பனமரத்துப்பட்டி ஏரியில் முகாமிட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியில் ஈடுபட்டார்கள். சேலம் மாநகராட்சிப் பகுதிகளின் இயற்கை நீர் ஆதார அமைப்பை ஆக்கிரமிப்பாளர் களிடமிருந்து மீட்டு ஏரியைத் தூய்மைப்படுத்தியதைப் பாராட்டி சேலம் மாநகர மக்கள் மாநகராட்சிக்கும் தமிழக அரசுக்கும் பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளார்கள்.

– த. மருதபிள்ளை
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாநகராட்சி

* * *

**போ**லியோ என்ற வைரஸ் நுண்கிருமிகள் குழந்தைகளைப் பாதிக்கச் செய்து அவர்களின் கால்களை நிரந்தரமாக ஊனமடையச் செய்கின்றன. போலியோ நுண் கிருமிகள் அசுத்தமான தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்கள் மூலம் குழந்தைகளிடையே பரவுகின்றன. இந் நோய் வருமுன் காப்பதே முக்கியமாகும். அதற்கு ஒரே வழி, ஆண்டுதோறும் நடத்தப்படும் பல்ஸ் போலியோ முகாம்களில் அனைத்து குழந்தைகளுக்கும் தவறாமல் சொட்டு மருந்து கொடுப்பதுதான். உலக அளவில் 15 நாடுகளைத் தவிர ஏறக்குறைய எல்லா நாடுகளும் போலியோவை ஒழித்துவிட்டன. அந்த 15 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

**முக்கிய அம்சங்கள்**

1. போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது.
2. எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம், அதனால் எந்த பாதிப்பும் இல்லை.
3. ஓரிரு நாட்களுக்கு முன்பு சொட்டு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் கொடுக்கவேண்டும்.
4. முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.
5. வயிற்றுப்போக்கு, சளி, காய்ச்சல் மற்ற சிறு சிறு உபாதைகள் உள்ள குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.
6. இரண்டொரு நாட்களுக்கு முன் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.
7. சென்ற முகாமின்போது விடுபட்ட குழந்தைகளுக்கும் இந்த முகாமில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கவேண்டும்.

# போலியோவை ஒழிக்க அரசு நடவடிக்கை

**பல்ஸ் போலியோ முகாம் எதற்காக ?**

ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாக ஐந்து வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பது போலியோ நோய் ஒழிப்புத் திட்டத்தின் முக்கியச் செயல்பாடாகும். பாதுகாப்பான வேக்ஸின் கொடுக்கப்படும்போது, நோய் பாதிப்புக்கு ஏதுவாகும் குழந்தைகளின் குடல்களிலுள்ள போலியோவை உண்டாக்கும் கொடிய நுண்கிருமிகள் இரத்தத்திற்குள் செல்லவிடாமல், மலத்தின் வழியாக வெளியேற்றப்பட்டு, சூரிய வெப்பத்தால் அழிக்கப்படுகின்றன. வழக்கமாகக் கொடுக்கும் தடுப்புமருந்தின் மூலம் போலியோநோய் பரவாமல் தடுக்கப்பட்டாலும் ஒரே சமயத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நுண்கிருமிகள் பரவாமல் சுற்றுச் சூழலிலிருந்து அறவே ஒழிக்க முடியும். ஆகவே ஒரு குழந்தை கூட விடுபடாமல் அனைத்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் சொட்டுமருந்து கொடுக்கப்பட வேண்டும்.

சென்ற முறையைப் போலவே இந்தச் சுற்றிலும், தமிழ்நாட்டில் சுமார் 40,399 சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக் கூடங்கள்



மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட்டன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம், கோயில்கள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாட்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தனியார் மருத்துவர்களும் தங்களது மருத்துவமனைகளில் முகாம் நாட்களில் போலியோ சொட்டு மருந்து இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சுமார் 70 இலட்சம் குழந்தைகள் இதன் மூலம் பயன் பெற்றனர். இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பல்வேறு அரசுத் துறைகள், ரோட்டரி சங்கம் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த முகாம்களில் ஈடுபடுத்தப்பட்டனர். சொட்டு மருந்து கொடுக்கப் பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை சுண்டு விரலில் "ஜென்ஷன் வயலட்" என்ற அடையாள திரவம் வைக்கப்பட்டது. குழந்தைகள் வாய்க்குள் விரலை வைத்தாலும் இந்தத் திரவத்தால் எந்த ஆபத்தும் ஏற்படாது.

ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து தரப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட பல்ஸ் போலியோ முகாம்கள் நல்ல வெற்றியைத் தந்துள்ளன. ஆனாலும் அண்டை மாநிலங்களிலிருந்து போலியோ கிருமிகள் தமிழ்நாட்டிற்குள் பரவ நேரிட்டதால் எல்லா குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்துவழங்குவது முக்கியமாகும்.

இதுவே சரியான தருணம். நாட்டிலேயே போலியோ பாதிப்பு தற்போது மிகவும் குறைவாக உள்ளது. ஆகவே முகாம் நடைபெறும்போது ஒரு குழந்தை கூட விடுபடாமல் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டால் போலியோ நோயை எளிதில் ஒழித்துவிடலாம்.

போலியோ இல்லாத சமுதாயத்தை
உருவாக்குவோம்.

* * *

# நீலகிரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள்

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் 3ஆவது கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றைய தேதியில் மொத்தம் 3,788 குழுக்கள் மாவட்டம் முழுமையிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும், நகராட்சி தொகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப் பட்ட 9 தொண்டு நிறுவனங்களின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 60,879 குடும்பங்களில் சுமார் 59,564 மகளிரைக் கொண்டு இக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.



தாழ்த்தப்பட்ட பழங்குடியினத்தைச் சார்ந்த 19,132 வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் இருந்து சுமார் 15,000 பெண்களைக் கொண்டு அவர்களுக்கென சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 30 சதவிகிதம் உள்ள இம்மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் ஜூலை 2004 மாதம் வரை ரூ.7.69 கோடி அளவிற்கு தங்களது வாரந்திர சிக்கன சேமிப்பின் மூலம் சேமித்து அத்தொகையைத் தங்களுக்குள்ளாகவே கடன் வழங்கி அதை ரூ.8.23 கோடியாகப் பெருக்கியுள்ளதுடன் கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்தும் வெளி வந்துள்ளனர்.

அரசு இக்குழுக்களுக்குப் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கித் திட்டம் (NABARD) மற்றும் பொது உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் நேரடிக் கடன் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் மானியத்துடன் கூடிய சுழல் நிதி (முதல் திட்டம்) மற்றும் பொருளாதார நடவடிக்கை கடன் மற்றும் வாழ்க்கைச் செலவினங்களுக்கான கடன் (நுகர்வோர்) ஆகியவற்றின் மூலம் நிதி உதவிகள் செய்து வருகின்றன.

ஜூலை 2004 முடிய இக்குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்ட விவரம் :

| வ. எண் | திட்டம் | கடன் பெற்ற குழுக்களின் எண்ணிக்கை | கடன் பெற்ற தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | எஸ்.ஜி.எஸ்.ஒய். சுழல் நிதி | 497 | 124.25 |
| | எஸ்.ஜி.எஸ்.ஒய். பொருளாதார கடன் | 130 | 283.71 |
| 2. | நபார்டு | 1,346 | 523.56 |
| 3. | தாட்கோ–சுழல் நிதி | 341 | 85.25 |
| | தாட்கோ பொருளாதார கடன் | 192 | 267.39 |
| 4. | எச்.ஏ.டி.பி.–சுழல் நிதி | 12 | 3.00 |
| 5. | கூட்டுறவு வங்கி (பி.சி. / எம்.பி.சி.) | 40 | 25.00 |
| 6. | கே.வி.கே. – உபாசி | 4 | 20.00 |
| | மொத்தம் | 2,562 | 1,332.16 |

அனைத்து அரசுத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் இக்குழுக்களுக்கு வருவாய் துறையின் மூலம் 35 நியாய விலைக் கடைகள் நடத்தும் உரிமையையும், பால் நிறுவனத்தின் மூலம் பால் பொருட்கள் சில்லரை விற்பனை உரிமங்களும், வனத் துறையின் மூலம் சிறு வனப் பொருட்கள் சேகரித்து விற்பனை செய்யும் உரிமங்களும், சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா மையங்களைப் பராமரிக்கும் உரிமங்களும் தோட்டக்கலைத் துறையின் மூலம் பசுமைக் குடில்கள் அமைத்து அந்தோரியம் மற்றும் கார்னேஷன் போன்ற விலை உயர்ந்த மலர்களைச் சாகுபடி செய்ய கடன் மற்றும் தொழில்நுட்ப உரிமங்களும் மற்றும் அரிய மருத்துவக் குணங்கள் கொண்ட மூலிகைச் செடிகளை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்ய வசதிகளும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் இக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய சந்தை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஊரக வளர்ச்சி முகமையின் சார்பிலும் கிராமப் பகுதிகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள வணிக வளாகங்களில் சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குறைந்த வாடகையில் அவர்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. நீதித்துறை வல்லுநர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மூலம் மகளிருக்கான வன்முறைகளுக் கெதிரான சட்டப் பாதுகாப்புகள் மற்றும் குடும்பச் சொத்தில் அவர்களுக்கு உள்ள உரிமைகள் மற்றும் சமூக அந்தஸ்து குறித்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு விதிமுறைகள் அடங்கிய புத்தகங்கள் மகளிர் திட்டம் மூலம் அச்சடிக்கப்பட்டு *(சட்டம் என்ன சொல்கிறது)* விநியோகிக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கைகளின் மூலம் மகளிருக்கான அதிகாரப் பகிர்வு பரவலாக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டாக அனுசரிக்கப்பட்டதுடன் ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினமாக அனைத்து உலக நாடுகளிலும் அனுசரிக்கப்பட்டு மகளிருக்கான சமூகப் பொருளாதார அந்தஸ்து வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வாழும் எளிய மக்கள் சுற்றுச் சூழல் மாசுப்படாத வகையில் அன்றாட சமையல் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தமிழக அரசின் மூலம் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இடையே புதுமண தம்பதிகளுக்குத் தலா ரூ.750 செலவில் இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தில் இம்மாவட்டத்தில் இதுவரை ரூ.64,100 வரை 81 தம்பதியினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் வசதிகள் ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் அவர்கள் தலைமைப் பண்புகளைப் பெற்று அவர்கள் செய்யும் தொழில் மேன்மை அடைந்து வெற்றிபெற தேவையான அனைத்துப் பயிற்சிகளும் பல்வேறு நிலைகளில் வழங்கி அவர்கள் நிலைத்த தன்மையை அடைவதற்கு வழிவகை செய்யப்படுகிறது. குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, ஊக்குனர் மற்றும் பிரதிநிதிப் பயிற்சி, திறன் வளர்ப்புப் பயிற்சி, தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி போன்ற பயிற்சிகள் இதில் அடங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கப்பட்ட "ஐந்து ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி" வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும், இதுவரை இம்மாவட்டத்தில் 7,350 மகளிருக்கு இந்த அவசியமான அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 2,275 சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியும், 928 உறுப்பினர்களுக்குத் திறன் பயிற்சியும், 134 உறுப்பினர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் மகளிர் திட்டச் செயல்பாடுகளைச் சமூக நலத்துறைச் செயலரும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்ட மேலாண்மை இயக்குநருமான திரு. எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மகளிர் திட்ட செயல் இயக்குநர் திரு. என்.முருகானந்தம், இ.ஆ.ப., மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.எஸ். முத்துசாமி,இ.ஆ.ப., ஆகியோர் கடந்த 21.8.2004 முதல் 23.8.2004 தேதிகளில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து இச்சுயஉதவிக் குழுக்களின் நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். குன்னூரில் சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், பொம்மைகள், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு, கைப்பைகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு அவற்றின் விற்பனையை மேலும் பெருக்க ஆலோசனை வழங்கினார்கள்.

வண்டிச்சோலை பகுதியில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் புதிதாகத் தொடங்கிய பல்பொருள் அங்காடியைத் திறந்து வைத்து அவர்கள் விற்பனையைப் பெருக்க ஆலோசனை வழங்கினார்கள். சோலாடாமட்டம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் அடங்கிய சுயஉதவிக் குழு ஈடுபட்டுள்ள நீலகிரி தைலம் காய்ச்சும் இடத்தைப் பார்வையிட்டுக் காய்ச்சுதல் மற்றும் வடிகட்டுதலில் புதிய மேம்படுத்தப்பட்ட முறையைப் பின்பற்றி தைல உற்பத்தியை அதிகரித்து அதிக இலாபம் ஈட்ட அறிவுரைகள் வழங்கினார்கள். மாலையில் தேயிலை வாரியம் மகளிர்

சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கியுள்ள வாய்ப்பினைப் பயன்படுத்தி தரமான "பச்சைத் தேயிலை" கொள்முதல் செய்யும் திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளிடமிருந்து தரமான தேயிலை பெற்று தனியார் தேயிலை தொழிற்சாலைகளுக்கு அவற்றைத் தரம் பிரித்து விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு சுயஉதவிக் குழுவைச் சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து தக்க ஆலோசனைகள் வழங்கினார்கள்.



தேயிலை வாரியம் மற்றும் உபாசி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் தக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டுச் சுயஉதவிக் குழுக்கள் தரமான தேயிலை கொள்முதல் செய்யப்படுவதன் மூலம் கடந்த 2 வருடங்களுக்கு முன் நிலவிய தேயிலைத் தொழிலில் ஏற்பட்ட இக்கட்டான பின்னடைவு தற்போது சீர் செய்யப்பட்டுத் தரமான பச்சைத் தேயிலையின் விலை கிலோவிற்கு ரூ.9.50 என்ற நிலையில் ஏறுமுகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**22.8.2004** அன்று உதகை அருகிலுள்ள நீர்காசிமந்து பழங்குடியினர் தோடா இன மக்கள் வசிக்கும் பகுதியைப் பார்வையிட்டு, அவர்களுடைய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் "தோடா எம்ராய்டரி" என அழைக்கப்படும் தயாரிப்புகளைப் பார்வையிட்டு அவர்கள் விற்பனையை மேம்படுத்த மகளிர் திட்ட அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கினார்கள்.

கூடலூர் பகுதியில் ஏழுமரம் குடியிருப்பில் தாழ்வான சமவெளிப் பகுதிகளில் மழைநீரைத் தேக்கியும், மண்ணின் ஈரத் தன்மையைப் பயன்படுத்தியும் தாழ்த்தப்பட்டோர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் ஈடுபடும் நெல், வாழை, இஞ்சி, மஞ்சள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி நடவடிக்கைகளைப் பார்வையிட்டு அவர்களது வாழ்க்கைத் தரம் உயர தக்க ஆலோசனைகளை வழங்கினார்கள்.

மசினகுடி சொக்கனல்லி ஆதிவாசிகள் குடியிருப்பில் பயிற்சி பெற்ற ஆதிவாசிப் பெண்கள் பயிர் செய்து வரும் "அந்தோரியம்" வகை கொய் மலர்ச் சாகுபடியைப் பார்வையிட்டு அவற்றின் உற்பத்தி மற்றும் சாகுபடியை விரிவுபடுத்த ஆலோசனைகள் வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து சமவெளிப் பகுதியான ஆனைகட்டி மற்றும் சிறியூர் பகுதிகளில் பழங்குடியினர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் போதிய பயிற்சிகளுக்கு பின் மேற்கொண்டு வரும் மூலிகை / மருத்துவச் செடிகள் பயிர் செய்து வருவதைப் பார்வையிட்டு, அவற்றின் விற்பனையை மேம்படுத்தவும் தக்க ஆலோசனைகள் வழங்கினார்கள். அப்போது உடன் இருந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வ) அவர்களை மலர்ச் சாகுபடியை விரிவாக்கம் செய்யத் தேவையான கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி உதவிகளை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

தலைவர் / மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சுய சார்பு அடைவதில் அடுத்த கட்டமான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்ததுடன் இக்கூட்டமைப்புகள் நன்கு செயல்படும் முகமாக முதல் நாள் குன்னூர் பகுதியில் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் விவாதித்து அவர்களுடைய கருத்துகளைக் கேட்டறிந்து தக்க ஆலோசனைகள் வழங்கியதுடன் இரண்டாம் நாள் கூடலூர் பகுதியில் செயல்படும் கூட்டமைப்புகளுடன் கலந்துரையாடி அவர்களின் முன்னேற்றத்திற்குத் தக்க ஆலோசனைகள் வழங்கினார்கள்.

குன்னூர் உபாசி வேளாண் அறிவியல் மற்றும் மத்திய தேயிலை வாரியமும் இணைந்து குன்னூரில் நடத்திய "தரமான தேயிலை உற்பத்தியில் சுயஉதவிக் குழுவின் பங்கு" என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வேளாண்மை இயக்குனர் அவர்கள் சிறப்புரையாற்றி உபாசி மூலம் வழங்கப்பட்ட கடன் தொகைகள் மற்றும் வேளாண் உபகரணங்களைச் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கி அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்கள். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடந்தது. செயல் இயக்குநர், தேயிலை வாரியத்தின் முதன்மை மண்டல செயல் அலுவலர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

தலைவர் / மேலாண்மை இயக்குநர் மற்றும் செயல் இயக்குநர் ஆகியோர் இம்மாவட்டத்தில் மூன்று தினங்கள் சுற்றுப் பயணம் செய்து சுயஉதவிக் குழுக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் முன்னேற்றத்திற்குத் தக்க ஆலோசனைகள் வழங்கியதன் மூலம் மகளிர் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மேலும் சிறப்பாக நடைபெற புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

**– திரு. வி. ராமநாதன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
(முழுக் கூடுதல் பொறுப்பு)
நீலகிரி

★ ★ ★

# மகளிர் சுயஉதவிக்குழுக்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகள்

கொள்ளாமல், சமூகப் பிரச்சினைகள், கிராமப் பொது அடிப்படை வசதிகள் ஆகியவற்றிலும் அக்கறை காண்பித்து ஒட்டு மொத்தக் கிராமமும் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 72 குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளிகளில் 9 பள்ளிகளை மகளிர் சுயஉதவிக் குழுவினர் சிறப்பாக ஏற்று நடத்தி வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் உள்ள 7,440 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 1.41 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுவினர் அழகான ஆடை தயாரிப்பது முதல் ஊறுகாய் தயாரிப்பது வரை பல்வேறு தொழில்களைச் சிறப்பாகச் செய்து பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்து வருகின்றனர்.

சமுதாயத்தின் புதிய சக்தியாக உருவெடுத்துள்ள மகளிர் சுயஉதவிக் குழுவினர் தற்போது கல்வி மேம்பாட்டிலும்



திருநெல்வேலி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தங்களுடைய உறுப்பினர்களின் தேவையை மட்டும் பூர்த்தி செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், ... ஈடுபட்டுள்ளனர். சமூகத்தின் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைச் சேர்த்து அவர்களுக்குக் கல்வி கற்பித்து வருகின்றனர்.



இந்த மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டம் பகுதி–2ன் கீழ் 72 சிறப்புப் பள்ளிகள் தொடங்கப்பட்டு 2,500 குழந்தைகளைச் சேர்க்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தொடர்ந்து, மகளிர் சுயஉதவிக் குழுவினரிடம் இந்த சிறப்புப் பணிகளை ஒப்படைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார். கீழநீலிதநல்லூர், குலசேகரப்பேரி, அரியப்பபுரம், காசிதர்மம், தேவிப்பட்டணம், தென்காசி, மீனாட்சிபுரம், ஊர்க்காடு, சிந்தாமணி ஆகிய ஊர்களில் உள்ள 9 சிறப்புப் பள்ளிகளை அந்தந்தப் பகுதியில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுவினர் ஏற்றுள்ளனர்.

இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ள இந்தச் சிறப்புப் பள்ளிகளில் தலா 25 குழந்தைத் தொழிலாளர்கள் வீதம் மொத்தம் 225 பேர் கல்வி கற்று வருகின்றனர். ஆடு, மாடு மேய்க்கவும், பீடி சுற்றவும், கட்டுமான வேலைக்கும் சென்று கொண்டிருந்த குழந்தைகளை மகளிர் சுயஉதவிக் குழுவினரே மீட்டுவந்து பள்ளிகளில் சேர்த்துள்ளனர்.

ஆயத்த ஆடைகள் தயாரித்தல், கோலப்பொடி தயாரித்தல், மலர்க் கொத்து செய்தல், கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இப்போது கல்வி கற்பிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மகளிர் சுயஉதவிக் குழு மூலம் தென்காசியில் சிறப்புப் பள்ளியை நடத்தி வரும் 'மேதினி' குழுவின் ஊக்குநர் அந்தப் பள்ளியின் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார். அவர், "இதில் இலாபம் கிடையாது. ஆனால், ஏழைக் குழந்தைகளுக்கு கல்விக் கற்றுக் கொடுப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது" என்றார். இந்தப் பள்ளியின் மூலம் 2 பேர் ஆசிரியர், ஒரு உதவியாளர் என 3 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.1,500/– ஊதியம் கிடைக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எண்ணப்படி ஏழைப் பெண்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றம் அடைந்து தம் காலில் தாமே நின்று நிலைக்கவும், ஏழைக் குழந்தைகளின் வாழ்வு ஏற்றமடையவும் திருநெல்வேலி மாவட்டம் ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறது.

**– உல. இரவீந்திரன்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருநெல்வேலி*

* * *

துணி வகைகளில் சிறந்தது...

அதுவே முதலிடமும் வகிப்பது!

உங்கள் கோ-ஆப்டெக்ஸ்!

கோ-ஆப்டெக்ஸ்



- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

**மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.**

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!



# புதிய வடிவமைப்புடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரக சேலைகள் விற்பனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில், உலகச் சந்தையில் போட்டியிடும் வண்ணம் தமிழக கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள, 300–க்கும் மேற்பட்ட முற்றிலும் புதிய வடிவமைப்புடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரகச் சேலைகளை விற்பனைக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டு ஒன்றுக்கு 500 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி வகைகளை உற்பத்தி செய்து வருகின்றன. கைத்தறி நெசவாளர்களின் மீது தனி அக்கறை கொண்டு, அவர்களும் அவர்களது குடும்பமும் வளம் பெற்று வாழ்ந்திட வேண்டும் என்ற சீரிய நோக்குடன் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவ்வாறு அவர்கள் தயார் செய்கின்ற துணி வகைகள் யாவும் உடனுக்குடன் விற்று, முதல் காணப்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் உலகச் சந்தையில் போட்டியிடும் வண்ணம் புதிய வடிவமைப்பு மற்றும் வண்ணங்களுடன் கூடிய நவீன ரகங்களை உற்பத்தி செய்திட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையை ஏற்று, குஜராத் மாநிலம், அகமதாபாத்திலுள்ள

தேசிய வடிவமைப்பு நிறுவனம், சென்னையிலுள்ள நெசவாளர் சேவை மையம், தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் மற்றும் முன்னணி வடிவமைப்பாளர்களிடமிருந்து பல்வேறு வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளில் 300–க்கும் மேற்பட்ட நவீன வடிவமைப்புகள் பெறப்பட்டன. இந்த வடிவமைப்புகளைக் கொண்டு, காஞ்சிபுரம், ஆரணி, சேலம், பரமக்குடி, ஈரோடு, விருதுநகர், கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய பகுதிகளிலுள்ள கைத்தறி நெசவாளர்களால் கண்ணைக் கவரும் வகையில் பட்டு மற்றும் பருத்தி ரக சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

புதியதும், புதுமையானதுமான வடிவமைப்புகளுடன் கூடிய இந்த நவீன ரக பட்டு மற்றும் பருத்திச் சேலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில் விற்பனைக்கு அறிமுகப் படுத்தி வைத்தார்கள். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த கோயம்புத்தூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி ரக சேலையினை 443 ரூபாய் கொடுத்து பெற்றுக் கொண்டார்கள்.

தீபாவளிப் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடும் தமிழகத்து மக்கள் வாங்கிப் பயன் பெறும் வகையில் புதிய வடிவமைப்புடன் கூடிய



இந்தப் பட்டு மற்றும் பருத்திச் சேலைகள் தமிழகம் எங்கும் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்கள், கோ–ஆப்டெக்ஸ் அங்காடிகள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய பகுதிகளில் உள்ள லூம்வேர்ல்ட் (Loom World) விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, புதிய புதிய வடிவமைப்புகளுடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரகச் சேலைகள் கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை இந்த ஆண்டு கணிசமாக அதிகமாகும்.

இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிகக் கூலியும் தொடர்ந்து வேலைவாய்ப்பும் கிடைப்பதுடன் அவர்களது வாழ்க்கைத் தரமும் உயரும்.

* * *

# ஈத்து உவக்கும் இன்பம்

இரத்ததானம் என்பது ஒரு சிறப்பான போற்றுதற்குரிய செயலாகும். உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்கின்றனர். பலவித உயிரினங்கள் வாழ்கின்றன. இதில் ஒருவருக்கொருவர் அன்புடனும், பாசத்துடனும் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு ஒப்புர வாழ்தலே சிறப்பாகும். இயற்கை ஒரு நல்ல ஆசான், வழிகாட்டி. அது எவ்வளவோ வளங்களையும், பொருட்களையும் அனைவருக்கும் பாகுபாடின்றி அளிக்கிறது. இயற்கை கூறும் பாடம் கொடுத்து உதவுதல், இத்தகைய கொடுத்து உதவுதல், பிரதி பலன் பாராது மனமுவந்து கொடுத்தல் வேண்டும். வள்ளுவப் பெருந்தகையும் இதையேதான்,

ஈதல்; இசைபட வாழ்தல்; அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

– என்று கூறுகிறார்.

"மற்றவர்க்கு உதவி, வேண்டுபவர்களுக்கு உதவி, அவர்களின் துன்பத்தில் பங்கு கொண்டு ஒற்றுமையுடன் அமைதியாக வாழ்தல்தான் இந்த உலகில் பிறந்தவர்களின் ஊதியம் அல்லது பரிசு" என்கிறார். எனவே, நாம் அனைவரும் அத்தகைய ஈத்து உவக்கும் எண்ணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.



குருதிதானம் அல்லது இரத்ததானம் என்பது மகத்தானச் செயலாகும். அது ஒரு உயிர் காக்கும் உன்னதப் பணியாகும். இந்தச் செயல் என்பது ஒருவருக்கு மறுபிறவி அளிப்பதாகும்.

நம் ஒவ்வொருவர் உடலிலும் தோராயமாக 5 முதல் 6 லிட்டர் இரத்தம் உள்ளது. இதில் இரத்ததானத்தின் போது எடுக்கப்படுவது 350 மில்லி லிட்டர் மட்டுமே. அதாவது, சுமார் ஒன்றரை டம்ளர் அளவு. உடலில் அதனுடைய அளவு குறையாத அளவுக்கு உற்பத்தி ஆகிக் கொண்டிருக்கும். தானம் கொடுத்த அளவு இரத்தம், அடுத்த 24 மணி நேரத்திற்குள் சரி செய்யப்பட்டுவிடும். இதனால் கவலைப்பட வேண்டியதில்லை. கொடுப்பவருக்கு வலியோ, பலவீனமோ ஏற்படாது. ஆனால் ஒரு உயிரைக் காப்பாற்றிய பெருமை கிடைக்கும்.

மற்ற தானங்களைப் போல் அல்லாமல் இரத்த தானம் கொடுப்பதால் எந்தக் குறையும் ஏற்படாது. உயிர் காத்தோம் என்னும் மகிழ்ச்சி ஏற்படும். ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் இரத்ததானம் கொடுக்கலாம். இடைவெளி குறைந்தது மூன்று மாதம் இருக்க வேண்டும். டாக்டர்கள், வழக்கறிஞர்கள், வங்கி அதிகாரிகள், தொழிலதிபர்கள் என பல தரப்பினரும் மனமுவந்து இரத்ததானம் அளிக்க முன்வருகிறார்கள். ஐம்பது, அறுபது முறைக்கும் அதிகமாக இரத்ததானம் செய்து மகிழ்ந்து இருப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அரிமா சங்கம், ரோட்டரி கிளப் மற்றும் பல சமூக நல அமைப்புகள் அதில் அக்கறைகாட்டி, தங்கள் உறுப்பினர்களையும், பிறரையும் இந்த நல்ல செயலுக்கு ஊக்கமூட்டி, மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய அரிய செயலில், உயிர்காக்கும் பணியில், மற்றவருக்கு மறு பிறவி தரும் மகத்தான பணியில் நாம் அனைவரும் ஈடுபடாமல் இருக்கலாமா ? நாம் செய்யாமல் இருக்கலாமா. இன்றே இரத்ததான முகாமிலே பங்கு பெறுவோம். இரத்ததானம் செய்து மனநிறைவு அடைவோம்.

**இரத்ததானத்தின் அவசியம்**

விபத்துகளில் சிக்கும்போது இரத்த இழப்பு ஏற்படுகிறது. பெரிய அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்போது கூடுதலாக இரத்தம் தேவைப் படுகிறது. தீக்காயம் அடைந்தவர்களுக்கும், இரத்த சோகை அதிகம் உள்ளவர்களுக்கும், தாலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இரத்தம் அளிக்க வேண்டியுள்ளது. இரத்தப் புற்று நோய் தாக்கியவர் களுக்கும் உயிர் காக்கும் மருந்தாக இரத்தம் தேவைப்படுகிறது. மேலும் பல சூழ்நிலைகளில் புதிய இரத்தம் (Fresh Blood) தேவைப்படுகிறது. எனவே, மனமுவந்து இரத்ததானம் செய்வோரின் சேவை அதிகம் தேவைப்படுகிறது. இரத்தத்தை நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைக்க இயலாது. எனவே, இரத்ததானம் கொடுக்க விழைவோர் இரத்த வங்கிகளில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டால், தேவைப்படும்போது அவசர நேரத்தில் அவர்களைத் தொடர்பு கொண்டு அழைக்க ஏதுவாக இருக்கும்.

18 முதல் 60 வயது வரையுள்ள எல்லா ஆண்களும், பெண்களும் இரத்ததானம் செய்யலாம். இரத்ததானம் செய்பவரின் எடை குறைந்தபட்சம் 45 கிலோ இருக்க வேண்டும். ஹீமோகுளோபின் (Haemoglobin) அளவு 12.5 கிராமுக்கு மேல் இருக்க வேண்டும். இரத்த அழுத்தம் இயல்பாக இருக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தாராளமாகக் கொடுக்கலாம். மஞ்சள் காமாலை, மலேரியா, எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் அவற்றினால் பாதிக்கப்படாதவராக இருக்க வேண்டும்.

**இரத்ததானம் செய்ய**
**20 நிமிடங்களே ஆகும்.**
**இரத்ததானம் செய்தவுடன்**
**வழக்கம்போல அன்றாட**
**வேலைகளைச் செய்யலாம்.**
**எனவே, இரத்ததானம் கொடுக்க**
**தகுதியுள்ளோர் அனைவரும்**
**தயக்கமின்றி, மனமகிழ்ச்சியுடன்**
**உயிருக்குப் போராடிக்**
**கொண்டிருப்போருக்கு**
**இரத்ததானம் கொடுத்து**
**மனித நேயத்தை வார்த்தைகளால்**
**அல்ல, செயலால் காட்டலாம்.**

இரத்ததானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்ததானம் செய்தவுடன் வழக்கம்போல அன்றாட வேலைகளைச் செய்யலாம். எனவே, இரத்ததானம் கொடுக்க தகுதியுள்ளோர் அனைவரும் தயக்கமின்றி, மனமகிழ்ச்சியுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்போருக்கு இரத்த தானம் கொடுத்து மனித நேயத்தை வார்த்தைகளால் அல்ல, செயலால் காட்டலாம். உயிர் காக்கும் உன்னதப் பணியைச் செய்து ஈத்து உவக்கும் பெருமையடையலாம். மன நிறைவும் அடையலாம்.

– டாக்டர் ஆர். திருநாராயணன்
இராயப்பேட்டை அரசு மருத்துவமனை,
சென்னை.

* * *

# ஆண்டிபட்டியில்
# ரூ.74 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்



**தே**னி மாவட்டம் மலைகள் சூழ்ந்துள்ள மாவட்டமாகும். தேனி மாவட்டம் ஆண்டிபட்டிக்கு அருகில் சுமார் 7 கி.மீ. தொலைவில் வைகை அணை குறுக்கே 1958–ஆம் ஆண்டு வைகை அணை கட்டப்பட்டு மதுரை, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குக் குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆண்டிபட்டி பகுதிக்குக் குடிநீர் தேவைக்கருதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15.4.2002 அன்று நடைபெற்ற அரசு விழாவில், வைகை அணையை நீர் ஆதாரமாகக் கொண்டு ரூ.74 கோடி மதிப்பீட்டில் ஆண்டிபட்டி–சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இதனையடுத்துத் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியத்தில் 43 கிராமங்களுக்கும், பெரியகுளம் ஒன்றியத்தில் 11 கிராமங்களுக்கும், ஆண்டிபட்டி தேர்வு நிலை ஊராட்சிக்கும் குடிநீர் வழங்க திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வந்தன.

மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஒன்றியத்தில் 83 கிராமங்கள், சேடப்பட்டி ஒன்றியத்தில் 127 கிராமங்கள், டி. கல்லுப்பட்டி ஒன்றியத்தில் 113 கிராமங்கள், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 29 கிராமங்கள், கள்ளிக்குடி ஒன்றியத்தில் 82 கிராமங்கள், திருமங்கலம் ஒன்றியத்தில் 16 கிராமங்கள் உள்பட மொத்தம் 504 கிராமங்களுக்கும், எழுமலை, பேரையூர், டி.கல்லுப்பட்டி ஆகிய தேர்வு ஊராட்சிகளுக்கும், உசிலம்பட்டி நகராட்சி உட்பட சுமார் 5.66 இலட்சம் பொதுமக்கள் பயன் அடையும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வைகை தடுப்பு அணை வலது கரையில் 5 மீட்டர் ஆழத்தில் கிணறு அமைக்கப்பட்டு, வினாடிக்கு 15 கன அடி நீர் எடுக்கப்படுகிறது. இதனை 100 எச்.பி., மின்பம்ப் மூலம் 24 மணி நேரமும் உறிஞ்சி "எரேட்டர்"க்கு அனுப்பப்படுகிறது. எரேட்டரில் திறந்த வெளியில் நீரை வடியச்செய்யும்போது ஆக்சிஜனோடு கலந்து துர்நாற்றம், இரும்புச் சத்து குறைக்கப் படுகிறது. பின்னர், சிமெண்ட் கால்வாய் வழியாகக் கொண்டு செல்லப்பட்டு நீரில் உள்ள மாசுகளைப் படியவைக்க ஆலம் திரவமாகக் கலக்கப்படுகிறது. 'கிளார் பிளாக்குலேட்டர்' என்னும் 2 மெகா தொட்டியில் நீர் சேமித்து, ஒரு மணி நேரத்திற்கு 6.30 இலட்சம் லிட்டர் நீர் வடிகட்டி வெளியேற்றப்படுகிறது. தொடர்ந்து "பில்டர்பெட்"



பகுதிக்குச் செல்கிறது. அங்குள்ள 10 தொட்டிகளில் கூழாங்கற்கள், மணல் பரப்பிய தொட்டிகளில் வடிகட்டி, குளோரின் வாயு கலந்து, 100 சதவிகித தூய்மையான குடிநீர் சப்ளைக்குத் தயாராகிறது. நிமிடத்திற்கு 18 ஆயிரம் லிட்டர் வெளியேற்றப் படுகிறது. 52 கி.மீ. தூரத்திற்குப் பல்வேறு குழாய்கள் மூலம் 18 இடங்களில் உள்ள பிரதான நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீர் சேகரமாகிறது. அங்கிருந்து பிரித்து அனுப்பப்படுகிறது.

அதில், ஆண்டிபட்டி பகுதியில் பணிகள் முழுமையாக முடிவடைந்து, கடந்த 20 நாட்களுக்கு மேலாக நாள்தோறும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அதே போல், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தினால் பயன் பெறக்கூடிய மற்ற கிராமங்களில் 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சுனில் பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பணிகளை ஆய்வு செய்து பணிகளைத் துரிதப்படுத்தி, வேகமாகப் பணிகள் நடைபெறும் வகையில் வழி கண்டு உள்ளார்கள்.

இத்திட்டத்தினால் பயன்பெறக்கூடிய ஆண்டிபட்டி பகுதி பொதுமக்கள் கூறுகையில், “வறட்சியால் டி.சுப்புலாபுரம், டி. பொம்மிநாயக்கன் பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் கடந்த பல ஆண்டுகளாகக் குடிநீருக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆண்டிபட்டி – சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் ஆண்டி பட்டியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர்ப் பஞ்சம் தீர்ந்தது. இப்பகுதி வாழ் மக்களின் நீண்ட நாள் கனவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியுள்ள வர்களாக இருப்போம்” என ஆண்டிபட்டி மக்கள் மகிழ்ச்சித் தெரிவித்தார்கள்.

**– ச. செல்வராஜ்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.

* * *

# விருதுநகர் மாவட்டத்தில் மீன்வள மேம்பாடு



பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, சத்துணவுத் தேவையை நிறைவு செய்ய செயல்படுத்தப் படும் பல்வகை உணவு உற்பத்திக்கான செயல் திட்டங்களில் மீன்வள மேம்பாட்டுப் பணிகளும் அடங்கும். அறிவியல் சார்ந்த மீன்வளர்ப்புத் தொழில் நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலம், உள் நாட்டு நீர் ஆதாரங்களைத் திறம்பட முழுமையாகப் பயன்படுத்தி கிராமப்புறங்களில் சுய வேலைவாய்ப்பை உருவாக்குதல், உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குதல், சத்துணவைக் கிராமப்புற மக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்தல், உள்நாட்டு மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் மீன்வளத்துறையால் மாநில அளவில் பல்வேறு மீன்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

உள்நாட்டு நீர் நிலையில் இயற்கையாக வளர்ந்து வந்த மீன்களை மட்டுமே காலங்காலமாகப் பிடித்து வந்த நிலை மாறி, விரைவில் வளரும் மீன் குஞ்சுளை நீர் நிலையில் இருப்புச் செய்து வளர்த்துப்பிடிக்கும் நிலை உருவாகி பல்வேறு தரப்பினரும் மீன் வளர்ப்பைச் சுய வேலைவாய்ப்பாகவும் சிறிய/பெரிய நிறுவனங்களால் தனித் தொழிலாகவும் இன்றளவில் செய்துவரப்படுவது உள்நாட்டு மீன் வளர்ப்பில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய மாற்றமாகும்.

விருதுநகர் மாவட்டம் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக இருந்தாலும் மேற்கு மலைத் தொடர்ச்சியை யொட்டி மாவட்டத்தில் ஒரு பகுதி அமைந்திருப்பதாலும், நான்கு நீர்த்தேக்கங்கள் அமைக்கப் பெற்றிருப்பதாலும் பல நீர்ப்பாசனக் கண்மாய்கள் ஏற்படுத்தப்பட்டு இருப்பதாலும் பிற மாவட்டங்களுக்கு இணையாக மீன்வளம் பெருக வாய்ப்புள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் 4 சிறிய நீர்த்தேக்கங்கள் (946 எக்டர்) 420 சிறிய நீர்ப்பாசனக் கண்மாய்கள் (7,827 எக்டர்), 312 பெரிய நீர்ப்பாசனக் கண்மாய்கள் (17,328 எக்டர்), 974 ஊராட்சிக் குளங்கள் (4,792 எக்டர்), 2 நகராட்சிக்குளங்கள் (27 எக்டர்), 16 இந்து சமய அறநிலையைச் சார்ந்த குளங்கள் (19 எக்டர்) மற்றும் 90 தனியார் குளங்கள் (130 எக்டர்) உள்ளன.

**மீன்வள மேம்பாட்டுப் பணிகள்**

1. பிளவுக்கல் அணையில் (வத்திராயிருப்பு ஒன்றியம்) 0.35 எக்டர் பரப்பளவு கொண்ட அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணை செயல்பட்டு வருகிறது. அரசு மீன் குஞ்சு பொறிப்பகங்களிலிருந்து (மணிமுத்தார், பவானிசாகர், மேட்டூர் அணை) உயர்ரக நுண் மீன் குஞ்சுகளை (கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை) பருவ காலங்களில் (ஜூன் – செப்டம்பர்) பெற்று வந்து, இருப்புச் செய்து, விரலிகளாக வளர்த்து மீன்வளத்துறை நீர் நிலைகளில் இருப்புச் செய்வதுடன் பொது மக்களுக்கும் அரசு நிர்ணயவிலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 7 இலட்சம் மீன் விரலிகள் வளர்த் தெடுப்பதற்கான இலக்குடன் இப்பண்ணை செயல்பட்டு வருகிறது.

2. துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 4 நீர்த்தேக்கங்களில்– பெரியார் நீர்த்தேக்கம் (76.10 எக்டர்), கோவிலார் நீர்த்தேக்கம் (73.67 எக்டர்) (வத்திராயிருப்பு ஒன்றியம்), குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் (316.40 எக்டர்) (அருப்புக்கோட்டை ஒன்றியம்) மற்றும் வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் (480 எக்டர்) (வெம்பக்கோட்டை ஒன்றியம்), ஆண்டுதோறும் உயர்ரக மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டு, மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மூலம் பங்கு முறை மீன்பிடிப்புச் செய்து பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு சுமார் 30டன் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது.

3. மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளோருக்கும், மீன் வளர்ப்போருக்கும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி மீன் வளர்ப்பைச் சுய வேலைவாய்ப்பாக

மேற்கொள்ளவும், மீன் வளர்ப்பில் இலாபம் பெறவும் இத்துறை உதவி வருகிறது. மேலும், உள் நாட்டு மீன்வளத்துறை நிரந்தரமாகக் கொடுக்கும், 'ஆப்பிரிக்க தேளி மீன் வளர்ப்பு' தடை செய்யப்பட்டுள்ள விவரம் மீன் வளர்ப்போருக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

4. ஊராட்சி/ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஊருணி/குளம்/கண்மாய்களில் மீன் வளர்த்துப் பயன்பெறும் உரிமையைக் குத்தகைக்கு விட தொழில்நுட்ப ரீதியாக மீன் வளத்துறையால் அரசு குறைந்தபட்ச குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து ஊராட்சிகளின் வருவாய் கணிசமாகப் பெருகவும் உதவப்படுகிறது.

**மீனவர் நலன்**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 5 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 1,642 உறுப்பினர்கள் உள்ளனர். துறையின் கட்டுப் பாட்டிலுள்ள நீர் நிலைகளில் மீன் பிடிப்பில் ஈடுபட மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் சுமார் 100 மீனவர் குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றனர். அரசு நீர் நிலைகளின் மீன் பாசி உரிமையைப் பெற்றிட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன.

மீனவர்களின் நலன் கருதி, மத்திய, மாநில அரசே இலவசமாக மீனவர் குழு விபத்துக் காப்புறுதித்திட்டம் செயல்படுத்துகிறது. மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் எவரேனும் விபத்தில் இறந்தால் அவரின் வாரிசுதாரருக்கு ரூ. 50,000/– காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. இதோடு தனிநபர் காப்பீட்டுத்திட்டம் மற்றும் மீன்வளத்துறை மற்றும் மாவட்ட நிருவாகம் மூலம் இலவச வீடு கட்டும் திட்டமும் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் குடும்பத்தில் எவரேனும் இறந்தால் ஈமக்கிரியைக்கு ரூ.500/–ம் இலவசமாக வழங்கப்படுகிறது.

**மீன் வளர்ப்போர் பயிற்சி**

மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில், மத்திய, மாநில அரசுத்திட்டத்தின் கீழ் பல்வேறு மீன் வளர்ப்புத் தொழில் நுட்பங்களான தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தி, கூட்டின மீன் வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்புக் குளங்கள் கட்டுமானம்; செப்டம்பர் 2004–ஆம் மாதத்தில் 73 நபர்களுக்கு 3 நாட்கள் இலவசமாகப் பயிற்சி அளித்து, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.75/– பயிற்சி



படியும், போக்குவரத்துக் கட்டணமாக 3 நாட்களுக்கு ரூ. 20/–ம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிருவாகம் மூலம் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள 50 பண்ணைக் குட்டைகளில் (ஒவ்வொன்றும் 0.09 எக்டர்) பண்ணைக்குட்டை உரிமையாளர்கள் மீன் வளர்ப்பை மேற்கொள்ளச் செய்யும் வகையில் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

**மீன் வளர்ப்பு**

மீன் வளர்ப்பு இலாபகரமான தொழிலாகும். மீன் வளர்ப்பவரின் அனுபவம், இருப்பு செய்யப்படும் மீனினங்கள், தொழில்நுட்பத்தின் வகை மற்றும் மூலதனத்திற்கேற்ப அதிக மீன் உற்பத்தி செய்ய முடியும். மித தீவிரமான தொழில் நுட்பங்களைக் கையாண்டு எக்டரில் 2–3 டன் இலகுவாக உற்பத்தி காணலாம்.

மீன் வளர்ப்பைச் சுயவேலைவாய்ப்பாக மேற்கொள்ள குறைந்தபட்சம் 0.2 எக்டர் நீர்ப்பரப்பு தேவை. சுமார் 2 மீட்டர் ஆழத்திற்கு 6 மாதத்திற்குக் குறையாது நீர் நிறுத்தம் இருக்க வேண்டும். ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஊருணி/குளம் கண்மாய்களைக் குத்தகைக்கு எடுத்தும் மீன்வளர்ப்புச் செய்யலாம். வேளாண்மை நிலத்தின் ஒரு பகுதியில் மழை நீர் சேகரிப்புக்குக் குட்டை அமைத்து, மீன் வளர்த்துக் கூடுதல் பயன் பெறலாம்.

பண்ணைக் குட்டை அமைத்து மழை நீர் சேகரிப்பீர்! மீன்வளம் பெருக்குவீர்!

**– பொ. முத்தையா,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*விருதுநகர்.*

* * *

# வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாழ்க்கை மேம்பட மாற்றுப் பயிர்த்திட்டம்

காலநிலை மாற்றத்தாலும் பூமியில் நீர்மட்டம் குறைவதாலும் தமிழகத்தில் பொழியும் மழையின் அளவு பெரிதும் குறைந்துவிட்டது. வறட்சி மேலோங்கிவிட்டது. இதனால் முக்கியப் பயிர்களான நெல், உளுந்து, பயிர், கரும்பு சாகுபடிகள் செய்ய முடியாமல் கிராம விவசாயிகளின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சியான எரிபொருளுக்கும் பயன்படும் திட்டமாகவும் அமைந்துள்ளது. நெல், கரும்பு, வாழை போன்றவற்றைப் பயிர் செய்து போதிய பயன்பெற முடியாத சூழ்நிலையில் நீர்வளப் பற்றாக்குறையால் விவசாயத் தொழில் செய்யாமல் இருப்பதால் விவசாயக் குடும்பம் மட்டும் பாதிப்பதில்லை. நாட்டின் கிராமப் பொருளாதாரமே பாதிக்கப்படுகிறது.



சூழ்நிலையில் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமலும், வேறு தொழில் அறியாததாலும் பெரும் இன்னல்படுவதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வேளாண் விஞ்ஞானிகளுடன் கலந்து ஆலோசனை செய்து வேளாண்துறை மேம்பட பல புதியத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார்கள். அதில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாழ்க்கை மேம்பட, வறட்சியிலும் வளம் காணும் திட்டமாக “மாற்றுப் பயிர்த் திட்டம்” அறிமுகப்படுத்தப்பட்டது.

“மாற்றுப் பயிர்த் திட்டம்” விவசாயிகளுக்கு மட்டும் வளமான திட்டமாக இல்லாமல் உயிரி

இது பற்றி திருவள்ளுவர்,

“உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை”

– என்று கூறியுள்ளார்.

உழவுத்தொழில் புரிவோர், அத்தொழிலைத் தொடர்ந்து புரியாமல் கையைக் கட்டிக் கொண்டு இருந்து விட்டால், பந்த பாசங்களையெல்லாம் விட்டுவிட்டு வாழ்கின்ற துறவிகளுக்குக்கூட வாழ்வில்லாமல் போய்விடும் என்று விவசாயிகள் பற்றி வள்ளுவர் கூறியிருக்கின்றார்.

நீர்வளம் குறைவால் விவசாயிகள் விவசாயம் செய்யாமல், கைகட்டி நிற்பதை மாற்றி, வறட்சியிலும் பயிராகும் பயிர்களைப் பயிர் செய்ய வலியுறுத்துவது "மாற்றுப் பயிர்த் திட்டம்".

இம்மாற்றுப் பயிர்த் திட்டம் செயல்படுத்தப் படும்போது அதனுடன் உயிரி எரிபொருள் திட்டமும் வளர்ச்சி பெறுகிறது. இவ்விரண்டும் செயல்படும் போது, விவசாயிகளின் வாழ்க்கை மேன்மை பெறுகிறது. கிராமப் பொருளாதாரமும் மேம்படுகிறது.

மாற்றுப் பயிர்த் திட்டத்தின் கீழ் தற்பொழுது, சர்க்கரைச்சோளம், சர்க்கரைக்கிழங்கு மற்றும் காட்டாமணக்கு ஆகிய பயிர்கள் இடம் பெறுகின்றன.

சர்க்கரைச்சோளம், சர்க்கரைக்கிழங்கு பயிர் செய்வதற்குக் கரும்பு பயிருக்குத் தேவையான தண்ணீரின் அளவில் 40 சதவிகிதம்தான் தேவைப்படும். இவ்விரண்டும் குறுகிய காலப் பயிர்களாகும்.

சர்க்கரைச்சோளம், சர்க்கரைக்கிழங்கு இவை களிலிருந்து கிடைக்கும் "எத்தனால்" உயிரி எரிபொருளாகப் பயன்படுகிறது.

இதுபோலவே காட்டாமணக்கு வறட்சியைத் தாங்கி மிகக் குறைந்த அளவு மழையுள்ள இடங்களில் வளரக்கூடியது. இதுவும் உயிரி எரிபொருளாகப் பயன்படுகிறது.

உயிரி எரிபொருள் சிறப்பையும், பயன் பாட்டினையும் பொது மக்களிடையே பரவலாக்கும் வகையில், மாநில ஊரக வளர்ச்சித் துறை மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் திருச்சிராப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வை.பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் உயிரி எரிபொருள் கருத்தரங்கம் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், "வறண்டு கிடக்கும் பகுதிகளில் நீரின் தேவையின்றி சாதாரணமாக விளையக் கூடிய காட்டாமணக்குச் செடியைப் பயிரிட்டால் ஏக்கருக்குச் சாதாரணமாக ரூபாய் 5,000 முதல் ரூபாய் 7,000 வரை வருவாய் கிடைக்கும். அதாவது 30 ஆண்டுகள் வரை இந்தப் பயன் கிடைக்க வாய்ப்புண்டு. மேலும், எண்ணெய் போக மீதமுள்ள கழிவுகளிலிருந்து சோப்பு போன்ற பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியும்" என்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வை பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையில், "வேளாண்மையில் மாற்று ஏற்பாடுகளுக்குப் போகும் போது விவசாயிகளிடம் பெரும் தயக்கம் ஏற்படுகிறது. அந்த தயக்கத்தைப் போக்க ஆய்வாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. கா.அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையில்,

"இந்தியாவில் உள்ள எண்ணெய் வளம் அடுத்த 50 ஆண்டுகளில் தீர வாய்ப்புள்ளதால் மாற்று எண்ணெய் வளங்களைக் கண்டறிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எரிசக்தித் துறையில் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதன் மூலம் நாடு தன்னிறைவு பெறுவதோடு வல்லரசு நாடுகளில் ஒன்றாகவும் மாற முடியும். எண்ணெய் இறக்குமதியைத் தவிர்ப்பதன் மூலம் அந்நியச் செலாவணியைச் சேமித்து நாட்டின் பொருளாதாரத்தையும் தக்க வைக்க இயலும்.

பெட்ரோலியத் தேவையைப் பூர்த்தி செய்ய காட்டாமணக்குப் போன்ற உயிரி எரிபொருள் தாவரங்களைப் பயிரிடுவதன் மூலம் வேலை வாய்ப்பைப் பெருக்கி பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு சுற்றுச்சூழல் சீர்கேட்டையும் தவிர்க்கலாம். காட்டாமணக்குச் செடியைப் பயிரிடும் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய முடியுமா? என்ற சந்தேகம் தேவையில்லை. இரயில்வே மற்றும் தமிழக அரசு போக்குவரத்துக்கழகங்கள் இந்த உயிரி எரிபொருளைப் பயன்படுத்தத் தயாராக உள்ளன. அதே போல் இதற்கு பெரிய அளவிலான ஆலைகளும் தேவையில்லை" என்று கூறினார்.

கோயம்புத்தூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் திரு. வடிவேலு அவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில் "ஜெர்மனியில் எண்ணெய் வளம் குறைவதைக் கண்ட அந்நாட்டு அரசு தொலைநோக்குப் பார்வையோடு மாற்று ஏற்பாடுகளைக் கண்டறிந்ததன் காரணமாக எண்ணெய் வளத்தில் பிற நாடுகளை எதிர்பாராமல் தன்னிறைவு பெற்றுள்ளது" என்றார்.

கருத்தரங்கில் திட்ட அலுவலர் திரு. மனோகரசிங் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். வேளாண்மைத் துறை துணை இயக்குநர் திரு. தட்சிணாமூர்த்தி நன்றி கூற கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

**– ச. பாண்டியன்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருச்சிராப்பள்ளி*

★ ★ ★



# உலகெங்கும் தமிழோசை

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றான் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் நம் பாரதி. எல்லா வளமும் பெற்ற நம் தமிழின் பெருமையை உலக மக்கள் உணர வேண்டும் தொன்மை வாய்ந்த நம் மொழியின் வளத்தை நானிலமும் போற்றிப் புகழ வேண்டும், அதன் மூலம் தமிழர்தம் பண்பாடு, கலாச்சாரம் போன்றவை உலக மக்களால் உணரப்பட்டு நம் சமுதாயத்தின் அருமை, பெருமைகளை வையம் போற்றும்; இதன்கண் உலக அரங்கில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வீறுநடை போட்டு வலம் வருதல் உறுதி செய்யப்படும் என்ற அசைக்க முடியாத உயர்வுள்ளலின் வெளிப்பாடுதான் மேற்காணும் பாரதியின் தமிழ் முழக்கம்.

உலக அரங்கின் பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. ஆங்கிலம், சீனம், ஜப்பான், மலாய், சிங்களம், பாரசீகம், இந்தி, தமிழ் என பேசப்பட்டு வந்தாலும் உலக மக்களை ஒருங்கிணைக்கும் வண்ணம், படித்த மற்றும் வணிக–அறிவியல்–தொழில் நுட்ப–தகவல் சாதனத் தொடர்புகளுக்கு ஆங்கிலமே பெரிதும் பயன்பட்டு வருகின்றது. இன்றைய நாளில் உலகின் தொடர்பு மொழி என்ற நிலையில் ஆங்கில மொழியே முன்னிலை வகிக்கின்றது. ஆங்கிலப் புலமை இருந்தால் வணிகம், அறிவியல், தொழில்நுட்பம், தகவல்தொடர்பு போன்றவற்றில் பிரகாசிக்கப் பெரிதும் ஏதுவாக இருக்கும் என்ற நிலை உருவாகி, உறுதி செய்யப்பட்டுள்ள நிலை தற்போது நிகழ்வதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

உலகின் பல பாகங்களிலும் நம் தமிழர்கள் குடியேறியுள்ளனர். பல்வேறு துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். கடல் கடந்த வாணிகமும் வளர்ந்து வரும் தொழில்நுட்பமும், கற்ற கல்விக்கேற்ற வேலைவாய்ப்பும், வெளிநாட்டில் பணிபுரிந்தால் கௌரவத்தோடு உயர் ஊதியமும் கிட்டும் என்ற நடப்பும் தமிழ் மக்களை உலகெங்கும் பணிபுரியவும்– குடியேறவும் வைத்துள்ளது. மேலும் அறிவியல், மருத்துவம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் நம் தமிழர்கள் பெரிதும் முன்னணியில் இருந்து வருகின்றனர். அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளில் தகவல்நுட்பம் மற்றும் பொறியியல் துறையில் நம் தமிழர்கள் நல்லதொரு இடத்தில் உள்ளனர். அவ்வாறு இருந்தாலும் அவர்களின் தனித் திறமைகளை (SKILLS) உலக நாடுகளில் முழுதும் வெளிப்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. இது ஒப்புக்



கொள்ளக் கூடிய விஷயம் மட்டுமன்றி ஆராய்ந்து பார்க்கவும் தேவையான ஒன்றாகும். இதன் பல்வேறு நிலைகள் அவசியம் பரீசீலிக்கப்பட வேண்டியவைகள் தான் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இதனால் பல்வேறு நிலைகளில் உணர்ந்து ஆய்வு செய்யக்கூடிய சூழ்நிலை நம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டதன் விளைவு ஒரு புதிய நிலை உருவாகி உள்ளது. ஒரு புதிய பாதைக்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. ஆம், நம் தமிழர்கள் பல்வேறு துறைகளில் முன்னேறினாலும் அவர்தம் ஆங்கிலப் புலமை முதன்மையானதாக இல்லாததால் தான்

அவர்களால் பிரகாசிக்க முடியவில்லை என்ற நிலை உணரப்பட்டுள்ளது. இதனை மாற்றும் வண்ணம் முன்னேறியுள்ள தமிழன் முன்னணியில் பிரகாசிக்க வேண்டும் என்ற உயர்வுள்ளத்துடன், முதற்கட்டமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் பெரிதும் புகழ்பெற்ற இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளார்கள். அதன்கண் நம் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும் ஆங்கில மொழியில் தனித்திறன் பெறும் வண்ணம் தனிக்கவனம் செலுத்தப்படும். மேற்காணும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினர் இப்பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கட்கு ஆங்கில மொழிப்பயிற்சி அளிக்கவுள்ளார்கள். இம்மாணவர்களின் தனித்திறனை (பொறியியல் சார்ந்தது) உலக அரங்கில் முனைப்புடன் தெளிவுப்படுத்த– உலக இணைப்பு மொழியான ஆங்கிலத்தின் மூலம் உலகறியச் செய்ய – இந்த ஆங்கில மொழிக்கான தனிப்பயிற்சி ஏதுவாக மட்டுமின்றி – வரப்பிரசாதமாகவும் அமையக்கூடும் என்பதில் ஐயமில்லை.

இதேபோன்று இனி வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் ஏன் கல்லூரி, மேல்நிலை, உயர்நிலைப் பள்ளி அளவில் கூட பிரிட்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உதவியுடன் ஆங்கில மொழிப் பயிற்சிக்குத் தனிக்கவனம் அளிக்கப்படும் நிலை வரவுள்ளது என்பதனைச் சென்ற ஆசிரியர் தின விழாவன்று பேசிய தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு தெரிவித்துள்ளார்கள். தற்போது கூட முதலாம் வகுப்பு மாணவர்கட்கு ஆங்கிலம் அறிதல் என்ற நிலையில் ஆங்கிலப் பாட புத்தகம் வழங்கப்பட்டு அவர்களுக்கு போதனை செய்வதற்கானப் பயிற்சியை முதலாம் வகுப்பு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கட்கு ‘அனைவர்க்கும் கல்வி திட்டத்தின்’ (சர்வ சிக்ஷ அபியான்) கீழ் செயல்படும் வட்டார வளமையங்களில் அளிக்கப்பட்டுள்ளது. இது மேற்கண்ட ஆங்கிலமொழித் தனிப்பயிற்சிக்கான ஆரம்ப அடிப்படை என்றால் அது மிகையாகாது.

இந்த முயற்சியும், செயல்பாடும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இதனால் நம் தாய் மொழிக் கல்வியை புறந்தள்ளுகிறோம் என்று அர்த்தமல்ல. நம் தாய்மொழியின் பெருமையை உலக அரங்கில் ஒலிக்க வேண்டுமெனில் ஆங்கிலமொழியில் நாம் புலமை பெறுவது, தொடர்பு சாதனத்தில் இலகுவடைய ஒரு சிறந்த வழிகாட்டுதலாக அமையும். நம் மொழியின் பெருமையை மற்றவர் உணர வேண்டுமானால் மற்ற அந்த நபர்களும் உணரும் வண்ணம் அவர்தம் மொழியினை அல்லது அவரால் உணர்ந்து கொள்ளக்கூடிய பொதுத் தொடர்பு மொழியினை நாமும் தெரிந்து நம் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தால் தான் கேட்பவரும் தெளிவடைவார். சொல்பவரின் இலட்சியமும் ஈடேறும். இந்த உண்மையை உணராது – இடைப்பட்ட காலத்தில் நம் உணர்வுகள் மடைமாற்றம் செய்யப்பட்டதனால்– இந்தச் சரிவு நமக்கு ஏற்பட்டுள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை.

இனியும் நாம் வாளாவிருக்காது – தெளிவு பெற்று உலகத் தொடர்பு மொழி என்ற நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிற ஆங்கில மொழியிலும் புலமை பெறுவோம். சங்கம் வளர்த்த நம்தெள்ளு தமிழின் அருமை, பெருமைகளை – பண்பாட்டின் கூறுகளை – கலாச்சாரத்தின் பண்புகளை – வளத்தின் முதன்மையினை உலகம் உணரத் தொடர்ந்து செயலாற்றுவோம். உயர்தனிச் செம்மொழியாம் தமிழுக்கு நடுவணரசு வழங்கிய செம்மொழிக்கான அங்கீகாரமும் நமக்கு இந்நிலையில் பெரிதும் உதவும். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நம் தமிழில் மொழி பெயர்த்துக் கொணர்வோம். அறிவியல் பெருமைகளை–புதுமைகளை அன்னைத் தமிழில் கொண்டு வருவோம்.

தமிழின் பெருமைதனை எட்டுத் திக்கும் கொண்டு செல்வோம். அதே நேரத்தில் எட்டுத் திக்கின் அரிய செய்திகளைத் தமிழுக்கும் கொண்டு வருவோம். அப்போதுதான் முண்டாசுக் கவிஞன் பாரதி சொன்னபடி தேமதுரத் தமிழின் ஒலி உலகெங்கும் ஓங்கி ஒலிக்கும். ஆங்கிலத்தில் நல்ல புலமைபெற – தமிழக மக்களை முதன்மையாக்கத் தமிழக அரசும் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மேற்கொள்ளும் முயற்சிக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி முழு ஒத்துழைப்புத் தர முயல்வோம்.

உதட்டு அளவிலான பேச்சுகளைப் புறந்தள்ளி – யதார்த்த நிலையை உணர்ந்து – உள்ளத்து உணர்வுகளுக்கு இடமளிப்போம்.

பைய நாவையசைத்த பழந்தமிழின் பெருமையை வையம் உணர இந்தக் கன்னி முயற்சி அவசியம் தேவையான ஒன்றாகும். உலகை வெல்ல உலகம் உணர்வோம் – உலகம் உணர உயர்வுள்ளலுடன் முனைவோம். முயற்சி திருவினையாக்கும்.

**கா.இர.குப்புதாசு,**
தலைமை ஆசிரியர், பி.யூ.நடுநிலைப்பள்ளி,
முடையூர் – 604 206, செஞ்சி தாலுக்கா.



# இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனுக் கொடுத்திருந்த திருவண்ணாமலை, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம், தேனி, விருதுநகர், திருவள்ளூர், நீலகிரி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 18 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். மேலும், மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு வேண்டி கோரிக்கை விடுத்த சேலம், விழுப்புரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3 விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர்க்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்**

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. என். தனகோடி, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. கே.எம். தோப்பு நயினார், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே. மணி உடையார், திரு. என். கந்தசாமி மற்றும் திரு. வி. சுப்பிர மணியன், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி. ரத்தினசாமி நாடார், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். சண்முகம் மற்றும் திரு. ஏ. வியாகப்பன், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே.என். ராமச் சந்திரன், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே.எஸ். சவுண்டய்யா, திரு. ஏ. பெத்தண்ண ஆச்சாரி, திரு. ஏ.என். ரங்கசாமி மற்றும் திரு. எஸ். பொம்முசாமி, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். சண்முகம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜே.பி. சுப்பையா, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே.பி. நஞ்சுண்ட கவுடர், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சி. காரையூசுப் ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும், அதன் அடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாகக் கோரிக்கை மனுக்கள் கொடுத்தபோதும் தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தைத் தங்களுக்கு வழங்கி உதவிட வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

**விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம்**

மேலும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. டி. மேரி தேவதாஸ், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. பி. சகுந்தலா மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பல்பீனம்மாள் ஆகியோர், மறைந்த தங்களது கணவன்மார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர் எனவும், மாநில அரசு தங்களுக்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு அளித்திருந்தனர். இம்மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்படி மூன்று நபர்களுக்கும் மாநில அரசு, விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாயும், ஆக மொத்தம், 1,515 ரூபாய் மாதந்தோறும் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியமாக அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வூதியத்திற்கான அரசு ஆணை, 16.10.2004 அன்று, அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில், மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர் ஆகியோரிடம் நேரில் வழங்கப்பட்டன. ❖



# கதர் துணி ரகங்களுக்கு இவ்வாண்டு முழுதும் தள்ளுபடி

**— மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு**

கதர் துணி ரகங்களுக்கு இந்த ஆண்டு முழுவதும் தள்ளுபடி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது குறித்து தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை வருமாறு:

இந்தியாவின் இதயம் கிராமங்களில் வாழ்கிறது. அந்தக் கிராமங்களின் பொருளாதார மேம்பாடு, கிராமத் தொழில்களையே சார்ந்துள்ளது. கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்வை வளம் பெறச் செய்வதில் ஊரகத்தொழில்களே முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஊரகத் தொழில்களில் சிறப்பிடம் பெறுவது கதர் உற்பத்தித் திட்டம் ஆகும். இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அண்ணல் காந்தியடிகள் அரும்பாடுபட்டபோது, அவரது எண்ணத்தில் தோன்றிய இணையற்ற திட்டம்தான் கதர் உற்பத்தித் திட்டம். கதர் ஆடைகளைப் பயன்படுத்துவது ஊரகத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதாகும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் எண்ணற்ற ஏழை, எளிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, அவர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்ற ஆண்டு கதர் ஆடைகளை வாங்கிப் பயன்படுத்திய தமிழக மக்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், கதர் பட்டு ரகங்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும் மற்ற அனைத்து கதர் ரகங்களுக்கு 30 சதவிகிதம் தள்ளுபடியும் இவ்வாண்டு முழுவதும் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் இக்கதர் உற்பத்தித் திட்டத்தில் பெருமளவு பெண்களே ஈடுபட்டு வருகின்றனர். அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முன்னின்று சிறந்து விளங்க வேண்டும், மேம்பட்டுச் சிறக்க வேண்டும் என்னும், என்னுடைய எண்ணங்களைச் செயல்படுத்தும் விதமாக தமிழக மக்களாகிய நீங்கள் கதர்த் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட அதிக அளவில் கதர்த் துணிகளை வாங்கி, ஏழை, எளிய கிராமப்புற நெசவுத் தொழிலாளர்களை ஆதரித்து உதவிடுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

* * *

பயனுறு சமுதாயத்தை உருவாக்குவதற்கான அறிவியல் சார்ந்த நடைமுறையே மக்கள் தொடர்பு ஆகும். மனிதன் தன் மகிழ்ச்சிப் பெருக்கைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளப் பல்வேறு ஊடகங்களைக் கையாண்டான். தகவல்களைப் பகிர்ந்து கொள்ள நம்பகமானதும் முதன்மையானதுமான முறை யாதெனில் நேரடியாகச் செய்திகளை நாம் பிறருடன் பரிமாறிக் கொள்வதே ஆகும்.

உள்நாட்டில் மக்களிடையே செய்திகளைக் கூறவும், பிற்காலத்தில் அவை அழியாச் சின்னங்களாக இருந்து வரலாற்றின் சான்றுகளாக உருவெடுத்துப் பிற்காலச் சந்ததியினருக்கு எடுத்துக் கூறிடக் கல்வெட்டுகளைப் பொறித்தனர்.

பறையறைந்தும், கல்வெட்டுகளில் பொறித்தும், ஆடல் பாடல் மூலமாகவும் வளர்ச்சியடைந்த தகவல் பரிமாற்றம் அச்சுக்கலையின் தோற்றத்தால் தகவல் தொழில்நுட்பக் கலையாக வளரத் தொடங்கியது. அயல் நாட்டில் உருவான அச்சுக் கூடங்கள் தமிழ்நாட்டிலும்




தகவல்நுட்பக் குழவிகளாக தமிழ்ப் பத்திரிகைகளைத் தோன்றச் செய்து தமிழர்களிடையே வியக்கத்தக்க விழிப்புணர்ச்சியையும் விடுதலை வேட்கையையும் ஏற்படுத்தின. பின்னர் ஏற்பட்ட தந்திமுறை, தொலைபேசி போன்றவை தமிழர் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.

**தொலைபேசி**

தொலை தூரத்தில் இருப்பவர்களுடன் குரல் வழித் தொடர்பு மூலம் தகவல் பரிமாறிக் கொள்ள உதவும் கருவியே தொலைபேசி ஆகும்.

செம்பவழ வாய் திறந்து நீ
செப்புமொழி கேட்கில்
உம்பர் அமுதமெல்லாம் செவியகத்து
ஒடி யொழுகுதடி

என்று கவிமணி கூறும் இந்த மகிழ்ச்சியைக் கிரஹாம் பெல் என்ற அறிஞர் கண்டறிந்த தொலைபேசி என்ற கருவி, நாம் எங்கிருந்தாலும் கேட்டு உணரவும் நமக்கு வேண்டியவர்கள் கடல் கடந்து வசிப்பவராக இருந்தாலும் கூட அவர்கள் குரலைக் கேட்பதுடன் நாமும் செய்திகளைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுகிறது. அவ்வறிஞர் கண்டறிந்த அந்தக் கருவி தற்சமயம் கைக்கடக்கமான செல் தொலைபேசிகளாகவும் நின்ற இடத்தில், பயணிக்கும் நிலைகளில், எந்த நிலைகளிலும் தகவல்களைத் தெளிவாகவும், தகவல் பரிமாற்றத்துடன் செல்பேசிகளில் பேசுபவரின் உருவங்களைக் காணும் வகையிலும் நவீனத் தொலைபேசிகளின் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது.

**பேக்ஸிமிலி தகவல் தொடர்பு**

தாள்களில் உள்ள படங்கள், செய்திகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளின் உண்மை நகல்களைத் தொலை தூரத்திற்கு உடன் அனுப்பப் பயன்படும் கருவியே பேக்ஸிமிலி என்ற தகவல் தொடர்பு சாதனமாகும்.

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செய்திகளை அல்லது படங்களை அவற்றின் உண்மை நகல்களாகத் தாளில் மிக விரைந்து அனுப்புவதற்குப் பேக்ஸிமிலி தகவல் தொடர்பு சாதனம் பயன்படுகிறது. இது சுருக்கமாக பேக்ஸ் என அழைக்கப்படுகிறது. ஒரு தொலைபேசி இணைப்பு உதவியுடன் படங்களோ அல்லது தாளில் உள்ள தகவல்களோ மின்னணு உதவியால் ஸ்கேன் செய்யப்பட்டு மற்றொரு இடத்திற்கு அனுப்பப்படுகின்றன.

**தொலைக்காட்சி**

ஜான் பியர்டு என்ற அறிஞரால் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி என்ற கருவி வானொலிப் பெட்டிகளை ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒதுக்கித் தள்ளி, ஒவ்வொரு வீடுகளிலும் தகவல் தொடர்பிற்கான கருவியாகவும், (தகவலைப் பெறுவதற்கான கருவியாக மட்டும்) வலிமை மிக்க சாதனமாகவும், வசதியான சாதனமாகவும் விளங்குகிறது. ஒலி, ஒளி பரப்பு நிலையில் உயரிய இடம் பெற்று, ஒருவர் நம்மிடம் நேரடியாகத் தகவல்களைத் தருவது போன்ற உணர்வை ஏற்படுத்துவது இதன் சிறப்பாகும்.

தொலைக்காட்சி மூலம் கேளிக்கைக் காட்சிகள் மட்டுமல்லாமல் நாட்டு நடப்புகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் கல்வி அறிவு சம்பந்தமான விவரங்கள் நாட்டின் பட்டிதொட்டியிலுள்ள மக்களும் தெரிந்து கொள்ளும் வண்ணம் செயற்கைக் கோள்களின் உதவியுடன் உடனடியாக ஒளிபரப்பப்படுகின்றன.

**கணினி என்ற கணிப்பொறி**

சார்லஸ் பாப்பேஸ் என்ற ஓர் அறிஞரால் கணக்கிடக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் எந்திரம் பல அறிஞர்களின் அறிவால் விரிவாக்கப்பட்ட நவீனக் கற்பக விருட்சமாக மாறியுள்ளது. கணிப்பொறி இல்லாத துறையே இல்லை என்று கூறும் அளவிற்கு அதன் உபயோகம் மிக அதிக அளவில் உள்ளது.

முதலில் கணிப்பொறி கணிதப் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படும் வண்ணம் உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது எண்களைக் கொண்டு கணக்குகள் செய்யவும் எத்தகைய கருத்துகளையும், கதைகளையும், கவிதைகளையும், கட்டுரைகளையும், படங்களையும், ஓவியங்களையும் உருவாக்கவும் பாதுகாத்து வைக்கவும் கணிப்பொறி உதவுகின்றது.

பலசரக்குக் கடைகளில் உள்ள மளிகைச் சாமான்களின் இருப்பைக் கணக்கிடுவது முதல் சிக்கலான மருத்துவ அறுவை சிகிச்சைகளில் மருத்துவருக்கு உதவிடுவது வரை கணிப்பொறியின் பங்கு மகத்தான்து. நாட்டின் பாதுகாப்பில் இருந்து விண்வெளியில் ஆய்வு செய்வது வரை இதன் பங்கு அளவிடற்கரியது. வீடுகளில் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவது, செஸ் விளையாட்டைக் கற்றுத் தருவது போன்றவற்றிலும் இது பயன்படுகிறது. அதிக வேகமும் 100 சதவிகிதத் துல்லியத் தன்மையும் இதன் சிறப்பம்சமாகும்.

**இணையம்**

தொலைபேசியும் கணினியும் ஒன்றிணைந்து இணையம் என்றொரு புதிய தகவல் தொடர்பிற்கான உலகை உருவாக்கி உள்ளனர். இதில் ஒருவருக்கோ பலருக்கோ அஞ்சல்களை அனுப்ப மின்னஞ்சல் என்ற சேவை உள்ளது. பேக்ஸிமிலி கருவி போலச் செய்திகளையும் படங்களையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பலாம். பல இணையத்தள முகவரிகளிலிருந்து தகவல் சுரங்கங்களை இலவசமாகவோ சிறிய தொகையைக் கொடுத்தோ நாம் பெறலாம். பல ஆண்டுகள் உழைத்துத் தொகுக்கும் தகவல்களை நாம் சில நொடிகளில் இணையத்திலிருந்து இறக்கம் செய்து கொள்ளலாம். பத்திரிகைகள், மின்னணு இதழ் போன்றவற்றை நாம் படிக்கலாம். இவையனைத்தையும் வீட்டிலிருந்தபடியே அதாவது உட்கார்ந்த இடத்திலிருந்தே நாம் பெற இயலும் என்பதே இதன் சிறப்பாகும். கணினிக் கருத்தரங்குகளும் இணைய வணிகம் என்ற பொருட்கள் வாங்கும் சந்தையும் கூட இந்த இணையத்தில் உள. விரல் நுனியில் தகவல்கள் விரலசைவில் பரிமாற்றம் என உலகையே உள்ளங்கைக்குள் அடக்கி விடுகின்றன. மக்களுக்குப் பயன்படும் வகையில் அறிவியல் செய்திகள் அனைத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**மின் அஞ்சல்**

'நொடிதோறும் புதுமை சேர்' என்ற பாரதியின் பாடல் வரிகளை நனவாக்கும் பல புதுமைகள் தகவல் தொடர்பில் ஏற்பட்டு வருகின்றன. ஒரு கணினியின் ஒரு முனையிலிருந்து (டெர்மினல்) எண்மனத் தகவல்கள் மற்றொரு கணினிக்கு அனுப்பப்பட்டுத் தகவல் தொடர்பு நிகழ்கின்றது. உலகின் எந்த மூலைக்கும் இம்முறையின் செய்தியினையும் படங்களையும் நொடியில் அனுப்பலாம் என்பதே இம்முறையின் சிறப்பம்சமாகும். இணையத்தில் நமக்காக ஏறத்தாழ 4 மெகா பைட்டுகள் அளவில் இடமும் இலவச மின்னஞ்சல் சேவையையும் யாகூ, ஹாட்மெயில் போன்ற இணையத்தளங்கள் தந்து உதவுகின்றன.

**மின்னணு இதழ்**

மின்னணு முறையில் பல்வேறு ஆசிரியர்களின் கட்டுரைகளும் ஒரு மத்தியக் கணிப்பான் இணைத் தொடர்பில் செயல்முறைப்படுத்தப்பட்டுச் சேமித்து வைக்கப்படும். மின்னணு இதழ் முறையில் சந்தாதாரர்கள் ஒரு குறிப்பு மொழியின் உதவியுடன் இவ்வகையில் தொடர்பு கொண்டு தேவைப்படும் செய்திகளைத் தங்கள் தங்கள் கணினி மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அறிவியல் இதழ்களை வெளியிடுவதற் காக மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய முறை இதுவாகும். இதில் சந்தாதாரர் ஆவதற்குச் சிறுதொகை கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கும்.

**தொலைதூரக் கருத்தரங்கம்**

வீடியோ கான்பரன்சிங் என அழைக்கப்படும் பல நபர்களுடன் கணினி மற்றும் வீடியோ சாதனங்கள் மூலம் தகவலைப் பகிர்ந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது மின்னணுத் தொடர்பு ஆகும். இம்முறையில் ஒருவரோடு ஒருவர் பார்க்கவும் பேசவும் முடியும். தற்போது கணினியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இத்தகவல் தொடர்பு சாதனத்தின் மூலம் குறிப்பிட்ட நபர் செய்தியையும் கருத்துகளையும் மற்ற உறுப்பினர்களுக்கு அனுப்ப முடியும். பல்வேறு பகுதிகளில் வர்த்தகம் மேற்கொள்பவர்கள், ஆய்வு மாணவர்கள், அறிஞர்கள் தங்கள் கருத்துகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளப் பயனுடையதாக இருக்கின்றது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாவட்ட ஆட்சியர்களுடன் இம்முறையின் மூலம்தான் நேரடித் தொடர்பு கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்முறையின் மூலம் நேரம் மிச்சமாகிறது.

**முடிவுரை**

இன்றைய நவீனத் தகவல் தொடர்புச் சாதனங்கள் உலகமெங்கும் இருக்கும் நம் உறவினர்களுடன் எளிதாக உடனடியாகத் தொடர்பு கொண்டு மகிழ உதவுகின்றன. பரந்து விரிந்த உலகம் என்ற கருத்து தகவல் தொடர்பின் நவீன வசதிகளின் காரணமாகச் சுருங்கிய உலகம் (Global Village) என்று மாறிவிட்டது. கருத்துகள், பரிமாற்றங்கள் விஞ்ஞானப் பூர்வமான அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நிற்கின்றன. தகவல் புரட்சியின் விளைவாகக் கணிப்பொறித் துறையில் தமிழர்கள் மகத்தான சாதனைகளைச் செய்து வருகின்றார்கள். தமிழர்கள் உருவாக்கிய பலமென் பொருள்கள் உலகளாவிய ஆதரவைப் பெற்றுள்ளன.

**–முனைவர். தி. செல்வநாயகி**
"அறிவியல் தமிழ் ஊடகங்கள்" நூலிலிருந்து

*வெளியீடு :*
அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம்,
தஞ்சாவூர்.




தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518